egistered as a Newspaper in Sri Lanka

# அல்ஹஸனாத்

الحسنات اسلامية - شهرية تصدرها الجماعة الاسلامية السيلانية

ஸபர் – ரபீயுல அவ்வல் 1403 ✱ டிஸம்பர் - ஜனவரி 1983


## சிரத் மலர்

சிறுவர்களும் ஓதக்கூடிய தெளிவான அச்சுப்பதிவும், பெரிய எழுத்தும் உள்ள

## அல் குர்ஆன்

விற்பனைக்குண்டு, வியாபாரிகளுக்கு

கழிவுண்டு,

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

Ceylon 'ama' ath-e – Islami
204/1 Dematagoda Road, Colombo 9.


''அல்லாஹ்வையும், இறுதி நாளையும் உறுதியாக நம்புகிறவர்களுக்குரிய அழகிய முன்மாதிரி, நிச்சயமாக அல்லாஹ்வுடைய தூதரிடமே இருக்கின்றது.''

(அல் குர்ஆன் 33 :21)

''(நம்முடைய) தூதர் உங்களுக்குக் கொடுத்ததை நீங்கள் (மனமொப்பி) எடுத்துக் கொள்ளுங்கள். அவர் எதனை உங்களுக்குத் தடுத்துக் கொண்டாரோ, அதிலிருந்து நீங்கள் விலகிக் கொள்ளுங்கள்.''

(அல் குர்ஆன் 59: 7)

''உங்களுக்கு மத்தியில் நான் இரண்டு அம்சங்களை விட்டுச் செல்கிறேன். அவ்விரண்டையும் நீங்கள் பின்பற்றி நடந்தால் ஒரு போதும் வழிகேட்டிலே விழமாட்டீர்கள்.

ஒன்று; அல்லாஹ்வின் திருவேதம்- அல்குர்ஆன் மற்றது; நான் காட்டித் தந்துள்ள வழிமுறைகள்: சுன்னா''

(முஅத்தா - மாலிக்)

A.H.M. SADIKEEN

மலர் 13 இதழ்: 7, 8 விலை ரூபாய் 1/50

இஸ்லாமிய இலட்சியக் குரல்

## அல்ஹஸனாத்
### ஆசிரியர் கருத்து

## ஒரு சமுதாயத்தை நிறுவிய தலைவர்!

முஹம்மத் (ஸல்) அவர்கள் முழு உலகத்துக்கும் முன் மாதிரியாக வாழ்ந்தவர்கள். தமது தனி வாழ்விலும் பொது வாழ்விலும் அவர்கள் கடைப்பிடித்த தூயவாழ்வு வரலாற்றில் தனியிடம் பெற்றுத் திகழ்கின்றது.

அவர்கள் மக்கள் முன் சமர்ப்பித்த கொள்கை இஸ்லாம். அதன் வழியில் தம்மிடம் இருந்த அனைத்துக்குணப் பண்பாடுகளையும் கொண்ட தன்னிகரற்றதொரு சமுதாயத்தையே நிறுவினார்கள்.

நபி (ஸல்) அவர்கள் தன்னை ஏற்றவர்கள் இடத்தில் மட்டுமல்ல, எதிரிகளிடமும் அன்பு செலுத்தினார்கள்; அவர்களுக்குக் கஷ்டங்கள் வந்தபோது உதவினார்கள்; பிரச்சினைகள் ஏற்பட்டபோது தீர்த்து வைத்தார்கள்; அவர்களது அமானங்களைப் பாதுகாத்துக் கொடுத்தார்கள்; அவர்களை நல்லவர்களாக்க பாடுபட்டார்கள்.

எனினும், தாம் கொண்டுவந்த கொள்கையை எதிரிகளுடனோ எதிரிகளின் கொள்கைகளுடனோ ஒரு நிமிடத்திற்கேனும் சமரசம் செய்துகொள்ள முற்படவில்லை நபியவர்கள்.

அதனால் எண்ணற்ற கஷ்டங்கள் எதிரிகளால் தரப்பட்டன; துன்பங்கள் தொடர் சங்கிலிபோல் தொடர்ந்தன; யுத்தங்கள் கூட நடைபெற்றன. இறுதியில் நபியவர்களின் கொள்கை - இஸ்லாம் வெற்றி பெற்றது.

அவர்களைப் புகழும் நாம், இந்த உண்மைகளை மறந்து விடக் கூடாது. ஏனைய கொள்கைகளில் இருந்து விடுபட்டு, அவர்கள் அமைத்தது போன்றதொரு தூய சமுதாயத்தை நாமும் அமைக்கப் பாடுபடவில்லையாயின், வெறும் புகழுரைகளால் பெரிய பயன்கள் எதுவும் ஏற்படப் போவதில்லை.

சிந்தித்துச் செயற்பட்டால் சிறப்பான ஈருலக வாழ்வும் பெறலாம்.

## ஜமாஅத்திலிருந்து விலகினர்!

இலங்கை ஜமாஅதே இஸ்லாமியின் முன்னாள் அமீர்களுள் ஒருவராக இருந்த அல்-ஹாஜ் பீ. எம். முஹம்மத் யூசுஃப் அவர்கள் ஜமாஅத்தின் கருத்துக்கள் சிலவற்றுடன் தனக்கு உடன்பட முடியாது என்ற காரணத்தால் தனது அங்கத்துவத்தை இராஜினாமாச் செய்வதாகக் கடிதம் எழுதியிருந்தார்.

கடந்த 18-12-82இல் நடைபெற்ற இ. ஜ. இ. மஜ்லிஸே சூரா அவரது இராஜினாமாவை ஆராய்ந்த பின் அதனை ஏற்றுக்கொள்வதாக ஏகமனதாக முடிவு செய்தது என ஜமாஅத்தின் பொதுச் செயலாளர் சகோதரர் எம். ஐ. ஷரிப் அறிவித்துள்ளார்.

இந்த முடிவை அல்ஹாஜ் முஹம்மத்யூசுஃப் அவர்களுக்குக் கடிதம் மூலம் அறிவித்து விட்டதாகவும், இதன்படி 18-12-82 முதல் அவர்கள் இ. ஜ. இ.யின் அங்கத்துவத்தை இழந்துவிட்டார்கள் என்றும்பொதுச் செயலாளர் அவர்கள் எமக்கெழுதிய கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

— ஆசிரியர்


## நளீமிய்யா இஸ்லாமிய வெளியீட்டுப் பணியகத்தின் புதிய வெளியீடுகள்

தரத்திலும் அமைப்பிலும் தன்னிகரற்றவை!
அமோகமாக விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன!!

| | | விலை | தபாற்செலவு |
|---|---|---|---|
| அல்குர்ஆனின் வரலாறும் வாழ்வு நெறியும் (கலாநிதி எம். ஏ. எம். சுக்ரி) | ரூபா; | 15-00 | 1-00 |
| அல்-குர்ஆனும் நவீன வானவியலும் (ஸீ. எம். ஏ. அமீன்) | ,, | 15-00 | 1-00 |
| தஃவாவும் நவ யுகத்தின் சவாலும் (ஸெய்யித் அபுல் ஹஸன் அலி நத்வி) | ,, | 10-00 | 1-00 |
| அண்ணலாரின் அழகிய வழிமுறை (முஹம்மத் அல்-கஸ்ஸாலி) | ,, | 3- 00 | -50 |
| இறைதூதரும் இல்லற வாழ்வும் (முஹம்மத் அல்-கஸ்ஸாலி) | ,, | 3-00 | -50 |
| Mankind in Peril (Syed Abul Hassan Ali Nadvi) | ,, | 15-00 | 1-00 |

* ஆறு நூல்களுக்குமான தபால் செலவு ரூபா; 4-00. * மொத்தமாக வாங்குவோருக்கு கழிவு உண்டு.
* காசுக் கட்டளைகளை தபாற் கட்டளைகளை The Manager, Naleemiah Bureau of Islamic Publications, என்றும், பணம் பெறும் கந்தோர், Baruwala எனவும் குறிப்பிடவும்.

எமது முத்திங்கள் வெளியீடாக "இஸ்லாமிய சிந்தனை" வெளிவருகிறது.

தனிப் பிரதி. ரூபா: 4-00 வருட சந்தா ரூபா: 18-00

தொடர்பு கொள்க. The Manager, Naleemiah Bureau of Islamic Publications
P. O. BOX- 1, Beruwala.

# திருமணம்

அரபியில்: பேராசிரியர் ஸெய்யித் ஸாபிக்

அல்லாஹுதஆலா தனது படைப்புத் திட்டத்திற்காக ஏற்படுத்தியுள்ள நியதிகளில் பாலியல் உறவும் ஒன்ருகும். இந்நியதி மனிதஇனம், விலங்கினம், தாவரவினம் ஆகிய அனைத்திற்கும் பொதுவானது.

''ஒவ்வொரு பொருளையும் சோடி சோடியாக நாம் படைத்திருக்கிறோம்''

(அல் குர்ஆன் 51:49)

''பூமி முளைப்பிக்கின்றவற்றையும் அவர்கள் (மனிதர்கள்) தம்மையும் அவர்களை அறியாதவற்றையும்-அனைத்தையும் சோடி சோடியாகப் படைத்த இறைவன் தூயவன்''

(அல் குர்ஆன் 36;36)

இனப் பெருக்கத்திற்கும் உயிரினங்கள் நிலைப்பதற்கும் அல்லாஹுதஆலா ஏற்படுத்தியுள்ள முறையும் இதுவே. இந்நோக்கம் நிறைவேறுவதற்கு ஏற்றவாறு ஆண், பெண் இரு இனங்களையும் அவன் படைத்துள்ளான்.

''மனிதர்களே! நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆணிலிருந்தும் ஒரு பெண்ணிலிருந்தும் படைத்திருக்கிறோம்''

(அல் குர்ஆன் 49;13)

''மனிதர்களே! ஓர் ஆத்மாவிலிருந்து உங்களைப் படைத்தவனும்அதிலிருந்து அதன் சோடியைப் படைத்தவனும் அவ்விருவரிலுமிருந்து அனேக ஆண்களையும்,பெண்களையும் பல்கிப் பெருகச் செய்தவனுமாகிய உங்கள் இறைவனை அஞ்சி நடவுங்கள்''

(அல் குர் ஆன் 4:1)

ஏனைய படைப்பினங்களைப் போன்று மனிதன் எவ்வித கட்டுப்பாடுமின்றி தனது இயல்புணர்ச்சிகளை திருப்திப் படுத்திக் கொள்வதையே உடலுறவு கொள்வதையோ இறைவன் விரும்பவில்லை. மனிதனது அந்தஸ்தையும், கௌரவத்தையும் பாதுகாக்கத்தக்க வகையில் இவ்வுணர்ச்சியைத் திருப்திப்படுத்திக் கொள்வதற்கான ஒழுங்குமுறையை இறைவன் வகுத்துள்ளான். ஓர் ஆண் ஒரு பெண்ணோடு கொள்ளும் உறவு, அவ்விருவரின் சம்மதத்தைப் பெறுவதாகவும் அவ்விருவரும் ஒருவரை ஒருவர் கணவன் - மனைவியாகஏற்று, அதனை சாட்சிகள் அறிந்த நிலையிலும் மட்டுமே ஏற்பட வேண்டும். இதுவே இறைவன் வகுத்துள்ள ஒழுங்கு முறையாகும். இவ்வொழுங்கு முறை, பாலியலுணர்ச்சியை சரியான வழியில் திருப்திப் படுத்திக் கொள்ளவும் குழந்தைகள் நாதியற்றவர்களாக ஆகாதிருக்கவும் ஒரு பெண் கண்டவர்களின் காதல் கிழத்தியாகாதிருக்கவும் வழிசெய்கிறது. இவ்வொழுங்குமுறையின் குடும்பம் எனும் விதை தாய்மை அன்பிலும், தந்தையின் அரவணைப்பிலும் விருட்சமாக வளர்ந்து இனிய கனிகளைத் தரத் துணைபுரிகிறது. இத்தகைய சிறந்த பயன்கள் நல்கும் இம்முறையினை இறைவன் அங்கீகரித்து இஸ்லாமிய முறையாக்கி மற்றெல்லா முறைகளையும் சட்டவிரோதமானவையாக ஆக்கியுள்ளான்.

### சட்டவிரோதமான உறவுகள்:

இஸ்லாத்திற்கு முந்திய ஜாஹிலிய்யா காலத்தில் காணப்பட்ட பின்வரும் ஆண் - பெண் உறவுமுறைகளை இஸ்லாம் தடை செய்தது!

### 2. 1. வைப்பாட்டிகள்:

ஒளிவு மறைவாக நடக்கும் உடலுறவுகளை அக்கால அரேபியர் பொருட்படுத்தவில்லை. யாரும் அதனை அறிந்துகொண்டால் அதையே அவமானமாகக் கருதினர். ஆதலால் பெண்களை இரகசியமாக வைப்பாட்டிகளாக வைத்திருக்கும் வழக்கம் நிலவி வந்தது.

''விசுவாசங் கொண்ட கற்புடைய பெண்களையும் உங்களுக்கு முன் வேதம் கொடுக்கப்பட்டவர்களில் கற்புடைய பெண்களையும் விபசாரிகளாகவோ வைப்பாட்டிகளாகவோ கொள்ளாமல் அவர்களுக்குரிய மஹர்களையும் கொடுத்து (திருமணம் செய்து) கொள்வது (உங்களுக்கு ஆகும்)''.

(அல்குர்ஆன் 5:5)

### 2. 2. மாற்றிக்கொள்ளல்:

''உனது மனைவியை எனக்குத்தா; நான் உனக்கு எனது மனைவியையும் தந்து வேறு பொருளும் தருகிறேன்'' என்ற ஒப்பந்தத்தின்மீது இருவர் தம் மனைவியரை மாற்றிக் கொள்ளும் முறையும் நிலவியது''[1]

### 2. 3. தற்காலத் திருமண முறை:

ஜாஹிலிய்யா காலத்தில் ஆண் - பெண் உடலுறவு நான்கு வகையான ஏற்பாடுகளின் கீழ் நிகழ்ந்ததுஎன்று ஆயிஷா (ரழி) அவர்கள் அறிவித்திருக்கிருர்கள்.

தற்காலத்திற் போன்று பெண்ணின் தந்தை அல்லது பாதுகாவலரிடம் பெண்ணைத் தனக்குத் திருமணஞ்செய்து தருமாறு கேட்டு, அவளுக்குரிய மஹரையும் கொடுத்து திருமணஞ்செய்து கொள்வது ஒருவகை.

### 2. 4. சிறந்த குழந்தையைப் பெறுவதற்காக மாற்ருரோடு உறவு கொள்ளல்:

ஒருவன், தனது மனைவி ஒரு சிறந்த குழந்தைக்குத் தாயாக வேண்டும் என்ற நோக்கத்தோடு அவன் விரும்பிய ஒருவரோடு உடலுறவு கொள்ள மனைவியைத் தூண்டும் வழக்கமிருந்தது. அதாவது, மனைவிக்கு மாதவிடாய் ஏற்பட்டு சுத்தமானதும் அவன் விரும்பும் நபருடன் உடலுறவு கொள்ளுமாறு மனைவியைக்கேட்பான். குறித்த நபரோடு கொண்ட உறவு காரணமாக கருத்தரித்து விட்டது என்பது உறுதியாகும் வரை கணவன் அவளோடு உறவு கொள்வதைத் தவிர்த்துக் கொள்வான். தனது மனைவி ஒரு சிறந்த குழந்தையைப் பெற வேண்டுமென்பதே இவ்வேற்பாட்டின் நோக்கமாகும்.

### 2. 5. ஒருபெண் பல ஆடவருடன் உடலுறவு கொள்ளல்:

பத்துப் பேருக்குட்பட்ட ஒரு தொகை ஆண்கள் கூடி ஒரு பெண்ணோடு உறவுகொள்ளல். இதனுல் அப்பெண் கருவுற்று குழந்தையைப்பெற்றுச் சில நாட்கள் கழிந்த பின், தன்னோடு உறவுகொண்ட அனைவரையும் அழைப்பாள். அவர்கள் எல்லோரும் கட்டாயமாக வர வேண்டும் என்பது நியதி. அவர்கள் வந்ததும், ''நடந்தது உங்கள் எல்லோருக்கும் தெரியும். இப்பொழுது குழந்தை கிடைத்திருக்கிறது'' என்று கூறி தான் விரும்பிய ஒருவனைச்

(26ஆம் பக்கம் பக்கம்)

முஸ்லிம் உலகம் எதிர்நோக்கும் பிரச்சினைகள்-4

# கம்யூனிஸம் ஒரு குஃப்ரிய்யத் !

சென்றகட்டுரைகள் மூலம், சர்வதேசமுதலாளித்துவஏகாதிபத்தியம்-குறிப்பாக அமெரிக்கா, இஸ்ரவேல் ஊடாக முஸ்லிம் உலகுக்குத் தந்துவரும் இன்னல்கள் பற்றி ஆராய்ந்தோம்.

இனி முஸ்லிம் உலகின் மற்றொரு எதிரணியான கம்யூனிஸ நாடுகளிலிருந்து-குறிப்பாக சோவியத் ரஷ்யாவிலிருந்து முஸ்லிம் உலகுக்கு ஏற்பட்டுள்ள ஏற்படவுள்ளஆபத்துக்கள் என்ன என்பதை இக்கட்டுரைமூலம் ஆராய்வோம்.

முஸ்லிம் உலகம் கம்யூனிஸ நாடுகளிலிருந்து இரண்டு விதமான அச்சுறுத்தல்களை எதிர்நோக்கி நிற்கின்றது.

(1) கம்யூனிஸக் கொள்கையைப் பரப்பும் முயற்சிகள்.

(2) இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள்.

இந்த இரண்டு முறைகளையும் பயன்படுத்தி முழு முஸ்லிம் உலகையும் ஆக்கிரமிக்கும் முயற்சிகளில் ரஷ்யாஉட்பட ஏனைய கம்யூனிஸ நாடுகள் நீண்ட காலமாக முயன்று வருகின்றன. ரஷ்யா அரபு உலகுக்கும் வளர்முக நாடுகளுக்கும் பொருளாதார இராணுவ உதவிகளும், யுத்தப் பயிற்சிகளும் அளிப்பதாகக் கூறிக்கொண்டு அந்நாட்டு அரசியல் அதிகாரங்களைக் கைப்பற்ற எடுத்த முயற்சிகள் பற்றிய சான்றுகள் பல இருக்கின்றன.

எகிப்தை எடுத்துக்கொள்வோம். அது யூத இஸ்ரவேலுடன் பொருதிக்கொண்டிருந்தபோது அதன் பாதுகாப்பிற்கு துணை நிற்பதாக ஒப்பந்தம் செய்துகொண்ட ரஷ்யா தனது ஆயிரக்கணக்கான இராணுவ ஆலோசகர்களையும், கம்யூனிஸ ஒற்றர்களையும் அங்கு அனுப்பிவைத்தது. அதன்படி அவர்கள் எகிப்தையும், எகிப்திய அரசையும் பாதுகாத்து இருக்க வேண்டும். ஆனால், அவர்கள் கம்யூனிஸக் கருத்துக்களை பரப்ப முனைந்ததுடன்: ஆட்சியையும் கவிழ்க்க சதி செய்தார்கள். இக்காரணத்துக்காக அன்றைய ஜனாதிபதி அன்வர் சதாத் இவர்கள் அனைவரையும் 24 மணித்தியாலங்களுக்குள் எகிப்தை விட்டு வெளியேறும்படி உத்தரவு பிறப்பித்தார்.

இதுபோன்று இன்று எதியோப்பியா, சோமாலியா, அங்கோலா, பாலஸ்தீனம், ஈராக், சிரியா, லிபியா,தென் ஏமன் போன்ற பல ஆபிரிக்க, அரபு நாடுகள் ரஷ்யாவின் கொள்கை ரீதியானதும், இராணுவ ரீதியானதுமான ஆக்கிரமிப்புக்கு இலக்காகியுள்ளன.

இந்தபே(ா)ராபத்திலிருந்து முழு முஸ்லிம் உலகமும் தன்னைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டுமாயின், முஸ்லிம் உம்மத்தின் ஒவ்வொரு உறுப்பினனும் இது பற்றி ஆழமாக அறிந்திருத்தல் கட்டாயமாகும். அந்த அறிவு இருந்தால்தான் தன்னைபாதுகாத்துக் கொள்ளவும் வழி காண முடியும். இல்லாவிடத்து ஏற்கனவே கம்யூனிஸ அணிக்குள் மீளமுடியாதவாறு அகப்பட்டுக்கொண்ட நாடுகளின் நிலையை ஏனைய நாடுகளும் அடைந்து விடலாம்.

எனவே, முதலில் கொள்கைரீதியான ஆபத்தை சற்று ஆராய்வோம்.

### மத உரிமை இல்லை

இன்று சோவியத் ரஷ்யாவின் இரும்புப் பிடிக்குள் ஒன்பது முஸ்லிம் மாகாணங்கள் இருக்கின்றன. அவை உஸ்பெகிஸ்தான், துர்க்மெனிஸ்தான், அஸர் பைஜான், கஸாகிஸ்தான், தாஜிகிஸ்தான், ஆர்மேனியா, ஜோர்ஜியா, கார்கேஸியா, உக்ரேனியா என்பவையாகும். இம்மாகாணங்களில்வாழும் முஸ்லிம்கள் கம்யூனிஸ ஆட்சியாளர்களால் பலவிதத் தொல்லைகளுக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றனர். அவர்களது புனிதத்தலங்கள், பள்ளிவாயல்கள் என்பன நாசமாக்கப்பட்டும், சுவீகரிக்கப்பட்டும் உள்ளன. பொதுவாக அவர்களது சமய உரிமைகள் முற்றாக மறுக்கப்பட்டுள்ளன. இவற்றுக்குக் காரணம் ரஷ்யா மதங்கள் பற்றி கொண்டுள்ள கருத்தாகும்.

உண்மையில், கம்யூனிஸம் எந்தவொரு மதத்தையும் ஏற்றுக்கொள்வதில்லை. மாறாக, எல்லா மதங்களையும் முற்றாக நிராகரிக்கின்றது. எனினும், ''நாம் மதங்களுக்கு எதிரானவர்களல்ல!'' என்பதைக் கூறி உலகை ஏமாற்றுவதற்கென்று சில சம்பிரதாய சடங்குகள், கிரியைகள் செய்துகொள்வதற்கு இடமளிக்கப்பட்டுள்ளது.அதுவும் குறிப்பிட்ட சில வரையறைகளுக்கு உட்பட்டே செய்ய வேண்டும் என்பது கட்டளை.

சோவியத் ரஷ்யாவுக்கு சென்று வரும் சிலர் இதனைப் பார்த்துவிட்டு அங்கு ''மதச் சுதந்திரம் உண்டு!'' என பத்திரிகைகளில் அறிக்கை விடுவதைக் காண்கின்றோம். இது பற்றி நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை. உண்மையில் மார்க்கம் என்ற வகையில் அத்தகையவர்கள் அறிந்து வைத்திருப்பது அவ்வளவுதான்.

ஆனால், நாம் சிந்தித்துப் பார்க்கக் கடமைப்பட்டுள்ளோம். சில கிரியைகளும், சம்பிரதாய சடங்குகளும் தான் மார்க்கமா? இவற்றை செய்துகொள்ள இடம் கிடைத்துவிட்டால் மார்க்கத்துக்கு இஸ்லாத்துக்கு பூரண சுதந்திரம் கிடைத்து விட்டது என்பது பொருளா? இது முற்றிலும் தவறான கருத்தாகும்.

கவியரசர் அல்லாமா இக்பால் (ரஹ்) அவர்கள், ''இந்தியத் துணைக் கண்டத்தில்

**இமாதுத்தீன்**

தொழுகைக்கு கிடைத்துள்ள இடத்தை வைத்து, இஸ்லாம் பூரணப் பொலிவுடன் சுதந்திரமாக செயல்படுகிறது என கருதுகிறான் அறிவீனன்'' என்று பாடியுள்ளார்.

இதன் மூலம் இஸ்லாம் சில குறுகிய கிரியைகளையும்,சடங்குகளையும் கொண்ட மதமல்ல என்பதை விளங்கிக் கொள்ள முடியும். இஸ்லாம் விரிவானதொரு வாழ்க்கை நெறி. மனித வாழ்வின் எல்லாத் துறைகளுக்கும் ஒவ்வொரு அம்சத்துக்கும் அது வழிகாட்டுகின்றது.

எனவே, இதனைக் ஏற்றுக் கொண்ட முஸ்லிம்கள் தமது தனி வாழ்விலும், கூட்டு வாழ்விலும் அரசியல், பொருளாதார, சமூக, குடும்ப, கல்வி, கலாச்சார ஆன்மிகத் துறைகள் சார்ந்த அனைத்து அம்சங்களிலும் இஸ்லாமிய நெறிகளுக்கமைய செயல்படும் பூரண சுதந்திரம் இருந்தாலே ''இஸ்லாத்துக்கு சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது'' என்ற கருத்து பொருத்தமாக இருக்கும்.

(25-ம் பக்கம் பார்க்க)

## இஸ்லாமிய பணி: அன்றும், இன்றும்—1

# இஸ்லாத்தின் தூதை எத்திவைப்பது எங்ஙனம்?

— கலாநிதி முஹம்மத் நாஸிம் —

> கென்யா நாட்டு ''அல் இஸ்லாம்'' பத்திரிகையில் ஆங்கிலத்தில் வெளியான இக்கட்டுரையை சிங்கப்பூர் சஞ்சிகையான ''ஸுவாரா இஸ்லாம்'' அதே மொழியில் மறுபிரசுரம் செய்தது. ''அல் ஹஸனாத்'' வாசகர்களின் நன்மை கருதி அதனைத் தமிழில் தருகிறோம்.
>
> தமிழாக்கம்: —டாக்டர் ஏ. ஆர். ஏ. ஹபீஸ்

இன்றைய உலகில் இஸ்லாத்தின் தூதை மக்களுக்கு எத்தி வைப்பது ஒரு மார்க்கக் கடமை மட்டுமல்ல, சமூக கடமைப்பாடுமாகும், அல்லாஹ்வின் சன்மார்க்கத்தை உரிய முறையில் மனித குலத்திற்கு எடுத்துச் செ(ா)ல்லும் விஷயத்தில் அவனுக்குப் பதிலளிக்க வேண்டிய பாரிய பொறுப்பும் நமக்குண்டு.

இஸ்லாமியப் பிரசாரப் பணியில் ஈடுபடுபவர்கள் ஒன்றை மனதிலிருத்திக் கொள்ளுங்கள். அதாவது, ஒரு கொள்கையைப்போதிக்க முன்வருபவர், அதன் நோக்கம், வரையறை, மனிதனது தேவைக்கும் அதற்குமுள்ள தொடர்பு ஆகியவற்றைப் போதியளவு அறிந்திருத்தல் அவசியமாகும். மக்களது ஆர்வத்தையும், அச்சத்தையும் அனுசரித்து அவர்களது மனதில் ஒரு தனிப்பட்ட விருப்பத்தைத் தோற்றுவிக்கத் தவறும் எந்த ஒரு கருத்தும் ஒருபோதும் ஓர் உலக சக்தியாக உருப்பெற முடியாது.

ஆகையால் முழு மனிதகுலத்திற்கும் பொதுவான ஒரு கொள்கையானது மனித மனங்களை ஆட்கொண்டிருக்கும் சிக்கல்களோடும், பிரச்சினைகளோடும் பின்னிப் பிணைந்திருக்க வேண்டும். 'தான்', 'தனக்கு' என்ற (சுய) நல உணர்வின் காரணமாக மனிதன் ஆதாயத்தைக் கண்டு அக மகிழ்வதும், நஷ்டத்தைக் கண்டு நடுநடுங்குவதும் நாமறிந்தவையே.

இனி, எங்களது அணுகு முறையைப் பொறுத்தவரை அறிவு, அறிமுகம் என்பன அறிந்தவரிலிருந்து அறியாதவருக்கு, தெரிந்தவரிலிருந்து தெரியாதவருக்கு, அருகிலுள்ளவரிலிருந்து அப்பாலுள்ளவருக்கு என்றவாருக வளர்ச்சியுறுவதை நாம் கவனத்திற் கொள்வோமாக.

உடனடித் தேவையை உதறித் தள்ளிவிட்டு, எதிர்காலத் தேவைக்கு முதன்மை அளிக்கும் அணுகுமுறையை மக்கள் ஏற்றுக் கொள்வதாய் இல்லை.

சுருங்கச் சொன்னுல், மனித குலத்திற்குப் பொதுவான கொள்கையானது, ஒவ்வொரு தனிநபரினதும் எதிர்பார்ப்புகளுக்கும் சஞ்சலங்களுக்கும் தீர்வுக ளைக்கூறுமதாயிருக்க வேண்டும். அது அறிந்தஒருவரிலிருந்து ஆரம்பித்து, அதனைப் பற்றி அவ்வளவாக அறியாத சராசரி அவதானிவரை கொண்டு செல்லப்பட வேண்டும்.

''வாழ்க்கை நெறி (தீன்) உளப்பூர்வமான உபதேசம்'' என நபி மணி நவின்றனர். மானிட உளவியல் பற்றிய எங்களது அறிவு, அனுபவம் என்பவற்றிலிருந்து நாம் தெரிந்துகொள்வது என்னவென்ருல், உரைப்பவரின் உண்மையான உளப்பாண்மையில் கேட்பவருக்கு நம்பிக்கை பிறக்க வேண்டும். இது பொதுவாக தனிநபர் தொடர்பு மூலமாகவும் அனுபவம் வாயிலாகவுமே கைக்கூடும். ஒரு மனிதனைப் பற்றி நாம் எந்த அளவு அறிந்து கொள்கிறோமோ அந்த அளவு அவரைப் பற்றிப் புரிந்துகொள்கிறோம். அத்துடன், அவர் ஆளுமையும், நன்னடத்தையும் உள்ளவராயின் அவரை நாம் உவந்தேற்றுக் கொள்கிறோம். மனிதன் இயல்பிலேயே நன்மையை நாடுபவன் அல்லவா?

இஸ்லாத்தை மக்களுக்கு எத்திவைக்கும் விஷயத்தில் எமது வெற்றியானது பின்வரும் காரணிகளில் தங்கியுள்ளது:-

(அ) எங்களது நடத்தையின் மூலமாக நாம் ஏற்படுத்தும் நல்லமனப்பதிவு. இஸ்லாம் கூறும் நற்பண்புகள் நமது நடத்தையில் பிரதிபலிக்குமானுல், நாம் கூறுபவற்றை மக்கள் ஏற்றுக் கொள்வதற்குச் சாதகமான நிலைமை உருவாகும்.

(ஆ) பொருத்தமான விஷயங்களை அறிவுடைமையாகவும், விவேகபூர்வமாகவும் தெரிவு செய்தல்.

ஆரம்பத்தில் குறிப்பிட்டபடி ஒரு சராசரி மனிதனுக்கு இறைவன் தூரத்திலும், அவனது உடனடித் தேவைகள் அருகிலும் இருப்பதாகத் தோற்றும். அவனுக்கு இறைவனை ஏற்றுக்கொள்வது ஆழமான விஷயமாகத் தென்படும். ஆனுல், அவனது பார்வையோ மேலோட்டமாகத் தெரிபவற்றுக்கே மட்டுப்பட்டிருக்கும், இந்நிலையில் அவனது தேவைகளையும், ஆசைகளையும் புரிந்து கொள்வது அவனை நாம் அணுகுவதற்கு அனுகூலமாயிருக்கலாம். அவ்வாருக அவனது உள்ளத்தில் அலைமோதும் பிரச்சினைகளின் ஊடாக இறையுணர்வை அவனுக்கு ஊட்ட முடியுமானுல், அவன் எதிர்நோக்கும் சிக்கல்களுக்கு இறைவனின் புறத்திலிருந்து பேருதவி கிட்டுவதை அவனுக்குத் தெளிவுபடுத்த முடியு

(6-ம் பக்கம் பார்க்க)

# இஸ்லாத்தின் தூதை.....

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

மானால், அதன் பயனாக அவனுக்கு அச்சம் அகன்று நிம்மதி ஏற்படுமானால், இறைவனின் திருப்பெயரைக் கொண்டு எவையெவை சொல்லப்படுகின்றனவோ அவை அனைத்தையும் சிரமேற்கொண்டு செயல்பட அவன் துணிந்து விடுவான்.

எல்லா நபிமார்களும் இத்தகைய அணுகுமுறைகளைக் கையாண்டனர்.

''நாம் தூதர்களை நற்செய்தி கூறுவோராயும், எச்சரிப்போராயும் அன்றி அனுப்பவில்லை! ஆகவே, எவர்கள் நம்பிக்கை கொண்டு, நற்கருமங்களைப் புரிகின்றனரோ அவர்கள் அச்சப்படவும் மாட்டார்கள்! துக்கிக்கவும் மாட்டார்கள்'' என்ற பொருள்பட இறைவன் மறை வசனங்களை அருளியுள்ளான்.

இறை தூதர்கள் இஸ்லாமியப் பணியில் ஈடுபட்ட போது ஏற்படுத்திய மனப்பதிவு, அவர்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகள், அவற்றிற்கு அவர்கள் எடுத்த பரிகாரங்கள் ஆகியவற்றை வரலாற்று ஏடுகளில் படித்துணர்ந்து, அதே வழிமுறைகளை இக்கால நிலைமைக்குத் தக்கவாறு பிரயோகிக்க வேண்டும்.

ஆரம்பகால நபிமார்கள் ஏற்படுத்திய தனிப்பட்ட மனப்பதிவுகள், தோற்றப்பாடுகள் பற்றி வரலாறு போதிய விளக்கங்களைத் தராத போதிலும், திருக்குர்ஆனில் பல்வேறு இடங்களில் விரவிக்காணப்படும் குறிப்புக்களிலிருந்து அந் நபிமார்களின் ஒழுக்க மேம்பாடு, அவர்களின் தனிப்பட்ட வாழ்கையில் சொல்லுக்கும் செயலுக்கும் இடையிலான ஒருங்கிணைப்பு, மனவிசாலம் ஆகியவை எதிரிகளைக் கூட ஈர்க்கும் அளவுக்கு ஏற்றம் பெற்றுத் திகழ்ந்ததைக் காண்கிறோம்.

சிறையிலடைபட்டிருந்த நபி யூசுப் (அலை) அவர்களின் சரிதையிலிருந்து ஒரு சான்று வருமாறு;-

நிரபராதியான யூசுப் (அலை) சிறையில் வாட நேர்ந்ததல்லவா? சிறைவாசம் எப்படிப்பட்டது என்பது சொல்லித் தெரிய வேண்டியதல்ல, அங்கு ஒருவன் அனுபவிக்கும் துன்பமும், தீயோர் சகவாசமுமே அவன் கெட்டழியப் போதுமானவை. ஆனால் யூசுப் (அலை) அவர்களைப் பொறுத்த வரை அவர்களின் நன்னடத்தை காரணமாக ஏனைய சிறைக்கைதிகள் அவர்களிடத்தில் மிக்க மரியாதையாக நடந்து கொண்டனர்! அறிவுரைகளைப் பெற அவர்களை நாடினர்! தம்மைவிடச்சிறந்தவருக்கன்றி வேறெவருக்குமே பயன்படுத்தாத கண்ணியமான வார்த்தைகளைக் கொண்டே அவர்களுடன் உரையாடினர்.

ஒரு சமயம் சிறைக்கைதிகள் இருவர் கனவுகளுக்கு விளக்கம் பெற யூசுப் (அலை) அவர்களை நெருங்கினர், அவர்களில் ஒருவன்,

''நிச்சயமாக நாங்கள் உம்மை மிக்கநல்ல மனிதராகவே காண்கிறோம். இக்கனவுகளின் விளக்கங்களை நீர் எங்களுக்குஅறிவிப்பீராக''

(திருக்குர்ஆன்; 12; 36)

என்று கூறினான்.

ஒருவர் மனிதப் பண்புகள் அனைத்திலும் சிறந்து விளங்குவதோடு, மக்களின் நல்வாழ்வுக்காக உழைக்கும்போது தான் அவர் ஒரு தேசத்தின், சமுதாயத்தின் நம்பிக்கை நட்சத்திரமாக மிளிர முடியும்.

இறையோனின் இறுதித் தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் வாழ்க்கையில் இதற்கு

(26-ம் பக்கம் பார்க்க)

# இன்னொரு மீலாதுக்காக...

—ஓட்டமாவடி அஷ்ரப்—

**அன்று** -
அறியாமைக் கொடு இருளில்
அமிழ்ந்திருந்த யுகத்தின்...
ஞானச் சூரியனின்றி
நாறிப்போன
பாலை மனங்களின்
சூனிய யாத்திரை
தொடர்ந்த போது...

கற்பு
காற்பந்தாடப்பட்ட
கோரத்தனமான
குரங்குத்தனம்
கோலோச்சிய வேளை...

குலத்துக்கும்
கோத்திரத்திற்கும்
கழுத்துகளை அறுத்து
ரத்தாபிஷேகம்
நடாத்திய காலை...

பச்சிளங் குழந்தைகளால்
பாலைக் குழிகள்
நிரப்பப் பட்டு
பொறுமை கொண்ட நேரம்...

மடத்தனத்தை
மகுடமாகச் சூடிக் கொண்டு
ஷைத்தானியத்தை
'ஷரீஅத்' ஆக்கிய
தலைவர்களின் பாதங்களில்
மானிடத் தலைகள்
மண்டியிட்ட நேரம்...

ஒரு நாள் விடிந்தது!
உலகே மலர்ந்தது!

நாயகமே!
உங்கள் பிறப்பு
உலகில் நிகழ்கிறது!

உலகத்தின் மீலாதே
அன்றுதான் நடக்கிறது!

**இன்று** —
குடும்பச் சண்டைகளால்
உறவை
அறுத்துக் கொண்டவர்கள்
வெள்ளி விழா
பொன் விழாவெல்லாம்
நடத்தி முடித்திருக்கிறார்கள்!
கற்பு
கடைத் தெருவெல்லாம்
காசுக்கு விற்கிறது!
நிலையங்கள் கூட
நிறைய இருக்கின்றன!
பத்திரிகைகள், சஞ்சிகைகள்
பரவலாக
பெண்களை விற்கின்றன!

ஷைத்தானியத்தை
'ஷரீஅத்' ஆக்கியவர்களின்
புறங்கால்களை
நம்மவர்கள்
நக்கித் திரிகிறார்கள்!

கோடிக் கணக்கான
உயிரணுக்களை
கருத்தடை யென்று
கொல்லுகிறார்கள்!

இதிலெல்லாம்
முஸ்லிம்கள் என்பவர்களே
முன்னணியில் நிற்கிறார்கள்!

இது
இருபதாம் நூற்றாண்டாம்!
நாகரிக யுகமாம்!

அன்று
நாகரிகமற்ற ஜாஹிலிய்யா!
இன்று
நா(ய்) கரிக ஜாஹிலிய்யா!

சில
இஸ்லாமிய கீதங்களும்
இல்லாமல் போயிருந்தால்
சமூதாயம்
பெயரை மறந்த
ஈயின் நிலையில்
இருந்திருக்கும்!

வருடமொரு முறை
மீலாது கூட வராவிட்டால்
நாயகமே...
உங்கள் ஞாபகமே
இந்த சமூகத்துக்கு வராது!
இப்போது உலகம்
இன்னொரு மீலாதுக்காக
ஏங்கித் தவிக்கிறது!
அந்த மீலாது
நமக்குள்ளே இருக்கிறது
என்பதை
சமூகம் மறந்துபோய்விட்டது!
இப்போது உலகம்
இன்னொரு மீலாதை
எதிர்பார்த்துக்
காத்துக் கொண்டிருக்கிறது!

# மாநபி தந்த மறுமலர்ச்சிக் கொள்கை

மக்கள் சமுதாயத்துக்கோர் அருட்கொடையாக வந்துதித்த முஹம்மது முஸ்தபா(ஸல்)அவர்களின்பிறந்த நாளை நாம் வருடாவருடம் கொண்டாடுகிறோம். ஆனால் அவர்களின் போதனைகளை எடுத்து நடக்கத் தவறிவிடுகிறோம். அதனால் உலகம் இன்று சொல்லொணாத் துன்பத்திற் சிக்கித் தவிக்கிறது. எனவே மானிலத்தின் மணிவிளக்காம் அண்ணலது போதனைகள் அல்லற்படும் அகிலத்துக்கு இன்று மிக மிக முக்கியமாகத் தேவைப்படுகின்றன.

### அகில உலக இயக்கம்

பதினான்கு நூற்றாண்டுகளுக்கு முன் நபியவர்கள் இறைவனின் திருத்தூதராக அரேபியப் பாலைவனத்திலே தோன்றியபோது அவர்கள் பிறந்த நாடோ ஒழுக்கக் கேட்டின் எல்லையை அடைந்திருந்தது. அரேபிய மக்களின் அனாச்சார நிலை கண்டு அவர்களது இதயம் துடித்தது! மிருக வாழ்க்கை நடத்திய மக்களை மக்களாகவே வாழச் செய்ய அவர்கள் உறுதி பூண்டார்கள். இறைவனருளோடு அவர்களது அயரா முயற்சியும் தளரா உறுதியும், அந்தகார இருளில் மூழ்கியிருந்த அரேபியாவில் உலகம் என்றும் காணாத ஒரு நிகரற்ற மறுமலர்ச்சியையே ஏற்படுத்தி விட்டன.

அவர்கள் உருவாக்கிய இலட்சிய இயக்கம் அரேபியாவை மட்டும் மலரச் செய்யவில்லை. உலகுக்கே வழிகாட்டியது. ஆத்மீகம், ஒழுக்கம், பொருளாதாரம், அரசியல், கலாசாரம்போன்ற மனித வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் அது ஓர் உன்னத புரட்சியை ஏற்படுத்தி விட்டது! இருபத்திமூன்றே வருடங்களில் ஏற்பட்ட இவ்வற்புதப் புரட்சியைக் கண்டு இன்றும் சரித்திராசிரியர்கள் அதிசயிக்கின்றனர்.

### புரட்சிக் குரல்

எந்த முறையைக் கையாண்டு முஹம்மத் (ஸல்) அவர்கள் தம் சீர் திருத்தப் புரட்சியில் வெற்றி கண்டார்கள் என்பதை ஆராய்வது நம் கடமை.

ஒரே இறைவனையே தம் எஜமானாகவும் சட்டமியற்றுவோனாகவும் இரட்சகனாகவும் மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். வணக்கத்துக்குரியவன் அவன் ஒருவனே என ஒப்புக்கொள்ள வேண்டும்: அவனைத் தவிர வேறு எவரையும்-எதையும் வணங்கவோ, வேறு எந்த அதிகாரச் சக்திக்கும் தலைசாய்க்கவோ கூடாது. மதத்தின் எல்லைகட்குள் மாத்திரமன்றி வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் அந்த ஒரே இறைவனையே இணையற்ற அதிகாரியாய் ஏற்று அவனுக்கே சிரம்சாய்க்க வேண்டும். இதுதான் அவர் முதன் முதலாக எழுப்பிய புரட்சிக் குரல்!

### அல்லாஹ்வைப்பற்றிய அச்சம்

அதைத்தொடர்ந்து ''மனிதனின் பொறுப்புணர்ச்சியற்ற தான்தோன்றித் தனமான வாழ்க்கை ஒழிய வேண்டும். தனது ஒவ்வொரு செயலுக்கும் இறைவனிடம் தானே பதில் சொல்ல வேண்டும். இறை சந்நிதானத்தில் அவற்றுக்குத் தானே பொறுப்பாளியென ஒவ்வொரு மனிதனும் தனியாகவும். கூட்டாகவும். நம்ப வேண்டும்'' என்ற இறைதூதரின் அறிவுரை, மனிதனின் நெஞ்சத்திலே நஞ்சாகப் பதிந்திருந்த உயர்ந்தவன், தாழ்ந்தவன், ஏழை, பணக்காரன், வெள்ளையன், கறுப்பன் என்ற எல்லாப் பேதங்களையும் போக்கி மனிதசமுதாயத்திடையே சமத்துவ உணர்ச்சியைப் பெருக்கியது. சுயநலம் வழிந்தோடிய மனித உள்ளங்களிலேஇறை வழியில் உழைக்க வேண்டும் என்ற உயர்ந்த உணர்ச்சி பெருக்கெடுத்தோடியது.

### ஒழுக்கமே பிரதானம்

அடுத்தபடியாக வந்தது வள்ளல் நபியின அறநெறி. உயர் பதவி வகிப்போருக்கும் பாட்டாளிகளுக்கும் ஒன்றாகவே அமைந்த அவ்வொழுக்க விதிகளின் எதிரே நிற்க முடியாது வஞ்சக நெஞ்சம் படைத்தோர் அஞ்சியோட்டம் பிடித்தனர். கலை, கலாசாரம், சர்வதேசத் தொடர்புகள், பேச்சுவார்த்தைகள், யுத்தம், சமாதானம் போன்ற மனிதனின் தனி, கூட்டுவாழ்க்கை சம்பந்தமான அத்தனை விஷயங்களும் ஒழுக்கத்தின்—அறநெறியின் — அடிப்படையிலேயே அமைய வேண்டும் என அண்ணலார் வற்புறுத்தினார்கள். மனித வாழ்க்கையில் ஒழுக்கக் கட்டுப்பாட்டுக்குப் புறம்பான எந்தச் செயலும் நிகழ்வதை அவர்கள் ஏற்கத் திட்டவட்டமாக மறுத்துவிட்டார்கள். இவை வழிகாட்டும் ஒளிவிளக்காம் வள்ளல் நபியவர்கள் உருவாக்கிய புரட்சி இயக்கத்தின் அடிப்படைக் கொள்கைகளிற் சிலவாகும்.

### எப்படிச் செயல்படுத்தினார்கள்?

இனி முஹம்மது முஸ்தபா ஸல்.) அவர்கள் தம் திட்டத்தைச் செயற்படுத்த என்ன முறைகளைக்கையாண்டார்கள் என்பதைக் கவனிப்போம்.

முதன் முதலில் அவர்கள் தனி மனிதனைச் சீர்திருத்த முற்பட்டார்கள். ஒரு சமுதாயத்தைச் சீர்திருத்துவதற்கான எந்தத் திட்டத்தின் வெற்றியும் இறுதியாக தனி மனிதரின் கைகளிலேயே தங்கியிருக்கிறது என்ற பேருண்மையை இறை தூதரவர்கள் முற்றிலும் உணர்ந்திருந்தார்கள்.

ஒரு திட்டம், நிகரற்ற சிறப்புடையதாய் இருக்கலாம். ஆனால், ஒழுக்கந் தவறுவோரையும் நாணயமற்றவர்களையும் அதன் சேவையில் ஈடுபடுத்தினால் அத்திட்டம் ஒருபோதும் வெற்றி பெறமுடியாது. தம் சொந்த ஆசைகளுக்கும், நலன்களுக்கும், தப்பபிப்பிராயங்களுக்கும் இரையாவோரைக் கொண்டுஎந்தத் திட்டத்தையும் வெற்றிகரமாக அமுல் நடத்தலரிது.

திட்டத்தை அமுல் நடத்துவோர் அற நெறிக்கும் சத்தியத்துக்கும் கட்டுப்பட்ட உண்மை விசுவாசிகளாய் இல்லாதவரை முன்னெச்சரிக்கையாக எத்துணை நடவடிக்கைகள் எடுப்பினும் திட்டத்தில் எதிர்பாராத ஓட்டைகள் ஏற்படவே செய்யும்.

திட்டத்தில் குற்றங் குறைகள். ஓட்டைகள் இருந்தாலும், அதனைச் செயல்படுத்துவோர் நம்பத்தகுந்தவர்களாக, நாணயமிக்கவர்களாக இருப்பின் அவர்களின் பிழையற்ற நேர்மையான நடவடிக்கைகள் அக்குற்றங் குறைகளைப் போக்கிவிடும் என்பதில் ஐயமில்லையல்லவா? இன்றைய பாரிய திட்டங்கள்

(22-ம் பக்கம் பாக்க)

எனது மதம் இஸ்லாம்—2

# கீழ்த்தர உணர்வுகளைத் திருப்திப்படுத்துவனவற்றிற்கு மனிதன் அடிமையாகியுள்ளான்!

## கெட் ஸ்டீவன்ஸ் (யூசுப் இஸ்லாம்)

> நாம் ஒரு செயலை 'அல்லாஹ்வுக்காக' என்ற உறுதியான மன நிலையுடன் செய்யும்போது அல்லாஹ் அதனை எமக்கு இலகுவாக்கித் தருகின்றான்.
>
> (சகோதரர் யூசுப் இஸ்லாம்)

கேள்வி: நீங்கள் ஈடுபாடுகொண்டிருந்த பலவற்றைத் திடீரென்று நிறுத்துவதும்விட்டுக் கொடுப்பதும்எவ்வளவுதூரம் சிரமமாக இருந்தது! என்பதை விளவிக்குர்களா?

பதில்; உண்மையில் அது எனக்கு அவ்வளவு சிரமமாக இருக்க வில்லை. என்னை அழித்துக் கொண்டிருந்த குடி, புகை, வட்டி போன்றவைகளை விட்டுத் தள்ளுவதுதான் சரி என்பதை நெஞ்சார ஆழமாக அறிந்திருந்தேன். எனினும், என்னோடு பழகிய நீண்டகால நண்பர்களை விட்டுப் பிரிவது தான் எனக்கு மிகவும் சிரமமாகத் தோன்றியது. ஏன் தான் அவர்கள் இஸ்லாத்தின் இனிய செய்தியை உணரத்தவறுகிறார்கள் என்பதுஎனக்கு விளங்கவில்லை. என்னால்இயன்றவரை அவர்கள்தொடர்பை முற்றும் அறுத்துக் கொள்ளாதிருக்க முயற்சித்தேன். ஆனால், எனது மார்க்கத்தின் (இஸ்லாதின்)சார்பாக எனது கடந்த காலத்திற்கும் இஸ்லாத்திற்குமிடையே ஒரு கோடு கீற வேண்டிய கட்டம் வந்து விட்டது.

இது விடயத்தில் எனக்கு எத்தனையோ பரீட்சைகள் ஏற்பட்டன. உதாரணமாக முஸ்லிமல்லாதவர்களுடன் இருக்கும்போது தொழுகை நேரம் வந்தால் 'மன்னித்துக் கொள்ளுங்கள்' என்று கூறி விட்டு அமைதியாகத் தொழுகைக்குப் போவதை வழக்கமாக்கிக் கொண்டிருந்தேன். நான் எங்கு, எதற்காகப்போகிறேன் என்பதை சொல்ல வில்லை. (அதை மறைத்துவந்திருக்கின்றேன்.)இது எனக்கு ஒரு வகையான மனச்சங்கடத்தைத் தந்தது.

பின்னர் 'நான் தொழுகைக்குத் தான் போகிறேன்' என்பதை அவர்களுக்குப் புரிய வைக்க வேண்டும் என ஒரு நாள் முடிவு செய்தேன். அதன்படி நான் அவர்களுக்கு அதனை அறிவித்தபோது அவர்கள் மிகவும் கௌரவத்தோடு அச்செயலை அங்கீகரித்தார்கள். இதிலிருந்து நான் புரிந்து கொண்டது என்னவென்றால் நாம் ஒரு செயலை அல்லாஹ்வுக்கென்று உறுதியாக நின்று செய்யும் போது அல்லாஹ் அதனை இலகுவாக்குகின்றான் என்பதே. இதன் பின்னர் எனக்கு அதிகமான பிரச்சினைகள் ஏற்படுவதில்லை.

தமிழில்!
**ஏ. எம். எம். மன்சூர்**

கேள்வி: உங்கள் கடந்தகாலத் தொழில் பற்றி சிறிது சொல்வீர்களா?

பதில்: நான் பதினைந்து வயதினனயிருந்த போது இசைத் துறையில்அதிகஆர்வம்காட்ட ஆரம்பித்தேன். எனதுதந்தை எனக்கு ஒரு கித்தார் வாங்கித் தந்தார். நான் சொந்தமாக பாடல்கள் இயற்றலானேன். எனது பெயரை 'கெட் ஸ்டீவன்ஸ்' எனத் தெரிவு செய்தேன். எனது பதினெட்டாவது வயதில் என் முதல் பாடல் இசைத் தட்டில் பதிவாகியது. எனது முயற்சி பெரிதும் வெற்றியளித்தது. ஐரோப்பா முழுதும் என் பாடல்கள் விற்பனையாகின, எனினும் என் மேடைக் காட்சிகள் எனக்குப் பொருத்தமாக அமையவில்லை. நான் அதிகம் குடிக்கவும் புகைக்கவும் ஆரம்பித்தேன், அதனால் வெகு விரைவிலேயே நான் நோய்வாய்ப்பட்டேன். காசநோய் என்னைத் தொற்றிக் கொண்டது. இது எனது தொழிலைத் தடைப் படுத்தியது. சில மாதங்களை வைத்திய சாலையில் கழித்தேன். இக்காலக் கட்டத்தில் நான் கிழக்குத் தத்துவம் பற்றிப் படிக்கலானேன். 'இரகசியப் பாதை' என்ற பெயருடைய நூலொன்று என்னிடம் இருந்தது. 'ஆன்மா'வின் மதம் பற்றிய முதல் அறிமுக நூலாக அது அமைந்தது. அது சாந்தியையும் ஒளிமிக்க பாதையையும் தேடும் பயணத்தில் என்னைத் தூண்டிவிடப்போதுமானதாக அமைந்திருந்தது. அது இறுதியில் என்னை இஸ்லாத்தின் தலைவாயில் வரை கொண்டு சென்றது.

இதன் பின்னர் எனது ஆன்மீக விழிப்பை வெளிப்படுத்தும் பாடல்கள் எழுதலானேன். எனவே, அப் பாடல்கள் எனது சுய வரலாறுக அமைந்தன. எனது இருபத்தி ஒரு வயதில் உலகளாவிய ரீதியில் எனக்கு வெற்றியைத் தேடித்தந்த அந்தப் பாடல் வெளியானது. 'Tea for the Tillerman' என்ற தலைப்பிலான அப்பாடல் என்னை ஒரு பிரசித்தமான நட்சத்திரமாக (Super Star)மாற்றி விட்டது. ஒரு வகையில் எனது இந்த நிலைகள் இறைவனை நோக்கிய எனதுபயணத்தின்வெவ்வேறு கட்டங்கள் என நான் கருதுகிறேன்.

கேள்வி: பொப் இசையுலகம் இன்றைய காலகட்டத்தில் நிறைந்த அபிமானிகளைக்கொண்டிருக்கிறது, முஸ்லிம்களும் இதற்கு விதிவிலக்கல்ல. இது பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

பதில்: துரதிருஷ்ட வசமாக. இன்று மக்கள் தமது கீழ்த்தரமான உணர்வுகளைத் திருப்திப்படுத்துவனவற்றிற்கு அடிமையாகியுள்ளார்கள். இசைத் தட்டுகள், சினிமாப் படங்கள், ஒலிப்பதிவு நாடாக்கள், சஞ்சிகைகள் என்பன போன்றவை இன்று பணம் கறப்பதற்கென்றே பயன்படுத்தப் படுகின்றன, பொப் இசையை ரசிப்பது கனவு காண்பது போன்றிருக்கும். அது ஆன்மாவுக்கும் ஒரு தற்காலிகதிருப்தியை,ஈடு தலையைக் கொடுக்கிறது, இத்தகைய இசையை ரசிக்கும் மக்கள், பொதுவாக மெய்ஞ்ஞான நிலையை அவாவுகின்றனர், அத்தகைய

(22-ம் பக்கம் பார்க்க)

# ஜாஹிலிய்யத்தோடு உறவு கொண்டால்

## தலைநிமிர்ந்து வாழமுடியாது!

### அஷ்ஷஹீத் செய்யித் குதுப் (ரஹ்)

இஸ்லாம் முழுமையான வடிவில் அறிமுகப்படுத்தப்பட்டபோது அன்றைய தீமைகள் அனைத்தும் ஒருங்கிணைந்து அதனை எதிர்த்து நின்றன. ஏனெனில் இஸ்லாத்தின் எழுச்சி தமது நலன்கள் எல்லாவற்றுக்கும் சாவுமணி அடித்துவிடும் என தீமைகளின் காவலர்கள் கருதியதே காரணம்.

உண்மையில் அதுதான் நடந்தது. இஸ்லாத்தின் உறுதியான, அறிவு ரீதியான வளர்ச்சி தீமைகளை ஒழித்துக் கட்டி அவற்றின் உதவியால் வாழ்ந்து கொண்டிருந்தவர்களையும் அடிபணியச் செய்து தூய்மையின் ஆட்சியை நிறுவியது. தவறான மக்களின் கரங்களிலே அகப்பட்டு தவறுகளுக்கெல்லாம் தலையாட்டி அனுமதி வழங்கிய தலைமைத்துவத்தை இஸ்லாம் தனதாக்கிக்கொண்டு நேர்மைக்கு வழிகாட்டி நின்றது. ஒரு புதிய கருத்தில் சமூக அமைப்பை ஏற்படுத்தி மக்களுக்கு வழிகாட்டுவதில் இஸ்லாம் வெற்றி பெற்றது.

அன்று அரேபியா இருந்த சூழ்நிலை, தீமைகளின் ஆதிக்கம், மக்களின் அறிவுத்தரம், தவறான சிந்தனைகள் என்பவற்றை எண்ணிப் பார்க்கும் ஒருவர், ஒரு தனி மனிதரான முஹம்மத் (ஸல்)அவர்களால் இத்தகைய மாபெரும் சமுதாயப் புரட்சியொன்றை நடத்தி வெற்றி காண்பது எப்படி சாத்தியமாகும் என வியப்படைய முடியும்! அன்றைய சமூக சூழ்நிலைகள் அவரை அப்படியே விழுங்கியல்லவா இருக்க வேண்டும் என்றெண்ணுவார்.

எனினும், நபி (ஸல்) அவர்கள் அன்றைய அராஜகங்களையெல்லாம் வென்று இறையாட்சியை நிறுவினார்கள். அதற்கான பல்வேறு காரணங்கள் இருந்தபோதிலும் குறித்த ஒரு விடயத்தில் அவர்கள் நடந்து கொண்ட முறைதான் விசேஷமானது.

அவர்கள் அன்றைய சமூக மாற்றத்துக்கான அடிப்படைக் கருத்தொன்றை மக்கள் முன் வைத்தார்கள். அதனால் எதிரிகளிடமிருந்து எண்ணற்ற தொல்லைகள் வந்தன. துன்பமும் துயரும் தொடர்ந்தன. ஆனால் நபி (ஸல்) அவர்கள் தாம் கொண்ட கொள்கையிலிருந்து, ஏற்றுக் கொண்ட கருத்திலிருந்து இம்மியளவும் மாறவில்லை. தமது கருத்துக்கு மாறான கருத்துக்களையும் நம்பிக்கைகளையும் பாராட்டவில்லை; அடுத்தவர்களின் உணர்ச்சிகளுக்கும் ஆசை வார்த்தைகளுக்கும் பலியாகிவிடவில்லை, தவறான தலைமைக்கு விட்டுக்கொடுத்து இணக்கமாக செல்வதற்கு முற்படவில்லை; தனது அந்தஸ்தைப் பாதுகாத்துக்கொள்ள தீமைகளின் காவலர்களுக்கு பணிந்து செல்லவில்லை,

மாறாக, அன்று அணிதிரண்டிருந்த எல்லா எதிர் சக்திகளுக்கும் மத்தியில் தமது கருத்தை தைரியமாக எடுத்தியம்பினார்கள்,

‘‘கூறும்! இறைவனை நிராகரிப்பவர்களே, நீங்கள் வணங்குபவற்றை நான் வணங்குவதில்லை. நான் வணங்குபவனை நீங்கள் வணங்குவதுமில்லை. அன்றி நீங்கள் வணங்குபவற்றை நான் வணங்குபவனுமல்லன். நான் வணங்குபவனை நீங்கள் வணங்குபவர்களுமல்லர். உங்கள் மார்க்கம் உங்களுக்கு; எனக்கு என்னுடையது.’’

(அல்குர்ஆன் 109;1-6)

இவ்வாறு, நபி (ஸல்)அவர்களுடைய மார்க்கத்திற்கும் ஏனையவர்களுடைய மார்க்கங்களுக்கும் இடையிலான பிரிவினை இணைக்க முடியாதது என்று பிரகடனப்படுத்துவதுடன் அவர்கள் நின்றுவிடவில்லை. எதிர்காலத்திலாவது இத்தகைய இணக்க ஏற்பாட்டுக்கு இடமேயில்லை என்ற கருத்தை ஆணித்தரமாகப் பதிய வைத்தார்கள்,

நபி(ஸல்) அவர்கள் தமக்கு அற்புத சக்தி இருப்பதாகவோ, மறைவான விஷயங்களை அறியக்கூடிய மனித சக்திக்கு அப்பாற்பட்ட விசேடத் தன்மை தமக்கிருப்பதாகவோ கூறி மக்களை தம் மார்க்கத்தின்பால் அழைக்கவில்லை.

தம் எதிரிகளை வெற்றி கொண்டபோது, தம்மைப் பின்பற்றியோருக்கு உயர் பதவிகளையோ செல்வத்தையோ அளிப்பதாக வாக்குறுதிகள் வழங்கவும் இல்லை.

நபி (ஸல்) அவர்கள் ஒரு தனிமனிதராக எழுந்து நின்று அன்றைய மக்களின் நம்பிக்கைகள்,. செயல்கள், பண்புகள் அனைத்துக்கும் மாற்றமானதொரு கருத்தை முன்வைத்து வெற்றியீட்டினார்கள்.

இந்த வெற்றி ஏதோ அற்புதங்களினால் நிகழ்ந்ததல்ல. சாதாரண ஒரு மனிதன் ஒரு கொள்கையை முன்வைத்து எவருக்கும் பொருத்தம் எனக் காணும் நடைமுறைகளை அனுஷ்டித்து வெற்றி பெற்றானே. அதுபோலவே நபி (ஸல்) அவர்களும் முயன்று வெற்றி பெற்றார்கள்.

இஸ்லாமானது மனித மனங்களில் மறைந்துகிடக்கும் சக்திகளுடன் இணைந்து செயற்படும்படி நபி (ஸல்) அவர்கள் அதனை, அதன் மகத்துவத்தை, அதனைத் தந்த அல்லாஹ்வின் ஆதிக்க உரிமையை எடுத்துரைத்தார்கள்.

இதன் காரணமாக மனித மனங்களை ஆக்கிரமித்துக் கொண்டிருந்த தீமையான சிந்தனைகள், கோட்பாடுகள் அனைத்தும் வெருண்டோடின. அத்துடன் இறை ஆதிக்கத்தை முழுமையாக ஏற்றுக் கொண்டன,

இவ்வாறு மக்கள் ஓரிறைவனை ஏற்று அவனுக்குக் கீழ்ப்படிந்து செயற்பட முனைந்தபோது, மக்களை மக்கள் வழிபடும் மடமை மறைந்து மண்ணோடு மண்ணாகியது. எல்லாம்வல்ல அல்லாஹ்வின் முன்னே எல்லா மனிதர்களின் தலைகளும் வளைந்து கொடுத்த போது, பேதமைகள் மறைந்தன; ஏற்றத் தாழ்வுகள் நீங்கின. எல்லோரும் சம நிலையைப்

(24-ம் பக்கம் பார்க்க)

# புகைக்காதீர்; அதனுல் நன்மையில்லை!

புகைத்தல் பற்றி சவூதியில் வெளியான 'பத்வா' ஒன்றை அக்டோபர் மாத அல்-ஹஸனுத் இதழ் பிரசுரித்ததை படித்த வாசக சகோதரர்கள் நன்கு பயனடைந்திருப்பார்கள். அத்துடன் இந்தியாவைச் சேர்ந்த திரு. து. ரங்காச்சாரி என்பவர் எழுதிய 'புகை அகராதி' என்ற நூலை வாசிக்க எனக்கொரு சந்தர்ப்பம் கிடைத்தது. அதிலுள்ள பயன்மிகு அம்சங்களை அல்-ஹஸனுத் வாசகர்களுக்குத் தொகுத்துத் தருகிறேன்—படித்துப் பயன் பெற்றுல் உடலுக்குக் கேடில்லை.

— அக்கரைப்பற்று அப்துல் மஜீத்

★ அமோனியா, ஆர்செனிக், கரியமிலவாயு, காபன் ஓரொட்சைட்டு, கிரிஸ்டில், கோலிடைன், நிகோடின், பர்பரால், பார்வோலின், பிரிடின், பென்லோ, பைரின், பைரிடின், ப்ரஸ்ஸிக் அமிலம், மார்ஷ்வாயு, மெதிலாமைன், ருபிடைன், விரிடைன், லெண்டிடைன், லூட்டிடைன் இத்தனையும் சிகரட் புகையிலுள்ள நஞ்சுகள்.

★ இளங்குற்றவாளிகளில் 100க்கு 93 பேர்கள் புகை பிடிப்பவர்களே. இளைஞர்களின் முழு வளர்ச்சி அடையாத மூளை, சிகரெட்டிலுள்ள 'பர்பரால்' என்ற நஞ்சினுல் நலிவடைகிறது. இதனுல் நியாய உணர்வு குன்றி குற்றம்புரியக்கூடிய நிலை உருவாகிறது.

★ புகைப் பழக்கத்துக்கும் காக்கைவலிப்பு வியாதிக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என ஆங்கில வைத்திய நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

★ ஒன்றன் பின் ஒன்ருக தொடர்ந்து இடைவெளியின்றி ஒருவர் எத்தனை சிகரெட்டுக்கள் புகைக்க முடியும் என்று காண நூதனமான போட்டி ஒன்று மேல்நாட்டில் நடந்தது. 17 சிகரெட் பிடித்தவர் 2ம் பரிசும் 18 சிகரெட் பிடித்தவர் 1ம் பரிசும் பெற தகுதி பெற்றனர். ஆனுல் அவ்விருவரும் பரிசு பெற்றுக்கொள்ள முன்னர் போட்டி நடந்த இடத்திலேயே மயங்கிவிழுந்து மரணமானுர்கள்.

★ சிங்கப்பூரில் பேருந்துகளில் ஓட்டுனரோ, நடத்துனரோ, பயணிகளோ எவர் புகைத்தாலும் 500 டாலர்கள்வரை அபராதம் செலுத்த வேண்டும். நோயாளிகள் முன்னிலையில் வைத்தியர்களும் மாணவர்கள் எதிரில் ஆசிரியர்களும் புகைபிடிப்பது தடை செய்யப்பட்டுள்ளது. பள்ளிகளில் மாணவர்கள் புகைபிடித்தால் கடுமையாக தண்டிக்கப்படுவார்கள், டாக்சி டிரைவர்கள் பிரயாணிகளை ஏற்றிச்செல்லும்போது புகைத்தால் 400 டாலர்கள்வரை அபராதம். அரச ஊழியர்கள் பொது மக்களுடன் தொடர்பு கொள்ளும்போது புகைபிடிக்கக்கூடாது. சினிமா, நாடக அரங்குகளில் புகைப்பவர்களுக்கு 500 டாலர்கள் அபராதம்.

★ 'இங்கே புகைபிடிக்கக் கூடாது' என்ற எச்சரிக்கைகளை மீறி புகைபிடித்ததன் விளைவாக பெரிய சுரங்க வெடிவிபத்துகள் நிகழ்ந்துள்ளன. எண்ணெய்வயல்களில் இது போன்று மூண்ட தீ ஒரு வாரகால இடைவிடாப் போராட்டத்தின் பின்பே அணைக்கப்பட்டது. ஓடும் ரயிலில் ஏற்பட்ட சில தீ விபத்துக்களுக்குக்கூட அணைக்காது போடப்பட்ட சிகரெட்துண்டுகள்தான் காரணம் என்று கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

★ ''விஞ்ஞான விந்தை மனிதர்'' என்ற விருதுடன் விளங்கிய தோமஸ் அல்வா எடிசன் தந்தி சாதனம், மின் ஒளிவிளக்கு, மின் ஒலி பெருக்கி, பேசாத சினிமா, பேசும் இயந்திரம் (போனோகிராப்) உட்பட நூற்றுக் கணக்கான நவீன சாதனங்களை கண்டுபிடித்தார். அவை இயங்கத் தேவையான 2500 கருவிகளை புதிதாக செய்து அவற்றின் தயாரிப்பு உரிமையையும் பெற்றுசாதனை செய்துள்ளார். இவர் புகைப்பிடிப்பதில்லை.

எவ்வித பொறுப்பான பணியையும் புகைபிடிப்பவர்களால் கருத்தூன்றி கவனமாக செய்ய இயலாது என்பது தோமஸ் அல்வா எடிசனின் கருத்து. எனவே இவர் தனது ஆய்வுக்கூடங்களிலும், தொழிற்சாலைகளிலும் புகைப்பவர்களை வேலைக்கு அமர்த்தவில்லை. மோட்டார் மன்னன் என புகழ் பெற்ற ஹென்றி போர்ட் அவர்களும் தனது தொழிற்கூடங்களில் புகைப்பிடிப்போரை வேலைக்கு எடுத்துக் கொள்ளவில்லை.

★ சீக்கியரின் பத்தாவது குருவான கோவிந்தசிங் மதவாதிகளாயிருந்த சீக்கியர்களை 'கால்சா' என்ற வலிமை மிக்க அரசியல் இயக்கத்தினராக மாற்றி அவர்களுக்கான சட்டதிட்டங்களை தொகுத்தும் வழங்கினுர். புகைபிடிக்கக் கூடாது என்பது அவருடைய கண்டிப்பான கட்டளைகளுள் ஒன்று. இப்போதும் சீக்கியர்கள் தங்கள் குருவின் ஆணைக்கு அடிபணிந்து புகைபிடிப்பதில்லை. இக்காரணத்தினுலேயே அவர்கள் மற்ற மாநிலத்தவர்களைவிட ஆரோக்கிய பொலிவுடனும் கட்டுறுதியான உடலுடனும் காணப்படுகிருர்கள். புற்றுநோய் அவர்களை பற்றுவது இல்லை.

★ அமெரிக்க நாட்டில் ஏற்படும் தீ விபத்துக்களில் 25 சதவீதம் புகைப்பவர்களின் அசட்டை காரணமாய் ஏற்படுவதாயும் இதன் மூலம் ஆண்டுதோறும் 2000 மக்கள் மாள்வதாயும், 1,07,200 கட்டிடங்கள் தீ பற்றிக் கொள்வதாயும், 9,60,00,000 டாலர்கள் மதிப்புள்ள சொத்துக்கள் நாசமடைவதாயும் உலக சுகாதார நிறுவனம் தெரிவிக்கிறது.

★ பாரிஸ் நகரில் உயர்ரக நாய்க்குட்டிகள் விற்பனை செய்பவர்களில் சிலர், சாதாரண நாய்க்குட்டிகளுக்கு உணவுடன் சிறிது புகையிலையையும் கலந்து கொடுக்கிருர்கள். இதனுல் அவை முழுவளர்ச்சியின்றி சித்திரக்குள்ளவடிவில் நூதன ஜாதி நாய்போல் தோற்றமளிக்

(20 ம் பக்கம் பார்க்க)

# வாசகர் கருத்து

'இஸ்லாம் எனது மதம்' பேட்டிக் கட்டுரை குர்ஆனின் ஆளுமைக்கு ஆதாரமாக அமைந்துள்ளது. பயனுள்ள கட்டுரை, பலரும் படித்துப் பயன்பெற வேண்டும். குறிப்பாக, 'நாம் முஸ்லிம்கள்' எனக் கூறிக் கொள்வோர் கொஞ்சம் ஊன்றிப் படிக்க வேண்டும்.

எம். பீ. அமீர் அமானுல்லாஹ்
நிக்கவெரட்டிய.

* * *

தமிழ் தெரிந்த ஒவ்வொரு முஸ்லிம் வாசகரும் படித்து, பாதுகாக்க வேண்டிய ஒரு பத்திரிகை அல்ஹஸனாத், ஆனால் பிறநாட்டுச் சஞ்சிகைகளின் மறுபிறப்பாக மாறி அதன் தனித்துவத்தை இழக்கச் செய்ய வேண்டாம் என கேட்டுக் கொள்கிறேன். ஆப்கன், ஈரான் உண்மைகளை தொடர்ந்து பிரசுரியுங்கள்.

எஸ். எல். எம். அமீன்,
மஹகொட
பேருவலை.

* * *

'நேர்மை வாழ்வு உயர்வைத் தரும்' நேர்மையாக வாழ விரும்புவோருக்கு நல்லதொரு விருந்து, வரவேற்கிறேன்.

ஏ. அன்ஸார்,
அல் அமீனியா அரபிக் கல்லூரி,
நிக்கவெரட்டிய.

* * *

சில (இஸ்லாமிய) பத்திரிகைகளில் இஸ்லாத்திற்கு தவறான விளக்கம் கொடுத்து மக்களை வழிகேட்டில் இட்டுச் செல்ல முனைந்துள்ள வேளையில், அல்ஹஸனாத் இஸ்லாத்தை இஸ்லாமாக எடுத்துக்கூறுவதைக் கண்டு மகிழ்கிறேன். இதன் ஒவ்வொரு அம்சமும் அனைவருக்கும் பயனுடையவை.

எம். ஏ. தாஹிர்,
கபூரிய்யா அரபிக் கல்லூரி,
மகரகம.

* * *

மௌலானா மௌதூதி (ரஹ்) அவர்களின் ஆக்கங்கள் என்னை வெகுவாகக் கவர்ந்து விட்டன. அவர்களைக் குறை கூறிக் கொண்டிருப்பவர்கள். எவ்வித விருப்பு வெறுப்புமின்றி அவர்களின் ஆக்கங்களைப் படித்துப் பார்த்தால் நல்லது என அபிப்பிராயப்படுகிறேன்,

முஷம்மிலா சரிப்
நாவல்நகர்.

* * *

நம் சமூகத்திற்குள்ளேயே இருந்துகொண்டு குழிபறிக்கும் கோடரிக் காம்புகளை மிக நுணுக்கமாக இனங் காண்பித்துள்ளார் 'அவதானி'. அத்தகையவர்களால் தான் நம் சமூகம் சீரழிந்து வருகிறது. முஸ்லிம்கள் அவதானமாக இருந்தால் அன்றிதப்பவே முடியாது. அவதானிக்கு என் நன்றி.

எஸ். எம். இம்தியாஸ்
கொழும்பு வீதி,
கண்டி.

* * *

அல்ஹஸனாத் இதழுக்கு என்றும் என் வாழ்த்துக்கள். எமது சமூகத்தில் புரையோடிக் கிடக்கும் பல்வேறு குறைபாடுகளை புட்டுப்புட்டாக அல்ஹஸனாத் முன்வைத்து பரிகாரம் புகட்டுகிறது. இன்று இடதுசாரி அரசியல் கட்சிகள் செய்யும் திருகுதாளங்களையும் தில்லுமுல்லுகளையும் நவம்பர் இதழ் பளிச்சிடுகிறது. அதன் பணி தொடர பிரார்த்திக்கிறேன்.

எம். எஸ். எம். தமீர்
பலாங்கொடை.

* * *

ரஷ்யா அடி வாங்குவதை அல்ஹஸனாத்தில் படித்த போது, அமெரிக்கர் வியட்னாமில் அடி வாங்கியது என் நினைவுக்கு வந்தது. இவை நமக்கு ஓருண்மையைப் புகட்டுகிறது. வல்லமை என்பது ஜனப் பெருக்கத்திலோ ஆயுத பலத்திலோ தங்கியிருப்பதில்லை. துணிவும், தியாக உணர்வும் இறை நாட்டமும் இருந்தால் எவரையும் மடக்கிவிட முடியும். இதுதான் இன்றைய ஒடுக்கப்பட்டவர்களுக்குத் தேவை. வளர்க அல்ஹஸனாத்.

எஸ். தியாகலிங்கம்
கண்டி.

* * *

குறைந்த விலையில்
எளிய நடையில்
இனிய தமிழில்
பரந்த நோக்குடன்
மாமறை கூறும்
மா நபியின் வழிமுறைக்கு
உயிரூட்டி
மனித குலத்துக்கு
ஒளியூட்டி
உணர்வூட்டும்
நல்ல கருத்துக்களை
எமக்கியம்பும்
'அல் ஹஸனாத்'தே
என் இதயபூர்வமான
வாழ்த்துக்கள்!
பரவட்டும் இஸ்லாமிய
மணம்
தொடரட்டும் உன் பணி

ஏ. எச். எம். நவ்பர்
மல்வான ஹின்னை
அக்குறணை.

## அமைதியை நாடி...

அல்லாஹுதஆலா தூய்மையானவன். அவன் தூய்மையானவற்றையே விரும்புகின்றான், அதன் காரணமாகவே தீமையிலிருந்து விடுபட்டு தூய்மையாக வாழ்வதற்காக இஸ்லாத்தை அருளினான். அதன்படி வாழ்ந்து காட்டக் கூடிய நபிமார்களையும் அருளினான்.

ஒரு மனிதன் இந்த உண்மையை உணர்ந்து அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட்டு வாழ முனையும்போது தூய்மையாகி விடுகின்றான், அவனது வாழ்வில் எந்தத் தீமையும் இடம் பெறாது, அவன் எவனுக்கும் அநியாயம்செய்யமாட்டான். எவனது பொருளையும் அபகரிக்கமாட்டான், களவு, பொய் வஞ்சகம், பொறாமை, கோள் சொல்லல் என்பனவற்றிலும் ஈடுபட மாட்டான்.

இதன் விளைவாக உலகெங்கும் அமைதி நிலவும்; ஒழுக்க வாழ்வு மலரும்; மனிதன் மத்தியில்எதுவித ஏற்றத்தாழ்வும் இருக்காது.

அனைத்துக்கும் மேலாக மறுமையில் அல்லாஹ்வின் பூரண திருப்தியும் சுவனமும் கிடைக்கும்.

ஆகவே, அல்லாஹ்வின் கட்டளைப்படிவாழ்வோமாக.

**செல்வன் ஏ.எஸ். மஹ்மூத்**
கபூரிய்யா அரபிக் கல்லூரி.

**அல்ஹஸனாத்**
சந்தா விபரம்
ஒரு வருடம்: ரூ. 15.00
(தபால் செலவுட்பட)
ஆறு மாதங்களுக்கு; 7. 50

Manager, Alhasanaath
Islamic Publication Centre
204/1, Dematagoda Road,
Colombo-9.

# என்னை அடிக்காதீர்கள்; வேதனை தாங்க மாட்டேன்!

இது ஒரு மாணவனின் உடைந்த உள்ளத்திலிருந்து வெளிக்கொணரப்பட்ட உண்மைகளைத் தழுவி எழுதப்பட்ட சோகக் கதை.

— ஆசிரியர் —

நான் ஒரு மாணவன். எட்டாம் வகுப்பில் படிக்கின்றேன், படிப்பில் அவ்வளவு திறமை என்று சொல்வதற்கு இல்லை.

காரணம், எனக்குப்படிப்பில் நாட்டம் இல்லாததுதான். எனக்கு மட்டுமல்ல, என்னைப் போன்ற பல மாணவர்களுக்குஇந்த மனோநிலைதான் இருக்கிறது. ஏனென்று கேட்பீர்கள், எம்மை யார்தான் சரியாக வழி நடத்துகின்றார்கள், நாம் கெட்டுப்போவதற்கான வழிகளல்லவா அதிகமாக இருக்கின்றன. அவற்றால் எமது சிறிய உணர்வுகள் கெட்டுப் போகின்றன,

உதாரணத்துக்கு சில விடயங்களைக் கேளுங்கள், இவை எனது சொந்த அனுபவங்கள். சிலவேளைகளில் நீங்களும் இப்படியான நிகழ்ச்சிகளைக் கண்டிருப்பீர்கள்! கேட்டிருப்பீர்கள்.

எங்கள் குடும்பம் மிகச் சிறியது. வாப்பா உம்மாவுடன் நானும் தம்பியும்தங்கையும் தான் அதன் உறுப்பினர்கள். எங்கள் வாப்பா ஒரு பெட்டிக் கடை வியாபாரி, உழைப்பு குடும்பத் தேவைக்குப் போதாது. அதனால் உம்மாவுக்கும் வாப்பாவுக்கும் இடையே அடிக்கடி சண்டை மூழும், வாப்பா உம்மாவை அடிப்பார், சில வேளைகளில் எனக்கும் அடிகள் விழும். அதற்குப்பயந்து நான் எங்காவது ஓடி ஒழிந்து கொள்வதுண்டு.

இந்த நிலையில், இரண்டு வாரங்களுக்கு முன்பு வாப்பா ஒரு டீ. வீ. செட் கொண்டு வந்தார், கடனாகத்தான்! மாதத்தவணையில் கட்டுவதற்கு, இதனால் இன்னும் பிரச்சினைகள் அதிகரித்து விட்டன. ஒவ்வொரு புதன் கிழமையும் டீ, வீ, யில் ஒரு படம் காட்டுவார்களல்லவா? எனவே, பக்கத்து பல வீடுகளைச் சேர்ந்தவர்கள் எல்லோரும் எம் வீட்டுக்குப் படையெடுப்பர் படம் பார்க்க, அந்த நேரத்தில் நான் சிகரட் என்றும் பீடிஎன்றும்கடைக்கு ஓடிக் கொண்டிருப்பேன். இடையிடையே நானும் டீ,வீ, யைப் பார்த்துக்கொள்வேன், பூரணமாக பார்க்கக் கிடைப்பதில்லை என்ற ஏக்கம் தான், வாப்பாவைநினைத்தால் பயமாக இருக்கிறது. அடித்து விடுவார்.

அன்று, புதன் கிழமை. ஏதோ புதிய படமாம், பார்த்துக்கொண்டிருந்த நான் அப்படியே தூங்கி விட்டேன். என் முதுகில் ஒரு தட்டுவிழுந்தது. திடுக்கிட்டு எழுந்தேன், உம்மா நின்றுக் கொண்டிருந்தார், படம் பார்த்துவிட்டு மற்றவர்கள் போய்க் கொண்டிருந்தனர்.

''இந்தா தின்னு!,' என்று ஒரு சிலைஸ் பானும் கொஞ்சம் தேங்காய் துருவலும் உம்மா தந்தார். தின்றுவிட்டு படுத்தேன். தூக்கம் வரவில்லை. தூக்கம் கலைந்ததும் பசிநீங்காததுமே காரணம்.

நீண்ட நேரம் இப்படி! எப்பொழுது தூங்கினேன் என எனக்குத் தெரியாது. நன்றாக விடிந்து விட்டது. எழுந்து மணியைப் பார்த்தேன். ஏழு மணியாகிக் கொண்டிருந்தது. வாப்பாவும் உம்மாவும் இன்னும் நல்ல தூக்கத்தில் ஆழ்ந்திருந்தனர், சின்னத் தம்பி விழித்து அழுது கொண்டிருந்தான்,

நான் முகத்தைக் கழுவிக் கொண்டு என் கட்டைக் காற்சட்டையைத் தேடினேன். பாடசாலைக் கென்று உள்ளது ஒன்றுதான், அதுவும் காணவில்லை. எனவே, உடுத்திருந்த காற்சட்டையையேசரிசெய்து கொண்டு கிழிந்த புத்தகங்களையும் எடுத்துக் கொண்டு பாடசாலைக்குச் சென்றேன். காற்சட்டையின் இடையை இறுக்கும் பகுதி பட்டன் இல்லாததால் அதை கையினால் பிடித்திருந்தேன்.

பாடசாலைக்குச் சென்ற போது நேரம் பிந்திவிட்டது. வகுப்பாசிரியர் இரண்டு பிரம்படி தந்து ''வீட்டுக்குப்போய் ஒழுங்காக நாளைவா'' என்று கூறி திருப்பி அனுப்பி விட்டார்.

காலை உணவு இல்லாத மயக்கம் வேறு என்னை வாட்டியது, வரும் வழியில் ஒரு மாமரம் தென்பட்டது, மாங்கனிகள் நிறைய இருந்தன, ஒரு கல்லைஎடுத்து வீசினேன். மாங்கனி விழுந்ததோ என்னவோ, என் பிடரியை ஒரு முரட்டுக் கரம் பற்றியது. அடி உதை என்பன தாராளமாகக் கிடைத்தன. ''ஐயோ; உம்மா!! ''என கத்தினேன், கேட்பாரில்லை. அடித்தவருக்கு போதுமாகியிருக்க வேண்டும் விட்டு விட்டார்.

அழுது கொண்டே வீடு வந்தேன். வெளியில் போகத் தயாராக இருந்த வாப்பாவைக் கண்டதும் என் உள்ளம் 'பகீர்' என அடித்துக் கொண்டது. அவர் என்னைக் கண்டதும் ''ஏண்டா திரும்பி வாரே. உனக்கு பாடசாலை என்றால் கசப்பாக்கும்!'' எனக் கூறி, ஓங்கி நாலு அடிபோட்டார், என் முதுகை யாரோ உரித்தெடுத்ததுபோல் இருந்தது. அத்துடன் முடிந்ததா? ''சனியன், என்று தான் படித்து முன்னுக்கு வரப் போகுதோ! ''என்று திட்டிக் கொண்டே உம்மாவும்இரண்டு அடி போட்டார். நான்என்ன செய்யலாம், அழுதேன், அது தான் என் ஆறுதலுக்கான ஒரே மருந்து!

பெரியோர்களே, இது தான் எனது நிலை, என்னைப்போன்ற பல மாணவர்களின் நிலை. உங்களுக்கும் என்னைப் போன்ற பிள்ளைகள் இருப்பர் அவர்களைப் போல் என்னையும் கருத்தில்கொண்டுஅனுதாபத்துடன் கூறுங்கள்.

நான் குற்றவாளியா? எனக்கு பலரும் தந்த தண்டனைகள் நியாயமானவையா? இது என் தலைவிதியா? என் பெயரைக் கேட்கிறீர்களா? அதைச் சொல்ல மாட்டேன். பத்திரிகைக்கு எழுதி விட்டேன் என்பதற்காக என் முதுகைப் பதம் பார்ப்பர். அடி தாங்கும் சக்தி இப்போது எனக்குக் குறைந்து விட்டது.

என்மீது உங்களுக்கு அனுதாபமாவது இருக்குமானால்! அது நான் செய்த பாக்கியம்.

'ஒரு மாணவன்.

வாழ்வுக்கு ஒளியூட்டும் வான் மறையும் நபி வழியும்

# நம்ப நடப்பது முஸ்லிமின் பண்பு!

**வைத்திய கலாநிதி ஏ. எஸ். ஹாஷிம்**
(அமெரிக்கா)
தமிழில் :
**எஸ். எம். மன்சூர்**

நாம் மற்றவர்களால் நம்பப்பட வேண்டும் என்றால், எல்லாவற்றுக்கும் முன்பு, நாம் அளித்த வாக்கு,செய்த உடன்படிக்கை, தரப்பட்ட நம்பிக்கை பொறுப்புக்கள் என்பவற்றை உரிய முறையில் அழகுற நிறைவேற்றுபவர்களாக இருக்க வேண்டும்.

எமது நற்குணம், நன்னடத்தை, வாக்கு மாறாமை என்பவற்றை கண்ணுறும் போதுதான் மக்களுக்கு எம்மீது நம்பிக்கை பிறக்கும். அதன் பின்னரே அவர்களது வாக்கு, உடைமை என்பவற்றை பாதுகாக்கும் பொருட்டு எம்மிடம் ஒப்படைப்பர்.

அதனால்தான், ஒப்பந்தங்களையும், நம்பிக்கை பொறுப்புக்களையும் ஒழுங்காக நிறைவேற்றும்படி இஸ்லாம் எம்மைப் பணிக்கின்றது. இதனை ஏற்று, இதற்கு மதிப்பளித்து கட்டுப்பாடாக வாழும் ஒருவன் நேர்மைமிக்கதொரு முஸ்லிம் என அழைக்கப்படுவான். இத்தகைய ஒரு முஸ்லிமே நல்லொழுக்கம், நம்பிக்கை, வாக்குமாறாமை, போன்ற உயரிய பண்புகளைக் கொண்டு தனது வாழ்வை அழகு படுத்துவான்.

எம்மையாளும் வல்லமை மிக்க அல்லாஹ் கூறுவதைக் கவனியுங்கள்.

''(விசுவாசிகளே, உங்களிடம் நம்பி ஒப்படைக்கப்பட்ட) அமானிதப் பொருட்களை அவற்றின் உரியவர்களிடம் நீங்கள் ஒப்படைத்து விடும் படியும், மனிதர்களுக்கிடையில் நீங்கள் தீர்ப்பு கூறினால் (பாரபட்சமின்றி) நீதமாகவே தீர்ப்பளிக்கும் படியும் நிச்சயமாக அல்லாஹ் உங்களுக்குக் கட்டளையிடுகின்றான்.''

(அல்குர்ஆன் 4:58)

''விசுவாசிகளே, நீங்கள் உடன்படிக்கைகளைப் பூரணமாக நிறைவேற்றுங்கள்.''

(அல்குர்ஆன் 5:1)

''விசுவாசிகள் நிச்சயமாக வெற்றியடைந்து விட்டனர். அவர்கள்எத்தகையோர் என்றால், தம் தொழுகையை மிக்க உள்ளச்சத்தோடு தொழுவார்கள்.........அன்றி அவர்கள் (நம்பி ஒப்படைக்கப்பட்ட) தங்களுடைய அமானிதப் பொருட்களையும். தங்களுடைய வாக்குறுதிகளையும் பேணி(க் காத்து) நடப்பார்கள்.'' (அல்குர்ஆன்23:1,2,8)

ஒருவன் மற்ற மனிதர்களை, வெல்வதற்கு ஆயுதங்கள் தேவையில்லை; அதிகார பீடமும் அவசியமில்லை. மாறாக, வாக்குறுதிகளை நிறைவேற்றுவது, தான் ஏற்றுக்கொண்ட கொள்கையிலும் கருத்திலும் உறுதியாக நிலைத்து நின்று செயல்படுவது, தன்னிடம் தரப்பட்ட இரகசியங்கள், நம்பிக்கை பொறுப்புக்கள் என்பவற்றைப் பேணிப் பாதுகாப்பது, உளத்தூய்மையுடன்-அல்லாஹ்வுக்கென்றே எவ்விடயத்திலும் நடந்து கொள்வது என்பவை எவனிடம் குடிகொண்டுள்ளதோ அவன் அனைத்து மக்களையும் வென்று விடுவான்; அனைத்து உள்ளங்களுக்கும் நல்லவனாக, புனிதமானவனாகத் தென்படுவான் என்பதில் ஐயமில்லை.

எல்லாவற்றுக்கும் மேலாக அல்லாஹ்வின் அன்பும் ஆதரவும் அத்தகையவனுக்குக் கிடைக்கும். அல்லாஹ் எமது ஒவ்வொரு அசைவையும் அவதானித்து வருகிறான். நாம் எப்படி சிந்திக்கிறோம், எப்படி செயல் படுகிறோம் என்பவை அவனுக்கு இரகசியமானவையல்ல. கருணையும் வல்லமையும் படைத்த அவன், தனது கட்டளைகளுக்கு மதிப்பளித்து எவன் செயல்படுவதைக் காண்கிறானோ அவனுக்கு அருள்மாறிப் பொழிவான்; அவனை மேன்மையடையச் செய்வான்; மற்றோர் அவனை மதித்து நடக்கும்படி செய்வான்; அவனது பணிகளில் அயராது ஈடுபட்டுழைக்க ஊக்கப்படுத்துவான். எனவே, நாம், நம்பிக்கை. நாணயத்தோடு வாழப்பழகிக்கொள்ள வேண்டும்.

ரசூல் (ஸல்) அவர்கள் இயம்பினார்கள் :

''ஒரு நயவஞ்சகனான முஸ்லிமுக்குரிய அடையாளங்கள் மூன்று: அவன் தொழுதாலும், நோன்பு நோற்றாலும், 'தான் முஸ்லிம்' என வாதித்தாலும் சரியே அவன் பேசினால் பொய் பேசுவான்; வாக்களித்தால் மாறு செய்வான்; நம்பினால் வஞ்சிப்பான்.'' (முஸ்லிம்)

இந்த நபிமொழியிலிருந்து வாக்குறுதியை பேணிநடந்து கொள்வதும், நம்பிக்கை பொறுப்புக்களை நாணயமாக நிறைவேற்றுவதும் எவ்வளவு முக்கியமான அறப்பணிகள் என்பதை சற்று சிந்தித்துப் பாருங்கள்.

இந்த நபிமொழியில் 'பொய் பேசுவதும் நயவஞ்சகச் செயல்' என்று குறிப்பிடப் பட்டுள்ளது. எனவே, இதனைத் தவிர்த்து 'உண்மை பேச வேண்டும்' என்ற உணர்வுடனும், உறுதியுடனும் செயற்பட்டாலே எமது வாழ்வின் ஏனைய எல்லா அம்சங்களும் தூய்மை அடைந்துவிடும்.

ஒரு நல்ல உதாரணத்தைக் கேளுங்கள் :

நபி (ஸல்) அவர்கள் மக்காவில் இருக்கும்போது முஸ்லிம்கள் மட்டுமன்றி எதிரிகளும் தமது பொருட்களை பாதுகாக்கும் பொருட்டு அவர்களிடம் கொடுத்து வைத்திருந்தனர். இந்த நிலையில்தான் அவர்கள் மக்காவை விட்டு மதீனாவுக்குச் செல்லும்படியான பயங்கர சூழல் உருவானது.

அன்றொரு நாள் இரவு. எதிரிகள் நபி (ஸல்) அவர்களின் இல்லத்தை முற்றுகையிட்டனர். நபிகளாரை கொன்றுவிட வேண்டும் என்பது எதிரிகளின் எண்ணம். எந்த நிமிடத்திலும் எதுவும் நிகழ்ந்துவிடலாம் என்ற பதட்ட நிலை. இத்தகைய பயங்கர, உணர்ச்சிமிக்கக் கட்டமொன்று இஸ்லாமிய வரலாற்றிலேயே இருந்திருக்க முடியாது.

இந்த இக்கட்டான சூழலில் அந்த இரவே நபி (ஸல்) அவர்கள் வெளியேறிவிட வேண்டும் என்ற வேளையில்

(16-ம் பக்கம் பார்க்க)

# தியாகம் இன்றி உயர்ச்சி இல்லை

இஸ்லாம் அன்று உலகில் ஒரு மாபெரும் சக்தியாக, ஒப்பில்லா கொள்கைத்திட்டமாக, பெரும் பெரும் சக்கராதிபத்தியங்களை எல்லாம் தன்வயப்படுத்தி எழுச்சிமிக்க சமுதாயத்தை உருவாக்கியது என்றால் அதன் ஆரம்ப அங்கத்தவர்களின் தியாகங்கள்தான் காரணம் எனலாம்.

அவர்களின் வரலாற்றிலே பல நிகழ்ச்சிகளை காணக்கூடியதாக இருக்கிறது. உயிரையும், உடலையும், உடைமைகளையும் இஸ்லாத்திற்காக அர்ப்பணம் செய்தார்கள். அவ்வாறு செய்தவர்களில் ஒருவர்தான் ஹஸ்ரத் முஸ்அப் இப்னுஉமய்ர் (ரலி)அவர்கள்.

இஸ்லாத்தின் ஆரம்ப காலத்திலே தனது குடும்பத்தினருக்கு தெரியாமல் அவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார். இஸ்லாத்தை ஏற்ற செய்தி குடும்பத்தினர் அறியவே அவரை வீட்டில் கட்டி வைத்துவிட்டார்கள். சில நாட்களுக்குப் பின் சந்தர்ப்பம் கிடைத்தவுடன் அவர் தப்பியோடிவிட்டார்.

உஹத் யுத்தத்தில் முஸ்லிம்களின் கொடியை தாங்க வேண்டிய பொறுப்பு இவருக்கே ஒப்படைக்கப்பட்டது. அந்த யுத்தத்தில் முஸ்லிம்கள் நிலைதடுமாறி சிதறுண்டு போன சமயத்தில் கூட, நின்ற இடத்திலேயே தைரியமாக நின்று கொண்டிருந்தார்கள். எதிரியொருவன், அவர்களை நெருங்கி, அக்கொடியை வீழ்த்தி முஸ்லிம்களுடைய தோல்வியை ஊர்ஜிதப்படுத்துவதற்காக அவருடைய கையை வெட்டிவிட்டான். உடனே அவர் அக்கொடியை மற்றோர் கையினால் தாங்கினார். அவன் மற்ற கையையும் வெட்டிவிட்டான். இருகைகளையும் இழந்த ஸஹாபி அவர்கள் தனது இரண்டு புயங்களையும் ஒன்று இணைத்துத் தமது மார்பு மீது இக்கொடியை தாங்கி நின்றார்கள். அப்பால் அவன் அவர்களை அம்பெய்து ஸஹீதாக்கிவிட்டான். அவர்கள் உயிர் பிரியும் வரை அந்தக்கொடியை கீழே விடவில்லை.

இவ்வாறாக ஸஹாபாக்கள் தங்கள் இரத்தத்தை ஓட்டியே இஸ்லாத்தை வளர்த்தெடுத்தார்கள்.

''சன்மார்க்கத்திற்காக சமர் புரியாமலும் சமர்புரிய எண்ணாமலும் மரணமடையும் ஒருவன், ஜாஹிலியத்தில் மரணமடைந்தவனாவான்'' என்று முஹம்மது (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

மீண்டும் இஸ்லாம் உலகிலே சக்திமிக்க கொள்கையாக மலர வேண்டும் என்றால் இன்றைய முஸ்லிம்கள் பல தியாகங்களை மேற்கொள்ளவேண்டும்.

''நிச்சயமாக அல்லாஹ் விசுவாசிகளிடமிருந்து அவர்களின் உயிர், பொருள் ஆகியவற்றை அவர்கட்கு சுவனம் உண்டு. என்னும் விலை கொடுத்து வாங்கிவிட்டான்'
(அல்குர்ஆன் 9: 111)

பேராசிரியர் முஹம்மது குதுப் அவர்கள் கூறுகிறார்கள்:

''நாம் எமக்கென்று தேர்ந்து எடுத்துக் கொண்டுள்ள பாதை கரடுமுரடானது; கல்லும் முள்ளும் நிறைந்தது என்பதை நாம் அறிவோம். வியர்வையும் இரத்தமும், கண்ணீரும் சிந்தாமல் அப்பாதையில் செல்ல முடியாது. அப்பாதையில் செல்வதற்கு நாம் கடும் சோதனைகளையும் உயிர்த் தியாகமும் செய்யத் தயாராக இருக்க வேண்டும். சுருங்கச் சொன்னால் எம்மாலான முழு முயற்சியும் செய்யவேண்டும்.

(''நபியே, விசுவாசிகளை நோக்கிக்) கூறும்; உங்களுடைய தந்தைகளும், உங்கள் மக்களும், சகோதரர்களும், மனைவியரும், குடும்பங்களும் நீங்கள் சம்பாதித்து வைத்திருக்கும் பொருள்களும் நஷ்டமாகி விடுமோ என நீங்கள் பயந்து எச்சரிக்கையுடன் செய்துவரும் வர்த்தகமும், உங்களுக்கு மிக்க விருப்பமுள்ள வீடுகளும் அல்லாஹ்வையும், அவனுடைய தூதரையும் விடவும், அல்லாஹ்வுடைய பாதையில் யுத்தம் புரிவதை விடவும் உங்களுக்கு மிக்க விருப்பமானவையாயிருந்தால் (நீங்கள் உண்மை விசுவாசிகளல்ல உங்கள் தண்டனைகளைப் பற்றிய)அல்லாஹ்வின் கட்டளை வரும் வரை எதிர்பார்த்திருங்கள், பாவிகளை அல்லாஹ் நேரான வழியில் செலுத்துவதில்லை''
(அல்குர்ஆன் 9: 24)

முனீரு ஹுஸைன்
புத்தளம்.

---

## தியாகம்

ஓ
தியாக புஷ்பங்களே!
நீங்கள்;
சீமெந்து சாந்துடன்,
பிணைந்த
சிறு சிறு
கருங் கற்களாலும்
உடைக்க முடியாத
கொங்கிறீற்றுக்கள்

— நசீதா




ம

அன்பு மாணவனே,

நீங்கள் ஒரு சமூகத்தின்
முஸ்லிம் சமூகம் உங்களி
பார்த்து நிற்கின்றது.

இந்த சேவையை உ
பாடுடைய வாழ்வினால் ம
யும், ஏனெனில் இவ்விரு
அத்திவாரங்கள். இவை
னேறவே முடியாது; முன்

இதனைக் கருத்தில்
கத்தை நோக்குங்கள்.
தடம் புரண்டுள்ளது. அ
வரும் தனக்கென தனி
கொண்டுள்ளனர். அவர்
பலருண்டு.

இதன் காரணமாக
படையில் கட்டியெழுப்புவ
யுள்ளன. பிளவுகள், பி
எங்கும் தலை தூக்கி, வா
சிதைந்து காணப்படுகின்ற

இனி இந்த சமூகத்
சிப் பாதையில் அழைத்
நிலையை நோக்குங்கள்.

உங்களில் வெகு சில
செயற்படுகின்றனர். ஆ
வலையில் சிக்கிவிட்ட புள்ளி
கொள்கைப் பிடிப்பு; சமூ
மாதிரி வாழ்வு என்பன
றன. குறைந்த பட்சம் மா
யாவது சரிவரச் செய்வதி
னர்.

குறிப்பாக, மாணவி
ளது. அவர்கள் கொண்டு
ரிக போக்கு பல விபரீத
தோன்றுகிறது. குறிப்பா
கற்றுவரும் மாணவிகளு
அளவு கடந்துவிட்டது.

இந்த நிலை தொட
செய்வது எப்படிப் போ
பாதுகாத்துக் கொள்வது
கள் மாணவ சமூதாயத்
அமைந்துவிடலாம்.

சிந்தியுங்கள்; செயற்

# ணவர்
# ன்றம்

வியே,

ள்; அந்த சமூகம்—ஆமாம்,
ளப்பரிய சேவையை எதிர்

ட்டுப்பாடான, ஒழுக்க மேம்
மே நிறைவு செய்ய முடி
சங்களும் ஒரு சமூகத்தின்
த சமூகமொன்று முன்
றலும் நிலைத்து நிற்காது.

டு, முதலில் உங்கள் சமூ
அதன் சிந்தனைப்போக்கு
உறுப்பினர்கள் ஒவ்வொரு
பாதைகளை அமைத்துக்
பின்னால் செல்வதற்குப்

கத்தை இஸ்லாமிய அடிப்
பரும் சிரமங்கள் தோன்றி
ா, பிரச்சினைகள் என்பன
ஒவ்வொரு துறையும்

ற்றியமைத்து மறுமலர்ச்
செல்ல வேண்டிய உங்கள்

ம் பொறுப்பை உணர்ந்து
அதிகமானோர் மாற்றான்
ப் போல் இருக்கின்றனர்.
று; ஒழுக்க உணர்வு, முன்
ளிடத்தில் அருகி வருகின்
தின் கட்டாயக் கடமைகளை
ர் அசிரத்தை காட்டுகின்ற

நிலை பரிதாபகரமாகவுள்
கண்மூடித்தனமான நாக
களுக்கு வித்திடும் போல்
பல்கலைக் கழக மட்டத்தில்
கு சிலரின் சுதந்திர தாகம்

றல் சமூகத்திற்கு நன்மை
. தீமைகளாவது செய்யாது
மாகலாம். சிலரின் தவறு
மூகத்தில் கரிபூசுவதாகவும்

ள்.

## நல்ல வேளை

ஓ! இன்று
உங்களுக்கு நல்லவேளை,

ஒரே குறியில் உங்களை
தீர்த்துக் கட்ட
எங்கள்
துடிக்கும் கரங்களில்
துப்பாக்கி ரவைகள் இல்லை!
இது தான் உங்களுக்கு
நல்ல வேளை!

குற்றம் புரிவோரை
கொடும் கரத்தாற் பிடித்து
தண்டனை செய்கிறது
இஸ்லாம் என்று
சீற்றம் கொள்வோரை

எம்மதமும் சம்மதம் தான்
எல்லோரும் ஓர் இனம் தான்
என்று இங்கே
நாஸ்திகம் பேசுவோரை

வயிற்றை வளர்க்க —தீன்
கயிற்றை மறந்து
வாதம் புரிந்து
வழிகேட்டில் மக்களை
வழி நடத்தும் உலமாக்களை'.

பூரண இஸ்லாம் தான்
பூவுலகில் தேவை என்று
காரணம் சொல்வோரை
பூ! என்று உமிழ்ந்து
இகழ்ந்து உரைப்போரை...

ஒரே வெடியில்
தீர்த்துக் கட்ட
ஆ! இன்று எங்கள்
துடிக்கும் கரங்களில்
துப்பாக்கி ரவைகள்
இல்லை? அதனால்தான்;

உங்களுக்கு இது
நல்ல வேளை;

—எம். ஏ. அப்துல் மஜீத்

# இறைதூதருக்கு இதயம் பணிகின்றது!

அவர் ஒரு

- ★ குணக் குன்று,
- ★ ஒழுக்கத்தின் சிகரம்
- ★ அன்பின் உறைவிடம்
- ★ பண்பிற்கு நெறி வகுத்தவர்
- ★ நேர்மையான வர்த்தகர்
- ★ நல்லதொரு குடும்பத் தலைவர்
- ★ வீரம் மிகுந்த தளபதி
- ★ நீதிக்கு வாழ்வளித்த வள்ளல்
- ★ சிறப்புமிக்க நிர்வாகி.

இவ்வாறு, நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை முஸ்லிம்கள் மட்டுமன்றி, முஸ்லிமல்லாதாரும் புகழ்ந்தேத்துவதை கேட்கின்றோம். படிக்கின்றோம்.

இவை அனைத்தும்

- ★ சரியான மதிப்பீடுகள்
- ★ நியாயமான கருத்துக்கள்
- ★ மனிதத் தன்மையை மதிக்கும் கூற்றுக்கள்

என்பதனை எவரும் இதுகாலவரையிலும் மறுக்கவில்லை; மறுக்கவும் முடியாது.

எனினும், சிந்திக்க வேண்டியது இதுதான்:

ரசூல் (ஸல்) அவர்கள் இத்தனை சிறப்பம்சங்களும் பொருந்திய ஒரு தனி மனிதராக, துறவியாக, ஞானியாக ஒதுங்கி வாழவில்லை. மாறாக, இவையனைத்தும் ஒருங்கே அமையப்பெற்ற ஈடு இணையற்ற சமுதாயமொன்றையே நிறுவினார்கள். இதில்தான் அவர்களது ஒப்புயர்வற்ற தன்மைகள் மிளிர்ந்து நிற்கின்றன.

எனவே, அன்னாரைப் பின்பற்ற ஆர்வம் கொள்பவர்கள் அவர்களின் இந்த நடமுறையையே அனுசரித்து, ஆவன செய்தல் வேண்டும்.

நல்ல தனி மனிதர்கள் இருந்தும், அவர்களுக்கு மாறுபட்ட சமுதாய சிந்தனைகள் அதிகாரம் செலுத்துமானால், அந்த நல்லவர்களால்கூட எதுவும் செய்ய முடியாது போகலாம்.

ஆகவே,

இது பற்றி ஒவ்வொரு முஸ்லிமும் சிந்திக்கவேண்டும், தமது பேதமைகளை மறந்து இறை நெறிப் பாதையில் ஒன்றுகூடவேண்டும்.

இதுதான், நபி மணி (ஸல்) அவர்களுக்கு நாம் அளிக்கும் மிகச் சிறந்த கௌரவமாக இருக்கும்.

—ஜே. எம். நிவாஸ்
பேராதனை பல்கலைக் கழகம்

# முன்மாதிரியாக வாழ்ந்த முஹம்மத் (ஸல்) அவர்கள்

முஹம்மத் (ஸல்) அவர்களைப் பின்பற்றுவதில், அவர்களது அன்புத் தோழர்கள் காட்டிய ஆர்வம் வியக்கத்தக்கது. அத்தகைய பற்றும் பாசமும் உலகில் பிறந்த வேறெந்தத் தலைவருக்கும் கிடைத்திருக்காது என துணிந்து கூறலாம்.

நபி (ஸல்) அவர்கள் 'செய்யுங்கள்' எனப் பணித்தவற்றை ஆர்வத்தோடு செய்தார்கள். ''வேண்டாம்'' எனத் தடுத்தவற்றை விட்டு தூர ஒதுங்கி விட்டார்கள். நபிகளாரது ஒவ்வொரு சொல்லும் செயலும், கண் அசைவும், அங்க அசைவும் கூட நபித் தோழர்களுக்கு முன்மாதிரிகளாக அமைந்தன.

அல்லாஹ்வின் தூதர் அணிந்திருந்த அங்கியின் இணைப்பு கழன்றிருப்பதைக் கண்ணுற்ற ஒரு சஹாபி, தம் அங்கியின் இணைப்பையும் கழற்றிவிட்டுக் கொண்டார்.

ஒருமுறை நபி (ஸல்) அவர்கள் தம் குதிரைமீது ஏறி அமர்ந்ததும் புன்முறுவலித்தார்கள். இதைக் கண்ட அலி (ரலி) அவர்கள், தாமும் குதிரைமீது ஏறி அமர்ந்ததும் அது போலவே புன்முறுவலித்தார்கள்.

ரசூல் (ஸல்) அவர்கள் எப்படி சிரித்தார்கள்; எப்படி பேசினார்கள்; எப்படி உண்டார்கள்; எப்படி உறங்கினார்கள்; எப்படி அடுத்த மக்களுடன் உறவு கொண்டார்கள்; எப்படி வியாபாரம் செய்தார்கள்; எப்படி குடும்பம் நடத்தினார்கள் என்பவற்றையெல்லாம் நுணுக்கமாக அவதானித்து, அவற்றை தம் வாழ்விலும் அமுல்படுத்திய நபித் தோழர்கள், நபிகளாரின் தாடியில் இருந்த நரை முடிகளைக்கூட எண்ணிக் கணக்கிடத் தவறவில்லை.

நபி (ஸல்) அவர்களை அவர்களது தோழர்கள் இத்துணை ஆர்வத்துடன் பின்பற்றிய தன் தாத்பரியம் என்ன? சற்று சிந்தித்தால் உண்மையை விளங்கிக்கொள்ள முடியும்.

நபி (ஸல்) அவர்களது வாழ்வு தூய்மையாக இருந்தது. அவர்கள் பொய் பேசவில்லை; நம்பியவர்களுக்கு மாறு செய்யவில்லை; தேவையுள்ளோருக்கு உதவிசெய்ய பின்வாங்கவில்லை; அடுத்தவரின் பொருள்களை அபகரிக்கவில்லை; கூடாத செயல்களில் ஈடுபடவில்லை; பெருமையடித்துக் கொள்ளவில்லை; 'நான்' என்ற மமதை கொண்டு செயற்படவில்லை. ஒட்டுமொத்தமாக அவர்களது வாழ்வில் எந்தவகையான கறையும் படிந்திருக்கவில்லை.

மாறாக, எப்பொழுதும் எவருக்கும் பயனுள்ள ஒருவராகவே வாழ்ந்தார்கள். அவர்களை நம்பிய எதிரிகள் கூட நஷ்டமடையவில்லை. அவர்களுக்கு துன்பம் விளைவித்த பாதகர்கள்கூட அவர்களால் எத்துன்பத்திற்கும் ஆளாக்கப்படவில்லை.

இந்த உயரிய நற்பண்புகள் தான் அன்றைய நபித் தோழர்களைக் கவர்ந்தது. எனவே, நபி (ஸல்) அவர்களை அணுவணுவாக அவர்கள் பின்பற்றியதில் வியப்பேதும் இருக்கமுடியாது.

சிறு சிறு அம்சங்களில் மட்டுமன்றி, தம்முடைய தலைவிதியை நிர்ணயிக்கும் அதிகார பலத்தையும் கொடுத்து, இறையாட்சியை அமைப்பதற்கு அன்பு நபி (ஸல்) அவர்களுக்கு ஒத்துழைப்பு நல்கினார்கள் சஹாபாக்கள். அவர்களது வாழ்வு மலர்ந்தது.

இந்த அழகிய முன்மாதிரி இன்றும் மறைந்துவிடவில்லை. உலகின் எக்கோணத்தில் வாழ்பவராயினும் இதிலிருந்து பயன்பெற நினைத்தால், அப்பயன் பூரணமாகக் கிடைத்துவிடும். இதனை விட்டு விட்டு யாராவது தம் மனப்போக்கில் அல்லது மாறுபட்ட கொள்கைகளில் கருத்து செலுத்துவார்களாயின் அழிவு அவர்களையே அண்டிவிடுமல்லாது இந்த களங்கமற்ற நபி (ஸல்) அவர்களை ஒருபோதும் அண்டமாட்டாது.

என்ன! நாம் இந்த அழகிய முன்மாதிரியிலிருந்து பயன்பெறத் தயாராக உள்ளோமா?

ஏ. எச். எம். அஸாத்
சவூதி அரேபியா

## வாழ்வுக்கு ஒளியூட்டும்...

(13-ம் பக்கத் தொடர்ச்சி)

கூட தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட அமானிதப் பொருட்களை அவர்கள் மறந்துவிடவில்லை.

கொஞ்சம் கற்பனை செய்து பாருங்கள். அந்த வேதனையும் சோதனையும் நிரம்பிய கட்டத்தை உங்கள் மனக் கண் கொண்டு வந்து, எண்ணிப் பாருங்கள். உங்கள் உள்ளம் அந்த நபிக்கு ஏற்பட்டுள்ள நிலைமையை நினைத்து அழும். அந்த அளவு பாதிக்கப்பட்ட வேளையிலும் அவர்கள் அந்த அமானிதப் பொருட்களை தன்னோடு எடுத்துச் செல்லவில்லை; அவற்றை நாசம் செய்யவில்லை; தூர எறிந்துவிடவில்லை, மாறாக, அவற்றை அலி (ரலி) அவர்களிடம் ஒப்படைத்து, அடுத்த நாள் உரியவர்களிடம் கொடுத்துவிடும்படி ஆணைப் பிறப்பித்து விட்டு சென்று விட்டார்கள்.

தம் உயிருக்கு ஆபத்து நேர்ந்துவிட்ட கட்டத்திலும் நபி (ஸல்) அவர்கள் தம்மீது சுமத்தப்பட்ட பொறுப்புக்களை மறந்துவிடவில்லை. இத்தகையதொரு கட்டத்தில் இப்படி நடந்துகொள்வது இலேசானதல்ல என்பதை நீங்களே ஒப்புக்கொள்வீர்கள். அந்த அளவுக்கு அவர்களிடம் தூய மனம் இருந்தது; அல்லாஹ்விடம் தம் செயல்கள் குறித்து விளக்கம் கொடுக்க வேண்டுமே என்ற உணர்வு இருந்தது.

இதுதான் எமது பண்பாகவும், எம்மை வழி நடத்தும் தூய நெறியாகவும் அமைதல் வேண்டும்.

**ஒரு முஸ்லிம்**

★ எப்பொழுதும் உண்மை பேசுவதற்கும்

★ அளித்த வாக்கு, செய்த உடன்படிக்கை- ஏற்றுக் கொண்ட நம்பிக்கைப் பொறுப்புக்கள் என்பவற்றை நிறைவேற்றுவதற்கும்

★ இவற்றின் மூலம் 'முஸ்லிம்' என்ற சொல்லுக்கே இலக்கணம் வகுத்து வாழ்வதற்கும்

**ஒருபோதும் தயங்கி பின்னடைய மாட்டான்.**

## வாழ்ந்தால்

# இப்படித்தான் வாழ வேண்டும்

மௌலானா அ.ஃப்ஸல் ஹுஸைன்
(எம். ஏ. எல். டி.)

ரசூல் (ஸல்) அவர்கள் மிகவும் நல்லவர். அவர்களின் செயல்கள் எல்லாமே நல்லவை. இம்மை மறுமையின் நன்மைகள் அனைத்தும் அவர்களிடம் குடி கொண்டிருந்தன.

ரசூல் (ஸல்) அவர்களை அல்லாஹுதஆலாவே புகழ்ந்திருக்கிறான். ஒருமுறை அவர்களின் அன்பு மனைவி ஆயிஷா சித்தீக்கா(ரலி) அவர்களிடம் ''நபி (ஸல்) அவர்களின் குண நலன்கள் எப்படி இருந்தன?'' என்று ஒருவர் வினவினார், இதற்கு விடையளித்த அன்னை ஆயிஷா(ரலி) அவர்கள் ''குர்ஆனின் போதனைகளுக்கு முன்மாதிரியாகவே நபி (ஸல்) அவர்கள் விளங்கினார்கள்'' எனக் கூறினார்கள்.

ரசூல் (ஸல்) அவர்கள் எப்போதும் தூய்மையாக இருப்பார்கள். தூய்மையாக இருக்கும்படி (மற்றவர்களுக்கும்) போதித்தார்கள், 'தூய்மை ஈமானின் பாதி' என்று கூறுவார்கள்; குளிப்பார்கள். தூய்மையான ஆடைகளை அணிவார்கள். நறுமணம்பூசிக் கொள்வார்கள். அன்றாடம் குச்சியால்பல்துலக்குவார்கள்.

அவர்கள் உணவை ஆர்வத்துடன் உட்கொள்வார்கள். உணவைக் குறை சொல்ல மாட்டார்கள். தட்டின் முன் பகுதியிலிருந்து சாப்பிடத் துவங்குவார்கள், தட்டில் இங்கும் அங்கும் கைபோட மாட்டார்கள். சாப்பிடும் போது தரையில் கை ஊன்ற மாட்டார்கள், பசியால் அதிகமாக உண்ண மாட்டார்கள். சாப்பிட்டவுடன் தூங்கி விட மாட்டார்கள், நிரம்பியவயிற்றில் மேலும் சாப்பிடமாட்டார்கள். அப்படி சாப்பிடுவதைத் தடுத்தார்கள் ,,இரைப்பைதான் நோய்களின் வித்து'' என்றுதான் கூறுவார்கள்.

நபி(ஸல்) அவர்கள், தம் வேலைகளைத் தாமே செய்வார்கள் இன்னொருவரிடம் உதவி கேட்க மாட்டார்கள். மற்றவர் வேலையையும் தாமே செய்து விடுவார்கள். பிராணிகளுக்குத் தீனிபோடுவார்கள். அவற்றைப் பேணிப் பாதுகாப்பார்கள். அவற்றின் பாலைக் கறப்பார்கள். தொழுவத்தைக் கழுவித் துப்பரவு செய்வார்கள். ரொட்டிக்கு மாவு பிசைவார்கள். தம் ஆடைகளைத் தாமே துவைத்துக் கொள்வார்கள். கடைத் தெருவுக்குச் சென்று தேவையான பொருட்களை வாங்கி வருவார்கள். காலணிகளைத் தாமே செப்பனிட்டுக் கொள்வார்கள். வீட்டைப் பழுது பார்த்துக் கொள்வார்கள். ஒரு போதும் சோம்பிப் போய் அமர மாட்டார்கள். ஏதாவதொரு வேலையில் ஈடுபட்டிருப்பார்கள். எல்லா வேலைகளையும் செய்வார்கள். மற்றவர்களிடம்வேலைவாங்குவதை விரும்ப மாட்டார்கள்.

அவர்கள் மிகவும் எளிமையாக இருப்பார்கள். கண்ணைக் கவரும் ஆடைகளை அணிய மாட்டார்கள். பொன்னும் பட்டும் அணியக் கூடாதென ஆண்களைத் தடுப்பார்கள். முரட்டு ஆடைகளையே அணிவார்கள். எளிமையான படுக்கையில் உறங்குவார்கள். வீட்டை அளவுக்கு மீறிஅலங்கரிப்பதை விரும்பமாட்டார்கள். ஒருமுறை நபி (ஸல்) அவர்களது அன்பு மகள் பாத்திமா (ரலி)அவர்கள் விருந்து வைத்தார்கள். நபிகளார் விருந்துக்குச் சென்றார்கள் அங்கு சுவர்களில் திரைகள் தொங்கிக் கொண்டிருந்தன. நபி(ஸல்) அவர்கள் கோபத்துடன் திரும்பிச் சென்று விட்டார்கள். கோபத்திற்கான காரணத்தை வினவியபோது அலங்காரம் மிகுந்தஇடங்களுக்குச் செல்வது நபியின்மாண்புக்கு உகந்ததல்ல.' என்று நபி(ஸல்) அவர்களிடமிருந்து விடை வந்தது.

ஒரு முறை தன்வீட்டுக்குவந்தார்கள். அன்னை ஆயிஷா (ரலி) அவர்கள் முகட்டின் கீழ்த் துணியைக் கட்டி அலங்கரித்து வைத்திருப்பதைக் கண்டார்கள் உடனே அந்தத் துணியைக் கிழித்துவிட்டார்கள். ''அல்லாஹ் செங்கல்லுக்கு ஆடையணிவிப்பதற்காகச் செல்வத்தைத் தரவில்லை'' என்று கூறினார்கள்.

நபிகளார் தம் குடும்பப் பெரியார்களுக்கு மிகவும் மதிப்பளிப்பார்கள். ஒருமுறை அவர்களது செவிலித் தாய் வந்திருந்தார்கள். நபிகளார் தம் பால்குடி அன்னையரை மிகவும் கௌரவித்தார்கள். அவர்கள் அமர்வதற்காகத் தம் போர்வையை விரித்துப் போட்டார்கள். இது போல் மற்றொருமுறை நபி (ஸல்) அவர்கள் அமர்ந்திருந்தார்கள். அச்சமயம் வளர்ப்புத் தந்தை வீட்டுக்கு வந்து விட்டார். நபிகளார் அவர் அமர்வதற்காகப்போர்வையின் ஒரு பகுதியை விரித்து விட்டார்கள். சிறிது நேரத்தில் வளர்ப்புத் தாய் வந்தார்கள், நபிகளார் போர்வையின் இரண்டாம் பகுதியையும் விரித்து விட்டார்கள். இறுதியில் நபிகளாரின் பால்குடி சகோதரர் வந்து விட்டார். உடனே நபி (ஸல்) அவர்கள் எழுந்து நின்று, சகோதரரை தம் இடத்தில் அமரச்செய்தார்கள்.

நபி (ஸல்) அவர்கள் வாக்களித்துவிட்டால் அதை அவசியம் நிறைவேற்றி விடுவார்கள். அவர்கள் நபியாவதற்கு முன்னால் நடந்த நிகழ்ச்சியொன்று.

ஒருவன் நபி (ஸல்) அவர்களிடம் ஏதோ வியாபார விஷயமாக வந்தான். நபிகளாரை உட்கார வைத்துவிட்டு ஏதோ வேலையாகச் சென்றுவிட்டான். போகும் போது ''இங்கேயே இருங்கள், இதோ வந்து விடுகிறேன்'' என்று கூறிவிட்டுச் சென்றான். அவன் மூன்று நாட்கள் கழித்துத் திரும்பி வந்தான். நபிகளாரோ அவன் விட்டுச் சென்ற இடத்திலேயே அமர்ந்த வண்ணம் அவனை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

நபி (ஸல்) அவர்கள் யாரையும் பழி வாங்குவதில்லை. மக்காவாசிகள் அவர்களை மிகவும் துன்புறுத்தினார்கள்; அடித்தார்கள்; வீட்டைவிட்டு வெளியேற்றினார்கள்; கொலை செய்யவும் துணிந்தார்கள். இருந்தும் நபிகளார் அவர்களை வென்று விட்ட பின்னர், பழிவாங்க

(20-ம் பக்கம் பார்க்க)

## ஏய்த்து விடப்பட்ட தொழிலாளர் வர்க்கத்தை

# ஏற்றி விடுகின்றது இஸ்லாம்!

கேள்வி;- உங்களைப் பற்றியும், நீங்கள் எப்படி தொழிற் சங்கத் துறையில் ஈடுபாடு கொண்டீர்கள் என்பது பற்றியும், எமது வாசகர்களுக்கு விளக்குவீர்களா?

பதில்-: 1948ஆம் ஆண்டு நான் ஒரு மாணவனுகவும், முஸ்லிம் லீக் இயக்கத்தின் ஒரு ஊழியனுகவும் ஜமாஅதே இஸ்லாமி இயக்கத்தின் எதிரியாகவும் இருந்தேன். அப்போது மௌலானு மௌதூதி (ரஹ்) அவர்கள் இஸ்லாம் தான் நாட்டின் அரசமைப்புச் சட்டமாக வர வேண்டும் எனும் கோரிக்கையின் அடிப்படையில் நாடெங்கும் பிரசாரம் செய்து கொண்டிருந்தார். அந்த அடிப்படையில் 1948-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அவர் கராச்சியில் ஒரு பொதுக்கூட்டத்தில் உரை நிகழ்த்திஞர். அன்று அவரது கருத்துக்களால் நான் கவரப்பட்டேன். எனவே, மௌலானுவை எதிர்க்கும் எனது மனப்பான்மையைக் கைவிட்டேன். இருந்தாலும் அதன் பின்னர் மௌலானுவுடன் எனக்கு எந்தத் தொடர்புமே ஏற்படவில்லை. 1950ஆம் ஆண்டு ஹைதராபாத்திலுள்ள அரசாங்கக் கல்லூரியொன்றில் சேர்ந்து படிக்கத் தொடங்கினேன். அப்போது மௌலானுவின் 'தன்கீஹாத்' எனும் நூலைப் படித்தேன். அது என்னைக் கவர்ந்தது. அடுத்த ஏழு நாட்களுக்குள் மௌலானு மௌதூதி (ரஹ்) அவர்களால் எழுதப்பட்ட புத்தகங்கள் அனைத்தையும் இரவு பகலாக இருந்து படித்து முடித்தேன். அதன் பின்னர் இஸ்லாமி ஜம்இய்யதே தலபா மாணவர் இயக்கத்தில் ஒரு ருகுன் அங்கத்தவராகி பின்னர் மத்திய மஜ்லிஸ ஷூராவில் ஓர் அங்கத்தவனுனேன். 1950ஆம் ஆண்டு முதல் தொழிற் சங்க நடவடிக்கைகளில் ஈடுபாடு கொள்ளத் தொடங்கினேன். 1960ஆம் ஆண்டு மௌலானு மௌதூதி (ரஹ்)அவர்களின் ஆலோசனையின் பேரில் அத்துறையிலிருந்து ஒதுங்கி ஒரு கல்லூரியின் அதிபரானேன். மீண்டும் மௌலானுவின் ஆலோசனைக்கமைய 1969ஆம் ஆண்டு தொழிற்சங்கத்துறையில் ஈடுபாடு கொண்டுள்ளேன். அதே வேளை தற்போது ஜமாஅதே இஸ்லாமியில் ஒரு ருகுன் அங்கத்தவராகவும் உள்ளேன்.

> 'பாகிஸ்தான் தேசிய தொழிலாளர் சம்மேளனம்' பாகிஸ்தானிலேயே மிகவும் சக்திவாய்ந்த தொழிலாளர் நிறுவனமாகும். இதில் சுமார் 5 இலட்சம் தொழிலாளர்கள் அங்கம் வகிக்கிருர்கள். அதனை தலைமை தாங்கி நடத்துபவர் பாகிஸ்தான் ஜமாஅதே இஸ்லாமியின் முக்கிய உறுப்பினர்களுள் ஒருவரான பேராசிரியர் முஹம்மத் சஃபீ மலீக் என்பவராவர்.
>
> நமது சகோதரர் வை. ஐ. எம். ஹனீஸ் அவரைப் பேட்டி கண்டு எழுதுகிருர்.
>
> — ஆசிரியர்

கேள்வி:- உங்கள் தொழிலாளர் சம்மேளனம் எப்போது ஆரம்பிக்கப்பட்டது. அதன் இப்போதைய பலம் என்ன?

பதில்;- கடந்த 15 வருடங்களுக்கு முன்னர் தொழிற் சங்க நடவடிக்கை என்பது கம்யூனிஸ்ட்களுக்கு மட்டும் உரிய ஒரு துறையாகவே இருந்து வந்தது. இத்தகைய நிலையில் 1969ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 9ஆந் திகதி 17 சிறிய தொழிற் சங்கங்களுடன் எமது சம்மேளனம் ஆரம்பிக்கப்பட்டது. அல்லாஹ்வின் அருளால் இப்போது பாகிஸ்தானில் இயங்குகின்ற சுமார் 500 தொழிற் சங்கங்களில் 380 தொழிற் சங்கங்கள் எமது சம்மேளனத்திலேயே அங்கம் வகிக்கின்றன. எமது சம்மேளனத்தில் சுமார் ஐந்து இலட்சம் தொழிலாளர்கள் அங்கம் வகிக்கிருர்கள். பாகிஸ்தானின் மிகப் பெரிய தொழிற் சங்கங்களாகிய பாகிஸ்தான் புகையிரத ஊழியர்கள் சங்கம், உருக்குத் தொழிலாளர்கள் சங்கம், மின் சக்தி ஊழியர்கள் சங்கம் அனைத்தும் எமது சம்மேளனத்திலேயே அங்கம் வகிக்கின்றன.

கேள்வி;- ஒரு இஸ்லாமிய இயக்கத்தின் அடிப்படை நோக்கம் உலகிலே அல்லாஹுத்தஆலாவின் வாழ்க்கை முறையை நிலைநாட்டுவதாகும். அந்த அடிப்படை நோக்கத்திற்கு தொழிற்சங்க நடவடிக்கை வழங்கக் கூடிய பங்களிப்பு என்ன?

பதில்: இஸ்லாம் உலகில் நிலைநாட்டப்படுவது என்பதன் பொருள் அது வாழ்வின் எல்லாத் துறைகளிலும் வரவேண்டும் என்பதாகும். எனவே: நாம் தொழிற்சங்க துறையிலும் இஸ்லாமிய அமைப்பைப் புகுத்தியுள்ளோம். அத்தோடு, தொழிற்சங்க நடவடிக்கையால் மட்டும் ஒரு முதலாளித்துவ நாட்டில் தொழிலாளர் பிரச்சினையை முற்ருகத் தீர்க்க முடியாது எனும் கருத்தையும் நாம் தொழிலாளர்கள் மத்தியில் தோற்றுவித்து வருகிருேம். எனவே அவர்களும் இஸ்லாமிய அமைப்பைத் தோற்றுவிக்கும் பணியில் தமது பங்களிப்பை வழங்க வேண்டிய அவசியத்தை உணர்கிருர்கள். நாம் அவர்களது பயிற்சிகளுக்கான ஏற்பாடுகளையும் செய்து வருகிருேம்.

கேள்வி:- பொதுவாக சர்வதேச அரங்கிலே தொழிற் சங்க நடவடிக்கைகள் பொதுஉடைமைவாதிகளுக்குரியதாகவே இருந்து வருகிறது என்று கூறினீர்களே. இந் நிலையில் தொழிலாளர்களின் சர்வதேச கருத்தரங்குகளில் தொழிலாளர் பிரச்சினைகளுக்குத் தீர்வாக இஸ்லாத்தை எப்படி நீங்கள் எடுத்து வைக்கிறீர்கள்.

பதில்;- சர்வதேச கருத்தரங்குகளில் நாம் கலந்து கொள்ளும் போதெல்லாம் இஸ்லாமிய கருத்தை ஆணித்தரமாக எடுத்துரைக்க நாம் பின் நின்றதில்லை. சில மாதங்களுக்கு முன்பு யுகோஸ்லேவியாவில் நடைபெற்ற ஒரு சர்வதேச தொழிலாளர் கருத்தரங்கில் நான் கலந்துகொண்டேன். யுகோஸ்லேவியா ஒரு சோஷலிஸ நாடு. ஆனுல் அங்கு தொழிலாளர்களுக்கு வீடு கட்டுவதற்கு 14% வட்டியுடன் தான் கடன் வழங்குகிருர்கள். ஆனுல் பாகிஸ்தானிலே தொழிலாளர்கள் வீடு கட்ட, வாகனம் வாங்க மற்றும் பல தேவைகளுக்கு வட்டியின்றியே கடன்பெறக் கூடிய வகையில் நாம் தொழில் வழங்குனர்களுடன் ஒரு கூட்டு ஒப்பந்தத்திற்கு வந்திருப்பதை எடுத்துக்

(20-ம் பக்கம் பார்க்க)

# இறைதூதர்மீது அன்பு கொள்வது எப்படி?

''தனது தனயன், தந்தை ஆகியோரை விடவும் மற்றெல்லா மனிதர்களை விடவும் உங்களில் ஒருவருக்கு நான் அதிகம் உவப்பானவனாய் ஆகாதவரையில் அவர் ஈமான் கொண்டவராகார்'' என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். இந்த ஹதீஸ் புகாரி, முஸ்லிம் கிரந்தங்களில் பதியப் பட்டுள்ளது.

ரஸூல் (ஸல்) அவர்கள் மீது மற்றெல்லாப் படைப்புகள், குழந்தைகள், தாய், தந்தை, மனித்குலம் ஆகிய அனைத்தையும் விட அதிகமான அன்பு கொண்டவனாய்த் திகழாத வரையில் ஒருவன் உண்மையில் முஃமினாக, இறை நம்பிக்கை உடையவனாய்த் திகழ மாட்டான் என்பது திருக்குர்ஆனின் திருவசனங்கள் சிலவற்றிலிருந்தும், ஹதீதுகளில் இருந்தும் தெரிய வருகிறது.

இறைத் தூதர் மீது எல்லாவற்றையும்விட அன்பு செலுத்தவேண்டும் என்பதன் கருத்து, இறைத் தூதர் (ஸல்) அவர்களின் வாய்மொழிகள், கட்டளைகள் ஆகியவற்றின் மீது முஃமினுக்கு தாய், தந்தை மற்றும் மனிதர்களுடைய நலன்கள், அவர்களின் விருப்பு வெறுப்பு ஆகியவற்றைப் பற்றியெல்லாம் சிந்திக்காமல் அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்குக் கீழ்ப் படிவதிலேயே முழுக்க முழுக்க ஆர்வமும் ஆசையும் கொண்டு விடவேண்டும். முழுமையாக அண்ணலவர்களையே பின்பற்றுவோராய் மாறிவிடவேண்டும் என்பது தான்.

அண்ணல் நபி (ஸல்) அவர்களின் மீது அன்பு செலுத்தவேண்டும் என்பதன் மற்றொரு கருத்து; அவர்களின் வாழ்வு, நடத்தை, பண்பு, வழிமுறை ஆகியவை உலகிலுள்ள மற்றெல்லா மனிதர்களின் வழிமுறைகளைக் காட்டிலும் நமக்கு அதிக விருப்பமுள்ளவையாக இருக்க வேண்டும். அவர்களின் நடத்தையை முன் வைத்து நமது வாழ்க்கைப் பாதையைச் செப்பனிட முயல வேண்டும். அண்ணலவர்களின் அடிச் சுவட்டைப் பின்பற்றி நடக்கப் பாடுபடவேண்டும்.

அண்ணல் நபி (ஸல்) அவர்களின் மீது அன்பு செலுத்த வேண்டும் என்பதன் மூன்றாவது கருத்து; எந்த தீனை அவர்கள் உலகின் முன் சமர்ப்பித்தார்களோ, எதனை அவர்கள் தமது உயிரினும் மேலாக மதித்தார்களோ, எதைச் செயலாற்றவும், பரப்பவும், உயர்த்தவும், ஓங்கச் செய்யவும் தம்மை முழுமையாக அர்ப்பணித்தார்களோ, எதற்காக வேண்டி பெரும் கொடுமைகளையும் இன்னல்களையும் சகித்தார்களோ, பசி பட்டனியால் வாடி வதங்கினார்களோ, வீடு, நாடு, முதலியவற்றைத் துறந்தார்களோ, கொலை பாதகச் சூழ்ச்சிகளுக்கு இலக்கானார்களோ, எதிரிகளின் தாக்குதலுக்குள்ளாகிக் காயம்பட்டு இரத்தம் சிந்தினார்களோ, அந்த தீனை நாமும் உயிரினும் மேலாக மதிக்க வேண்டும். அதன் வழியில் செயலாற்றவும்; அதனைப் பரப்பவும், நானிலம்கமல அதனை ஓங்கச் செய்யவும் நம் இறுதி மூச்சு வரை நம்மை முழுமையாக அர்ப்பணித்து விடவேண்டும். அதற்காக எல்லாவிதமான தொல்லைகளையும் ஏற்று, உயிர், உடைமை, குழந்தைகள், பூமி, எதிர்காலம், சுக போகம் ஆகியவற்றைத் தியாகம் செய்யவும் தயாராகி விடவேண்டும்.

அண்ணல் நபி (ஸல்) அவர்களின் மீது அன்பு செலுத்த வேண்டும் என்பதன் நான்காம் கருத்து இது. நாம் நபி (ஸல்) அவர்களுக்கும் அவர்களின் குடும்பத்தார். தோழர்கள், அவர்கள் வழியைப் பின்பற்றி நடந்த அவர்களின் தீனைப் பாரெங்கும் பரப்பி உயர்வடையச் செய்யப்பாடுபடுவர் ஆகிய எல்லாருக்கும் இறைவனிடம் துஆச் செய்தலாகும். அண்ணல் நபி (ஸல்) அவர்கள் நமக்குச் செய்த உபகாரங்கள் எண்ணற்றவை, அவற்றுக்கெல்லாம் நாம்பிரதி செய்ய வேண்டுமாயின் ''அல்லாஹ் அவர்களுக்கு மகத்தான நற்கூலி வழங்குவானாக!'' என்று துஆச் செய்வதைத் தவிர வேறு ஒன்று மேயில்லை. இதனால் தான் ஒவ்வொரு தொழுகையின் இறுதியிலும் அவர்கள் மீது ஸலவாத்து ஓதுவது சுன்னத்தாக்கப்பட்டிருக்கிறது. தொழுகையைத் தவிர உள்ள சந்தர்ப்பங்களில் நேரம் கிடைக்கும் போதெல்லாம் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மீதும் அவர்களைச் சார்ந்தோர் அனைவர் மீதும் ஸலவாத்துச் சொல்ல வேண்டும். இது அண்ணலவர்கள் மீது கொண்டிருக்கும் அன்புக்கு அறிகுறியாகவும் அந்த அன்பை மேலும்மேலும் வளர்ந்தோங்கச் செய்வதற்கு ஒரு செயலாகவும் திகழ்கின்றது.

தொகுப்பு;

முஹம்மது ராசுல் இஸ்லாம், கபூரிய்யா அரபிக் கல்லூரி.

## தவறுக்கு உடனடிப் பரிகாரம்!

அபூதர் அல் கிபாரி (ரலி) அவர்கள், ரசூல் (ஸல்) அவர்கள் முன்னிலையில் ஓர் அடிமையுடன் தர்க்கித்துக் கொண்டிருந்தார், பேச்சு முற்றவே அந்த சஹாபி கோபமுற்று '' ஒரு கறுத்த பெண்ணின் மகனே'' என அந்த அடிமையை அதட்டி விட்டார்.

இவ்வாறு சொல்லக் கேட்ட நபி (ஸல்) அவர்கள் அவரை விறைத்துப் பார்த்தார்கள்.

''நீர் அந்த அடிமையைக் குறித்துச் சொன்னவார்த்தைகள் மிகவும் கடினமானவை! நற்கருமங்களால் அல்லாமல் ஒரு சிவப்புப் பெண்ணின் மகன் ஒரு கறுத்த பெண்ணின் மகனை விடச் சிறந்தவனாக மாட்டான்'' என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

நபிகளார் இப்படிக் கூறக் கேட்டதும் அபூதர் (ரலி) அவர்கள் நிலத்தில் குப்புற விழுந்தார்கள், அந்த நீக்ரோஅடிமையை நோக்கி ''நீர் எழுந்து நில்லும். என் கழுத்தில்உமது காலை வைத்து மிதியும், இதுதான் நான் உமக்கு பேசியபேச்சுக்குத் தண்டனை'' என்று கூறினார்.

சஹாபாக்கள் தாம் ஒரு தவறை செய்து விட்டால் உடனடியாக இப்படிதான் பரிகாரம் செய்து கொண்டார்கள். அவர்களது உயர்வுக்கு இப்பண்பும் ஒரு காரணமாகும்.

— அல் ஹதீஸ்

# நோ ஈஸ்ட்! நோ வெஸ்ட்!

தம்பி எங்கே நீ
செல்கின்றாய்?
அப்துல்லாஹ்
அஹமதின்
பரம்பரையில்
முஸ்லிமாய்
உதித்த - நீ
மாநபிகள் காட்டிய
வழி மறந்து
எங்கே செல்கின்றாய்?

காலந்தான்
மாறுகின்றது
ஆனால்
உன் - கோலத்தை
மாற்றிடாதே!
காலத்துக்குக் காலம்
உன்
கோலம் மாறினால்
இஸ்லாத்தில்
நாகரீகமற்ற
பச்சோந்தி
வர்க்கமொன்று
தோன்றிடும் என்பதை
மறந்துவிடாதே!

தம்பி முஸ்லிமாய்
பிறந்த - நீ
ஏன் - மாற்றான்
வேஷத்தை நாடுகின்றாய்?
இறைவன் காட்டிய
பாதையொன்றிருக்க
வெஸ்டன்
ஈஸ்டன்
என்றே - புதிய
பாதைகளில் சென்றால்
உன் இலக்கு
தவறிவிடும்!

தம்பி - நீ
காரிருளில்
திசை மாறிச்
செல்கின்றாய்!
உன்
பாதையை மாற்றிவிடு!

தூரத்தே தெரியும்
மின் மினிப் பூச்சியை நாடி
ஏன் செல்கின்றாய்?
உன் கையில் இருக்கும்
தீன் ஒளி(ச்) சுடரை(ப்)பார்?
அது
கறை படிந்து(க்)கிடக்கின்றது
அக் கறையை அகற்றி
அதன் பிரகாசத்தை
உலகுக்கு உணர்த்து!
அப்போ
அந்த மின் மினி(ப்)
பூச்சியை நம்பியிருக்கும்
இந்த உலகமே
உன்னை நாடி வரும்!

தம்பி மீண்டும்
சொல்கின்றேன்
உலகம் நகைக்கும்
விளக்கேந்திய
குருடனாய் மாறிவிடாதே!

— நூராணியா ஹஸன்

# புகைக்காதீர் . . .

( 10ம் பக்கத் தொடர்ச்சி )

கின்றன. இம் முயற்சியில் அநேக குட்டிகள் இறந்த போதிலும் எஞ்சிய சில குட்டிகளின் விற்பனைமூலம் அதிக லாபம் பெறுகிறார்கள்.

★ புகைப்பழக்கத்தால் வாலிபர்களுக்கு ஏற்படும் விபரீத விளைவுகளை கேட்டறிந்த பிரான்ஸ் நாட்டு மன்னன் லூயி நெப்போலியன் ஒரே நாளில் பாரிஸ் நகரில் மட்டும் முப்பதாயிரத்துக்கு மேற்பட்ட இளைஞர்களின் புகைக்கும் குழாய்களை உடைத்தெறிந்தார். பள்ளியிலிருந்து புகைத்தவர்களை வெளியேற்றினார்.

★ ''ரீடர்ஸ் டைஜெஸ்ட்'' போன்ற அதிக அளவில் விற்பனையாகும் ஆங்கில முன்னணி மாத இதழ்கள் தங்கள் பத்திரிகைகளில் சிகரெட் விளம்பரங்களை வெளியிட்டு மக்களின் ஆரோக்கியத்தை கெடுப்பதில்லை என்று முடிவுசெய்துள்ளது. தமிழில் ஆனந்தவிகடனும் இதை கடைப்பிடிக்கிறது.

இத்தனை தீமைகளுக்கும் வழி வகுக்கும் புகைத்தலை இன்றே விட்டு விடுங்கள். அதனால் நன்மைகள் பலவுண்டு.

# ஏற்றி விடுகின்றது . . .

( 18ஆம் பக்கத் தொடர்ச்சி )

காட்டி இஸ்லாம் எவ்வாறு தொழிலாளர் பிரச்சினைகளைத் தீர்க்கின்றது என எடுத்துக் கூறினேன். இக் கருத்து பலரது கவனத்தை ஈர்த்தது என்பது குறிப்பிடத் தக்கது.

கேள்வி;- முஸ்லிம்கள் சிறுபான்மையினராக வாழும் இலங்கையிலுள்ள முஸ்லிம்களுக்கு உங்கள் ஆலோசனை என்ன?

பதில்:- நீங்கள் இஸ்லாமல்லாத எந்தக் கொள்கையில் அல்லது எந்த இயக்கத்தின் பக்கமும் செல்லக் கூடாது. அவ்வாறே முஸ்லிம்களுடைய பிரச்சினைகளை மட்டும் நோக்குகின்ற இனவாதம் கொண்டவர்களாகவும் இருக்கக்கூடாது. இஸ்லாத்தின் அடிப்படையில் முழு மனித சமூகத்தின் பிரச்சினைகளையும் தீர்க்கத் துணிந்து எழுந்து நில்லுங்கள். அல்லாஹ் அருளால் நீங்கள் வெற்றிபெற முடியும். உங்கள் கடமை மகத்தானது. உங்களிடம் சத்தியம் இருக்கிறது. மக்கள் அதனைத் தேடி அலைகிறார்கள். நீங்கள் கடமையை நிறைவேற்றாவிட்டால் அல்லாஹுத்தஆலா உங்களை மறுமையில் தண்டிப்பான். அல்லாஹுத்தஆலா உங்கள் இஸ்லாமியப் பணிக்கு அருள் புரிய நான் பிரார்த்திக்கிறேன்.

# இப்படித்தான் வாழ . . .

( 17ஆம் பக்கத் தொடர்ச்சி )

முனையவில்லை. மன்னித்து விட்டார்கள். மக்காவை வென்றபின் தாயிஃப் நகர மக்களின் குழுவொன்று வந்தபோது அவர்களை மிகவும் கௌரவித்தார்கள்.

நபி (ஸல்) அவர்கள் பிராணிகளிடமும் மிகவும் அன்பு காட்டுவார்கள். ஒருமுறை பிரயாணம் செய்து கொண்டிருந்தார்கள். வழியில் ஓரிடத்தில் ஒரு பறவை முட்டையிட்டு வைத்திருந்தது. ஒரு மனிதன் அந்த முட்டையை எடுத்துக் கொண்டான். இதைக் கண்டபறவை நிம்மதியிழந்து தவிக்கலாயிற்று. நபி (ஸல்) அவர்களுக்கு விபரம் தெரியவந்தது. அந்த முட்டையை அதே இடத்தில் வைக்கச்செய்தார்கள்.

ஒருமுறை ஒரு நபித்தோழர் குருவிக் குஞ்சுகள் சிலவற்றை நபி (ஸல்) அவர்களிடம் கொண்டு வந்தார். அந்தத் தோழரிடம், ''குருவிக் குஞ்சுகளை அதன் தாயிடமே விட்டு விட்டு வாருங்கள்'' என்று கூறினார்கள்.

(ரசூல் (ஸல்) அவர்களின் வாழ்க்கைச் சிறப்பை இவ்வாறு கூறிக்கொண்டே போகலாம். அவர்கள் மனிதருள் மாணிக்கம். குணக் குன்று. ஒழுக்க சீலர். முழு மனித சமுதாயத்திற்கும் முன்மாதிரியாக வாழ்ந்து காட்டிய மாமனிதர். அவர்களது வாழ்வை அறிந்துணர்ந்து பின்பற்றுவது மக்கள் கடமை.)

# திருமறையும் திருத்தூதர் வாழ்வும்

## இஸ்லாத்தின் மூலாதாரங்கள்

மௌலானா செய்யித் அபுல் அஃலா மௌதூதி (ரஹ்)

திருக்குர்ஆன் வாழ்கைத் துறைகள் அனைத்துக்கும் வழி காட்டும் விரிவான நீதிநூல் என்று பொதுவாகவே கூறப் படுகிறது. ஆனால் ஒருவர் இதைப் படிக்கும்போது சமூகவியல், ஒழுக்கவியல், அரசியல், பொருளியல் போன்ற அனைத்து வாழ்க்கைத் துறைகள் பற்றிய விரிவான சட்டங்களும் விதிமுறைகளும் அவருக்குத்தென்படுவதில்லை. திருக்குர்ஆன் திரும்பத் திரும்ப வலியுறுத்திக் கூறும் கட்டாயக் கடமைகளான தொழுகை, ஜகாத் போன்றவை பற்றிக்கூட விரிவான விதிகளையும் விலக்குகளையும் அது தரவில்லை என்பதை அவர் காண்கிறார். அப்படியாயின் என்ன பொருளில்தான் இது ஒரு விரிவான வழிகாட்டியாக அமைந்திருக்கிறது என்பது பற்றி அவர் உள்ளத்தில் சந்தேகம் எழுகிறது.

திருமறையை மட்டும் இறைவன் வழங்கவில்லை. அத்தோடு இவ்வுலகுக்கு ஒரு தூதரையும் அவன் அனுப்பியிருந்தான் என்கிற உண்மையின் அடிப்படையான அம்சம் வாசகரின் சிந்தனையிலிருந்து மறைந்திருப்பதால் அவர் மேற்சொன்ன குழப்பங்களுக்கு ஆளாகிறார்.

இங்கு ஒரு சான்றினைப் பார்ப்போம்.

ஒரு கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு நமக்கு ஒரு வரை படம் கொடுக்கப்பட்டு, அதன்படி நாமே அக்கட்டிடத்தைக் கட்டிக் கொள்ள வேண்டும் என்றால் கட்டிடத்திற்குரிய சின்னஞ்சிறு விஷயங்களும் அந்த வரைபடத்தில் இடம்பெற்றிருக்கவேண்டும். ஆனால், அந்த வரைபடத்துடன் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்குரிய குறிப்புகளுடன் ஒரு பொறியியலாளரும் அரசாங்கத்தின் தரப்பிலிருந்து அனுப்பப்பட்டு, அவர் அக்கட்டிடத்தை நிர்மாணித்த பின்னர், அவரையும் அவர் நிர்மாணித்துள்ள கட்டிடத்தையும் புறக்கணித்துவிட்டு, அந்த வரைபடத்திலேயே கட்டிடத்திற்குரிய ஒவ்வொரு சிறு தகவலையும் தேடமுற்பட்டு அதில் அந்த விபரங்கள் கிடைக்கவில்லையே என்று குறை கூறுவது அறிவுடைமையாகாது.

திருக்குர்ஆன் சட்டவிதிகளின் பிரிவுகளையும், துணைச் சட்டங்களையும் விவரிக்கும் ஒரு நூல் அல்ல; மாறாக, அது மூலாதார அடிப்படை விதிகளுடன் கோட்பாடுகளும் வழங்கும் ஒரு நூலாகும்.

இஸ்லாமிய வாழ்க்கை அமைப்பின் அடிப்படைகளை அறிவார்ந்த ரீதியில் தெளிவாக்கி, அதனுடைய ஒழுக்க அடிப்படைகளை எடுத்துரைத்து, அதற்காக இதயங்களைக் கவர்ந்திழுக்கும் வகையில் அறிவார்ந்த ஆதாரங்கள் அனைத்தையும் தந்து, அந்த அடிப்படைகளை நன்றாக உறுதிப்படுத்திவிடுவதே குர்ஆனின் தலையாய பணியாகும்.

எனவே, அது மனிதனுக்கு வழிகாட்டுகின்றது என்பதின் பொருள், இஸ்லாமிய வாழ்க்கை முறையை செயல்படுத்துவதற்காக வாழ்வின் ஒவ்வொரு சின்னஞ்சிறு அம்சம் குறித்தும் விரிவான சட்டதிட்டங்களையும் விதிமுறைகளையும் வகுத்துத் தருகிறது என்பதல்ல. மாறாக, வாழ்க்கையின் ஒவ்வொரு துறை குறித்தும் அதற்குள்ள எல்லைகளையும், வரம்புகளையும் நிர்ணயித்து, இறைவனின் விருப்பத்துக்கு இசைவாக அத்துறைகளை எவ்வாறு அமைக்கவேண்டும்: எவ்வாறு நிர்மாணிக்க வேண்டும் என்று அறிவிக்கக்கூடிய கைகாட்டிகளை ஆங்காங்கே அது ஊன்றி வைக்கிறது.

இந்தப் போதனைகளுக்கும் வழிகாட்டுதலுக்கும் இசைவாக இஸ்லாமிய வாழ்க்கை முறையைச் செயற்படுத்திக் காட்டும் பொறுப்பும் பணியும் நபி (ஸல்) அவர்களைச் சார்ந்திருந்தது. திருக்குர்ஆன் அருளிய நியதிகளுக்கு ஏற்ப உருவாகும் தனிமனிதனுடைய ஒழுக்கம் சார்ந்த வாழ்வு, சமூக அமைப்பு, நீதி மிக்க அரசு ஆகியவற்றின் நடைமுறை முன்மாதிரியாகத் திகழவே அன்னாரவர்கள் அல்லாஹ்வின் தூதராக அனுப்பப்பட்டார்கள்.

அந்த மாநபி (ஸல்] அவர்கள் ஒழுக்கவியல், சமூகவியல், வாழ்வியல், அரசியல் போன்ற மனித வாழ்வு சம்பந்தமான எல்லா விவகாரங்களைப் பற்றியும் உயர்ந்த நுட்பமான சட்டங்களை வழங்கினார். இருபத்துமூன்று ஆண்டுக்காலத்தில் தம்முடைய ஒழுக்கம், நற்செயல், கண்ணியம் மற்றும் உயர் போதனை ஆகியவற்றின் வன்மையால் தம்முடைய பகைவர்களைக்கூட நண்பர்களாக ஆக்கினார். காட்டுமிராண்டித்தனமும் அறியாமையும் குடிகொண்டிருந்த மக்களை உயர்தரமான நாகரீகமிக்கவர்களாக மாற்றியமைத்தார். எந்த அரபியர் எத்தகைய சட்டத்துக்கும் கட்டுப்படத் தயாராக இருக்கவில்லையோ, அவர்களை மாபெரும் சட்டங்களுக்குக் கட்டுப்படும்படிச் செய்து விட்டார். எந்த அரபியர் எவருக்கும் கீழ்ப்படியச் சித்தமாயிருக்கவில்லையோ அவர்களை ஒரு மகத்தான ஆட்சிக்குக் கீழ்ப்படிந்திருக்கும்படிசெய்து விட்டார். எந்த மக்கள் மீது ஒழுக்கத்தின் வாசனையே படாமல் இருந்ததோ, அந்த மக்களின் ஒழுக்கத்தை எவ்வாறு பரிசுத்தமாக்கிவிட்டார் எனில், இன்று அந்த மக்களின் வரலாறுகளைப் படித்து உலகமே பிரமிப்படைகிறது.

அந்த நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்விடமிருந்து பெற்று மக்களுக்கு சமர்ப்பித்த ஒப்பற்ற வேதமே அல்குர்ஆன் ஆகும். அதற்கேற்பவே அவர்களது வாழ்வும் அமைந்தது.

## மாநபி தந்த...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

பல தோல்வியடைவதற்கு இதுவன்றி வேறெதுவும் காரணமாக இருக்க முடியுமா?

எனவே 'அல் அமீன்,அவர்கள் தம் திட்டத்திற்கேற்ப உலக மாந்தரை நல்வழிப் படுத்துவதற்கு அவசியமான திறமை படைத்த தனிமனிதர்களைப் பயிற்றுவிப்பதிலும் பண்படுத்துவதிலும் முதலில் தம்சக்தியைச் செலவிட்டார்கள்.

இதன் மூலம் தமது வாழ்வு முழுக்க இறை கட்டுப்பாட்டை ஏற்றுநடக்கும் பண்புகள் நிறைந்தவொரு சமூகம் உருவாகியது, அவர்களைக் கொண்டுதன்னிகரற்றதொரு மக்கள் சமுதாயம் அன்றைய உலகில் தோன்றியது.

### சிந்திப்போம்!

ரசூல் (ஸல்) அவர்கள் புகழ்பற்றி மேடை, மேடையாக ஏறிப் பேசும் நாம், பந்திபந்தியாக கைவலிக்கும் வரை எழுதித் தள்ளும் நாம் அவர்களின் போதனைகள், அவர்கள் அமைத்த உன்னத சமூதாயம் என்பன பற்றி சிந்தித்ததுண்டா? பல நூற்றூண்டுகளாக ஆழ்ந்த உறக்கத்தில் இருந்துவிட்டோம். இனியாவது உறக்கத்திலிருந்து மீண்டு உணர்ச்சி பெற்று சிந்திக்க வேண்டாமா? மானிலத்தின் மாநபியவர்காட்டித் தந்த பண்புகள் நம் மிடமுண்டா? இல்லையென்ருல் நாம் இன்று அடைந்துள்ள இழிநிலைக்கு வேறேதும் காரணம் வேண்டுமா? இன்று இஸ்லாத்துக்கு முற்றிலும் புறம்பான திட்டங்களையல்லவா நம் வாழ்க்கை முறையாகக் கொண்டுள்ளோம்?

### செயலாற்றுவோம்!

இனிமேலும் நாம் உறங்கிக்கொண்டிருக்கமுடியாது: விழித்தெழவேண்டும். இஸ்லாம் கட்டியெழுப்பிய இலட்சியக் குழுவைச் சேர்ந்தவர்களே நாம் என்பதை உணர வேண்டும். பிச்சா பாத்திரத்தை ஏந்தி என்றும் நாம் உதவி தேடிக்கொண்டிருக்க முடியாது. எனவே, நம்மிடையேயுள்ள அபிப்பிராய பேதங்களை மறப்போம்; இஸ்லாத்தின் இணையற்ற கொடியின் கீழ் ஒன்று திரள்வோம். இறைவனையே நம்பி சோர்வு மறந்து உறுதியோடு செயலாற்றுவோம். இஸ்லாமிய சன்மார்க்கமே மானிட சமுதாயத்தின் சுபீட்சத்துக்கும் சாந்திக்கும் வழிகாட்டும் வாழ்க்கைத் திட்டம் என்பதை வையகத்துக்கு நிரூபித்துக்காட்டுவோம், வாருங்கள்!

ஜமாஅதே இஸ்லாமி
பயிற்சி மன்றம்
மாவனல்லை.

## எனது மதம்...:

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

வர்களுக்கு இசையானது குறுகிய கால ஆறுதலையே வழங்குகிறது, இது 'நவீன மயப்படுத்தப்பட்டவாழ்க்கை முறை' என நாம் அழைக்கும் காருண்ய தன்மையற்றஅமைப்பிலிருந்து விடுபட்டுக்கொள்வதற்கான முயற்சியேயாகும்.

கேள்வி; ஆகவே, நீங்கள் இசைத்துறை ஈடுபாட்டை நிறுத்திவிட்டீர்கள் அல்லவா?

பதில்: உண்மையான,நேரிய பாதையிலிருந்து இசை என்னைத் திசைதிருப்பிவிடும்என்ற பயத்தில், அது சார்பான நடவடிக்கைகளை இடை நிறுத்தியுள்ளேன் எனினும், இசைத் துறையுடன் இனி என்றுமே ஈடுபாடு கொள்ள மாட்டேன் என்று திட்டவட்டமாகக் கூற முடியாது.' இன்ஷாஅல்லாஹ் என்று கூறுது அது சாத்திய மாகாது.

(வளரும்)

# தாரணியில் ஒரு தனி மனிதர்!

அல்லாஹ் அல்குர்ஆனில் தனது திருத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களைப் பல்வேறு திருவசனங்கள் மூலம் நமக்கு அறிமுகப் படுத்துகின்ருன். அவர்கள் இவ்வுலகுக்கு அனுப்பப்பட்ட நோக்கம், அவர்களது சிறப்பியல்புகள், பண்பு நலன்கள் ஆகியவைகளை அவை விவரிக்கின்றன. இந்த அனைத்து வசனங்களின் சாரமாக விளங்குகிறது.

''லகத்கான லகும் ஃபீரசூலில்லாஹி உஸ்வத்துன் ஹஸனு ''(உங்களுக்காக அல்லாஹ்வின் தூதரிடம்ஓர் அழகிய முன்மாதிரி இருக்கின்றது.) (33;21) என்ற அல்குர்ஆன் வசனம்.

ஒருவரை முன்மாதிரியாகக்கொள்ள அவர் பல சிறப்புக்களை பெற்றிருக்க வேண்டும்.

அவரது கொள்கைகள்:

★ வாழ்கையின் எல்லாத் துறைகளுக்கும் வழி காட்டுதல் வேண்டும்.

★ எல்லாக் காலங்களுக்கும், உலகம் முடிகிற வரை வாழப் போகின்ற அனைத்து மக்களுக்கும், வழி காட்ட வேண்டும்.

★ நாடு, இனம், சமூகம் என்ற வரையறைகளுக்கு அப்பாற்பட்டு எல்லா மக்களுக்கும் வழிகாட்ட வேண்டும்.

உலகில் தோன்றிய பல்வேறு தலைவர்களுள் இத்தனை சிறப்பம்சங்களையும் கொண்ட ஒருவர், முஹம்மத் மூஸ்தபா (ஸல்) அவர்களே என்பதனை எவரும் மறுக்க முடியாது.

தன்னுடைய வாழ்நாளிலேயே தனது கொள்கைகளுக்கு செயல் வடிவம்கண்டு, இஸ்லாம் நடைமுறைக்கு ஏற்றகொள்கையே என்று நிரூபித்தவர்கள் நபி(ஸல்) அவர்கள். அவர்கள் மரணிக்கும் தருவாயில் பத்து லட்சம் சதுர மைல்கள் அவர்களது ஆட்சிப் பரப்பிற்குள் இருந்தது.

ஒருலட்சத்து இருபத்தையாயிரம் நபித்தோழர்கள் அடங்கிய இஸ்லாமிய அணியொன்றையும் அவர்கள் உருவாக்கினுர்கள். உலக வரலாற்றில் எந்தத் தலைவரும் இத்தகைய சாதனையை நிகழ்த்தியதுஇல்லை. தனது எதிரிகளின் நம்பிக்கைக்கும், பாராட்டுக்கும், போற்றுதலுக்கும் கூட உரியவராக உத்தம நபி (ஸல்) அவர்கள், விளங்கினுர்கள்.

முஹம்மத் (ஸல்)அவர்கள், ஓர் இறை தூதராக, படைத்தளபதியாக, அரசராக, போர்வீரராக, வியாபாரியாக போதகராக, வேதாந்தியாக, இராஜ தந்திரியாக, பேச்சாளராக, சீர்திருத்தவாதியாக, நீதிபதியாக, எளியோரின்,பலமற்ரோரின் பாதுகாவலராக, அன்பு, கருணை என்பனவற்றின் மொத்த இருப்பிடமாக திகழ்ந்தார்கள் என்பது சர்ச்சைக்கிடமின்றி சகலரும் ஏற்றுக் கொண்டுள்ள உண்மையாகும்.

எனவே, எந்தக் கோணத்திலிருந்து நோக்கினுலும் ரசூல் (ஸல்) அவர்கள் ஒருவரைத்தான் நாம் இவ்வுலகின் சிறந்த முன்மாதிரியாகக் கொள்ள முடியும்.

இதனைத்தான் அல்லாஹ்வும் அழகுற''நம்முடைய தூதரிடத்தில் உங்களுக்கு ஓர்அழகிய முன்மாதிரி இருக்கிறது'' என அல்குர்ஆன் மூலம் உலகறியச் செய்தான்.

ஏற்போம்! பின்பற்றுவோம்!!

—டாக்டர் கே. வீ. எஸ். ஹபீப் முஹம்மத், சென்னை

## இலங்கை அரசியல் கட்சிகளும் முஸ்லிம்களும்-5

# சலுகைகளால் சமூகம் வளராது!

'அபூரம்லி'

"முஸ்லிம்கள் வியாபாரிகள். வியாபார நோக்கமாகவே இங்கு வந்தார்கள் அதனை அபிவிருத்தி செய்து வாழ வழிசெய்து கொண்டால் போதுமானது" என பலரும் அவ்வப்போது கூறக் கேட்கின்றோம்! இது முற்றிலும் சரியான வாதமல்ல.

இலங்கைக்கு வருகை தந்த ஆரம்ப கால முஸ்லிம்கள் வெறும் வியாபாரத்தைத் தனது நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை. மாறாக, தாம் ஏற்றுக்கொண்ட இஸ்லாத்தின் பிரதிநிதிகளாகவும், பிரசாரகர்களாகவும் வந்தார்கள் என்பதற்கு அவர்கள் இங்கு வாழ்ந்த முறையே சான்று பகரும்.

அவர்கள் இங்கு வந்து குடியேறி, அப்போது இங்கு வாழ்ந்த மக்களுடன் மிகவும் அன்யோன்யமாகவும், ஒற்றுமையுடனும் வாழ்ந்தனர். தமது வியாபாரத்திலும் மக்களுடனான ஏனைய தொடர்புகளிலும் நேர்மை, ஒழுக்கம், நற்பண்பு என்பவற்றைக் கடைப்பிடித்தனர். தமது செயல்களில்இறைசிந்தனைக்கு அதிக முக்கியத்துவம் அளித்தனர்.

இவற்றின் காரணமாக, அன்று வாழ்ந்த சிங்கள மக்கள் முஸ்லிம்களை மிகவும் மரியாதையாக நடத்தினர். எந்த ஒரு விடயத்திலும் முஸ்லிம்களுக்கு தனியிடம் அளித்து கௌரவித்தனர். அப்போது அனுராதபுரியில் ஆட்சி புரிந்த மன்னன் அக்ரபோதியும் வேறு பல சிங்கள மன்னர்களும்முஸ்லிம்களுக்கு அளித்த கண்ணியத்தையும், முஸ்லிம்களுடன் நடந்து கொண்ட முறைகளையும் ஆராயும் ஒருவர் இந்த உண்மையைத் தெரிந்து கொள்ள முடியும் என்பதில் ஐயமில்லை.

இவ்வாறு, முஸ்லிம்களின் உயரிய பண்பினால் கவரப்பட்ட சிங்கள மக்களில் கணிசமானோர் காலக் கிரமத்தில் இஸ்லாத்தில் இணைந்து கொண்டனர். இல்லாவிட்டால் ஆரம்பத்தில் வந்த விரல் விட்டெண்ணக்கூடிய முஸ்லிம்களின் பிறப்புவிகிதம் பெருகித்தான் இன்றிருக்கும் சுமார் பத்து இலட்சத்துக்கும் அதிகமான தொகை முஸ்லிம்களைக் கொண்ட சமூகம் உருவானது எனக் கூறுவது பொருத்தமானதன்று.

இந்த வளர்ச்சியை மற்றொரு வகையிலும் கணக்கிட்டுப் பார்க்கலாம்.

போர்த்துகீஸர், ஒல்லாந்தர், பிரித்தானியர் முதலியோர் இந்த நாட்டை சுமார் ஐந்து நூற்றாண்டுகள் அடிமைப் படுத்தி ஆட்சி புரிந்தனர். அக்காலை இந்த நாட்டின் சமூக, பொருளாதார, அரசியல் துறைகளில் மட்டுமல்லாது சிந்தனையை சீர்படுத்தும் கல்வித் துறையிலும் தமக்குச் சாதகமான பல மாற்றங்களைச் செய்தனர். பெரும் வர்த்தகக் கம்பெனிகள், கல்விக்கூடங்கள் என்பவற்றுடன் மலைநாட்டுத் தோட்டங்கள் அனைத்தையுமே தமதுடைமையாக்கிக் கொண்டிருந்தனர். அந்த வகையில் அவர்கள் எஜமானர் தரத்திலும் இந்நாட்டு மக்கள் அடிமைகள் தரத்திலுமே இருந்தனர்.

இதே வேளையில் முஸ்லிம்களை நோக்கினால் இதற்கு நேர் எதிரான நிலையிலேயே இருந்ததைக் காணலாம். அவர்கள் மேற் கூறியவர்கள் போன்று இந்த நாட்டை ஆளவில்லை. அவர்கள் அரசியல் அதிகாரம் கொண்டவர்களாகவோ, பெரும் கல்விமான்களாகவோ இருக்கவில்லை. அவர்களுக்கு நவீன கல்விக் கூடங்கள் இருக்கவும் இல்லை. பதிலாக சாதாரணவியாபாரிகள்தரத்திலேயே இருந்தனர். அதுமட்டுமின்றி ஆங்கிலேயரின் பிரித்தாளும் தந்திரத்துக்கு இலக்கானவர்களாகவும் இருந்தனர்.

எனினும் சமுதாய வளர்ச்சியை நோக்கும் போது, சகல வல்லமையுடனும் ஐந்து நூற்றாண்டுகள் இந்த நாட்டை ஆண்ட சமூகத்தின் கிறிஸ்தவ சமய வளர்ச்சிக்கும் இலங்கையை ஆண்ட அந்நியர்களைப் போல, ஆட்சி புரியாத சாதாரண முஸ்லிம் சமூகத்தின் வளர்ச்சிக்கும் இடையே பாரிய வித்தியாசத்தைக் காண முடிகிறது.

வியாபார நோக்கங்கொண்டு மட்டும் முஸ்லிம்கள் இந்நாட்டுக்கு வந்திருந்தால் இத்தனைப் பெரிய வளர்ச்சி ஏற்பட்டிருக்க முடியாது. உண்மையான காரணம் என்னவெனில் அவர்கள் இஸ்லாத்தை மையமாகக் கொண்டு நற்பண்புகள் நிரம்பியவர்களாக வாழ்ந்தனர். அவை இந்நாட்டு மக்களை ஈர்த்தன. முஸ்லிம் சமூகம் பெருகிற்று. எனவே, முஸ்லிம் சமூகத்தின் வளர்ச்சி இரகசியமானதல்ல என்பதை யாவரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

முஸ்லிம்கள் சமாதானப் பிரியர்களாகவும் எவருக்கும் தொந்தரவு இன்றியும் வாழ்ந்த போதும் இந்நாட்டில் 18 ஆம் 19ஆம் நூற்றாண்டுகளில் தோன்றிய அதிகார வர்க்கம் முஸ்லிம்களின் சமூக, பொருளாதார, நிர்வாக விவகாரங்களை அச்சுறுத்தும் வகையில் அமைந்தது. அது முஸ்லிம்களின் தனித்துவத்துக்கு ஊறு விளைவிக்கும் அளவுக்கு இடைஞ்சலாக அமையவே, அதிலிருந்து தன்னைப் பாதுகாத்துக்கொள்ளும் பொருட்டு அயராதுபோராட வேண்டிய நிர்ப்பந்தம் முஸ்லிம்களுக்கு ஏற்பட்டது.

இதே வேளையில், முஸ்லிம்களின் வளர்ச்சியை சீரணிக்க முடியாத சில தீய சக்திகளும் முஸ்லிம்களுக்கு எதிராக செயற்பட ஆரம்பித்தன. அவற்றின் படிமுறையான வளர்ச்சியின் எதிரொலியாக 1915- மே மாதம் சிங்களவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே பயங்கர கலவரம் மூண்டது. கம்பளையில் மூண்ட இக்கலவரம் காட்டுத் தீ போல் நாடெங்கும்பரவியது. முஸ்லிம்கள் கண்ட கண்ட இடங்களில் கடுமையாகத் தாக்கப்பட்டனர்; அவர்களது உடைமைகள் படுபாதகமான முறையில் சேதப்படுத்தப்பட்டன. உண்மையில் இக்கலவரத்தினால் இனி என்றுமே எழுந்திருக்க முடியாது எனும் அளவுக்கு முஸ்லிம்களின் நிலை பாதிப்புக்குள்ளாகியது.

இவ்வாறு, அன்று பல முனைத்தாக்குதல்களுக்கு உள்ளான முஸ்லிம் சமூகம், பயங்கர எதிர்காலம் ஒன்றுக்குள் அடியெடுத்து வைத்தது எனலாம். இன்றுவரை இந்த ஆபத்தான நிலை சீர்பெறவில்லை என்பதை இக்கட்டுரைத் தொடரை முடியும் வரைபடிப்பவர்கள் உணர்ந்து கொள்வர்.

முஸ்லிம் சமூகத்தின் அவல நிலை இப்படியிருந்த போதிலும் 1924 அக்டோபர் 15 ஆம் திகதி உருவாக்கப்பட்ட

(26-ம் பக்கம் பார்க்க)

# ஐயமும் தெளிவும்

**மௌலானா செய்யித் அபுல் அஃலா மௌதூதி (ரஹ்)**

ஐயம்; இந்த இருபதாம் நூற்றாண்டில் இஸ்லாமிய அமைப்பை நடைமுறைப் படுத்திட முடியும் என்றால், அந்த அமைப்பு தற்போதைய சிந்தனைப் போக்குகள், கொள்கைகள் ஆகியவற்றின் இடத்தைப்பெற முனையும் போது குறுக்கிடக் கூடிய தடைக் கற்களையும் நடைமுறைச் சிரமங்களையும் எப்படி அகற்றுவீர்கள்?

தெளிவு: தற்காலத்தில் இஸ்லாமிய ஆட்சியமைப்பை நடைமுறைப் படுத்த விடாமல் முட்டுக்கட்டை போடமுயலும் போக்குகளையும் கொள்கைகளையும் ஆராய்ந்து பார்த்தால் அவையனைத்தும் முஸ்லிம் நாடுகளின் மீதுமேலை நாட்டினர். நீண்ட காலம் செலுத்திய அரசியல் ஆதிக்கத்தினால் உருவானவையே என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம்.

மேற்கத்திய சமூகத்தினர் நம் நாடுகளில் ஆட்சி செலுத்தத் துவங்கியதுடன் அவர்கள் நம் கல்வியமைப்பை செயலற்றதாக்கி விட்டுத் தம்முடைய கல்வியமைப்பை அமுல்படுத்தினர். சிறிய, பெரிய அரசுஉத்தியோகங்கள் அனைத்திலிருந்தும் நம் கல்வியமைப்பின் மூலம் உருவாக்கப்பட்டவர்களை பதவி நீக்கம் செய்துவிட்டனர். தாம் ஏற்படுத்திய கல்வி திட்டத்தின் படி படித்துப் பட்டம் பெற்றவர்களுக்கே எல்லா உத்தியோகங்களையும் அளித்தனர், பொருளாதாரத் துறைகளிலும் தம் நிறுவனங்களை ஏற்படுத்தித் தங்கள் நெறிமுறைகளையும், மரபுகளையும் செயல்படுத்தினர். பின்னர் மெல்ல மெல்ல பொருளாதார வளர்ச்சியும் கூட மேற்கத்திய நாகரிகத்தையும், கல்வியையும் ஏற்றுக் கொண்டவர்களுக்கே உரித்தனதாக மாறி விட்டது.

இவ்விதம்மேலைநாட்டினர், நம் பண்பாட்டையும், நம் நெறிகளையும், கொள்கைகளையும் விட்டுப் பிறழ்ந்து செல்லும் தலைமுறை ஒன்றை நமக்குள்ளேயே உருவாக்கி விட்டனர். அத் தலைமுறை முற்றிலும் இஸ்லாத்திற்கு அந்நியமானதாகி விட்டிருக்கிறது. செயலளவில் மட்டுமின்றி, சிந்தனை போக்கிலும், வேட்கைகளிலும் கூட அது இவ்வாறு ஆக்கப்பட்டிருக்கிறது. இதுவே உண்மையில் நாம் இஸ்லாத்தின்பால் திரும்பிட தடையாக உள்ளது.

இஸ்லாத்திற்கு இணக்கமில்லாத முறைகளில் கல்வியும் பயிற்சியும் கொடுக்கப்பட்ட இவர்கள் இஸ்லாம் பின்பற்றவும் செயல் படுத்தவும் தகுந்ததன்று என நினைப்பதைத் தவிர வேறு என்ன தான் கூறமுடியும்? ஏனெனில் அவர்களுக்கு இஸ்லாம் என்றால் என்னவென்றும் தெரியாது. அதன்படிச் செயல்படுத்துவதற்காகவும் அவர்கள் உருவாக்கப்படவில்லை. எந்த வாழ்க்கை அமைப்பிற்காக அவர்கள் தயார் செய்யப்பட்டிருக்கிறார்களோ அந்த வாழ்கை முறையைத் தானே அவர்கள் செயல்படுத்தத் தகுந்ததாய் நினைக்கமுடியும்?

இப்போது நமக்கு இரண்டே வழிகள்தான் உள்ளன. தேவையின்றி இஸ்லாத்தின் பெயரைச்சொல்லிக்கொண்டு உலகை ஏமாற்றுவதை விட்டுவிடவேண்டும். அடுத்து தூய உள்ளத்துடன், விசுவாச உணர்வுடன் (நயவஞ்சகமின்றி) இன்றைய கல்வியமைப்பை ஆராயவேண்டும். அதனை முழுமையாக ஆய்ந்து இஸ்லாத்தை விட்டு நம்மைப் பிறழச் செய்யும் விஷயங்கள் என்னென்ன உள்ளன, அதில் இஸ்லாமிய அமைப்பை வெற்றிகரமாய்ச் செயல் படுத்தும் வல்லமை படைத்தவர்களைத் தயார் செய்யும் வகையில் என்னென்ன மாற்றங்களைச் செய்யலாம் என்று பார்க்க வேண்டும். இந்தப் பிரச்சனை மிக அமைதியாக சிந்திக்கபட வேண்டிய ஒன்று, இதற்குத் தீர்வு காணாதவரை நாம் இஸ்லாமிய அமைப்பைச் செயல் படுத்திடப் பாதை வகுக்க முடியாது.

## ஜாஹிலிய்யத்......

(9ம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றுத் திகழ்ந்தார்கள். வாழ்வின்சகலஅம்சங்களிலும் ஒன்றுபோல் சீர்பெற்று நல்லறம் எங்கும் ஆட்சி புரிந்தது.

ஒருமுறை நிகழ்ந்த இந்த சமுதாயப் புரட்சி மறுமுறையும் நிகழ முடியும். இது அசாதாரணமான அற்புதத்தால் விளைந்ததன்று. என்றுமே மாற்றமுறாத இறை நியதிக்கு ஏற்பவே நிகழ்ந்தது. அந்த ஈடிணையற்ற அமைப்பு மனித இயல்பின் உள்ளாற்றலிலிருந்து எழுந்ததாகும்.

இவ்வாற்றல் இன்றும் மனித மனங்களில் மறைந்து கிடக்கிறது. அதை கவனமாக ஒருமுகப் படுத்தி, பயிற்சியளித்து, இறைவழியில் செலுத்தப்படுமானால் இன்றும் அது சரியாக இயங்கி மாபெரும் மாற்றங்களை நிகழ்த்த முடியும்.

மனித சமுதாயம் இன்று, முன்னைவிட தெளிவாக அந்தப் பாதையை உணர்ந்து பின்பற்ற முடியும்.

ஏனெனில் இஸ்லாம் கடுமையான எதிர்ப்புக்களைச் சந்தித்த போதும், தனது பாதையில் முன்னேறிச்சென்று, தான்வந்த பாதையில் மிகத் தெளிவான சான்றுகளை விட்டுச் சென்றுள்ளது. பின்னைய சந்ததியினர் இந்தப் பாதையில் சென்று இறைவன் விரும்பும் சமூக அமைப்பை கட்டி எழுப்புவதற்கு இது பல வழிகளிலும்துணையாக அமையும்.

தொகுப்பு:
எஸ்ஸெம்மெம்'.

## இலங்கை அரசியல் கட்சி----

(23-ம் பக்கத் தொடர்ச்சி)

புதிய சட்ட சபை, முஸ்லிம்களும் இந்நாட்டின் பிரஜைகள் என்பதை ஏற்றுக்கொண்டது! முஸ்லிம் சமூகம் இந்நாட்டில் வாழும் சிறுபான்மை சமூகங்களுள் ஒன்று என அங்கீகரிக்கப்பட்டது.

இதன் பின்னர் முஸ்லிம்களின் கல்வித் தேவைகள் பற்றி சமூக ரீதியாக சிந்திக்கப்பட்டது. முஸ்லிம் விவசாயிகளுக்குக் காணிகள் வழங்கப்பட்டன.

எனினும், இந்த நடவடிக்களால் முஸ்லிம்கள் பூரண திருப்தியடைய முடியாது. அதற்கான காரணங்களாவன.

(1) ஒரு சமூகத்தின் வீழ்ச்சிக்கான அடிப்படைகள் இவைகள்தான். ஏனெனில் ஒரு சமூகம் தன் நிலை மறந்து அடுத்தவரின் மத்தியில் கைகட்டி, பிச்சைப் பாத்திரம் ஏந்தும் நிலை உருவாகும் போது ஒரு பக்கத்தில் மற்ற சமூகங்களையே நம்பிருக்க வேண்டும். மறு பக்கத்தில் இந்த நம்பிக்கை வளர வளர தம் சொந்த கொள்கை, தனித்துவம், முயற்சிகள் என்பன அற்றுப் போகும். அதனால் சலுகை பெறும் நோக்கம் உருவாகி சந்தர்ப்பவாதம், சுயநலம், காட்டிக் கொடுக்கும் கயமைத்தனம் என்பவற்றிற்கு வழியமைத்து விடும். அந்த கழுத்தறுப்பு நிலையை நாம் இன்று தெளிவாகக் காண முடிகிறது.

(2) எமக்குத் தரப்பட்ட அரசியல் பிரதிநிதித்துவமோ, சமூக மாற்றங்களுக்கான அம்சங்களோ, கல்வித் தேவைகளோ, காணிகளோ ஒரு கொள்கையை ஏற்ற சமூகம் என்ற வகையில் எம்மை வளர்த்துக்கொள்ள போதுமானவையல்ல. உண்மையில் அத்தகைய பூரணத்தன்மை மிக்க எதையும் மாற்று சமூகங்கள் முஸ்லிம் சமூகத்திற்கு தரும் என எதிர் பார்க்க முடியாது. ''நாம் ஏனெனில் அவர்களின் எதிரிகள் அல்லது அவர்களது நாட்டைப் பங்கு போட்டுக் கொள்ள வந்தவர்கள்' என்ற கருத்து இன்று வளர்த்துவிடப் பட்டுள்ளது.

அப்படியாயின் ஆரம்ப கால முஸ்லிம்கள் ஒரு பெரும் சமூகமாக எப்படி வளர்ந்தனர்? அப்போது இத்தகைய பிரச்சனைகள் எழவில்லையா என எவரும் கேட்க முடியும்.

உண்மையில் ஆரம்ப காலத்தில் மட்டுமன்றி மிக அண்மைக்காலம் வரை முஸ்லிம்களுக்கு இத்தகைய நிலை உருவாக வில்லை. காரணம், அவர்கள் தன் வாழ்வைஓட்டுவதற்கும், தன் சமூகவளர்ச்சிக்கும் எவரையும் நம்பி, எவருடைய தயவையும் நாடிஇருக்க வில்லை. அல்லாஹ்வின் மீது தவக்கல் வைத்து, தூயவாழ்வை கடைப்பிடித்தார்கள். இஸ்லாத்தின்அடிப்படையில் ஐக்கியத்தையும், ஊர் வாரியான கட்டுப்பாடான ஜமாஅத் அமைப்பையும், முஸ்லிம் என்ற வகையில் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து, உதவி ஒத்தாசை புரிந்து, நெருக்கமான உறவையும்வளர்த்து வாழ்ந்தார்கள். இன்றும் கூட சிற் சில கிராமங்களில் அதன் சாயலைப் பார்க்க முடியும். அவர்களது அந்த முன்மாதிரி வாழ்வு பலரது உள்ளங்களில் நல்லெண்ணத்தை வளர்த்தது, அதனால் பிரச்சினைகள் அருகியது. எனவே, அதே நல்லெண்ணத்தை வளர்த்து இஸ்லாத்திற்குக் கிடைக்கும் உரிய இடத்தை வைத்துத்தான் நாமும் வாழமுயற்சித்திருக்க வேண்டும். ஆனால், அந்தப் போக்கைவிட்டுவிட்டு இஸ்லாமிய இலட்சியங்களையும் மறந்து சலுகை, விகிதாசாரம் என கையேந்தி வாழப் பழகிவிட்டோம். அதனால் எழுச்சிக்கு பதிலாக வீழ்ச்சியும், முன்னேற்றத்திற்கு பதில் பின்னேற்றமும், உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்கு பதிலாக உள்ள உரிமைகளை இழந்து வாழும் துர்ப்பாக்கிய நிலையும்தான் இன்று உருவாகியுள்ளன.

(வளரும்)

## இஸ்லாத்தின்..

(24-ம் பக்கத் தொடர்ச்சி)

நிறையச் சான்றுகள் உள. ஆனால் ஓரிரு விஷயங்களை மட்டும் நினைவூட்டுகிறோம்.

முஹம்மத் (ஸல்) இஸ்லாமியப் பிரசாரப் பணியில் ஈடுபடுவதற்கு வெகு காலத்திற்கு முன்னரே அவர்கள் உண்மையாளர், நம்பிக்கைக்குரியவர் என மக்களால் அழைக்கப்படலாயினர். இஃது அன்னார் நற்பண்புகளின் உறைவிடம் என்பதை அம்மக்கள் எப்போதோ உணரத்தலைப்பட்டதை எடுத்துக் காட்டுகின்றதல்லவா?

அவர்களுக்கு முதன்முதலாக நபித்துவம் கிடைத்த போது பீதியடைந்து காணப்பட்டனர். அப்போது அவர்களது அருமை மனைவியார், ''தாங்கள் உறவினர்களை அனுசரிக்கிறீர்கள்; பலவீனர்களுக்காகப் பாடுபடுகிறீர்கள்; தேவையுள்ளோருக்காக உழைக்கிறீர்கள்; நன்றாக உபசரிக்கிறீர்கள். உண்மைக்காகவும், நீதிக்காகவும் கஷ்டங்களையெல்லாம் சகித்துக்கொள்கிறீர்கள். ஆகையால், அல்லாஹ் தங்களை ஒருபோதும் வெட்கப்படவிட மாட்டான்'' என தைரியமூட்டினர்.

மனிதப் பண்புகளும், சமூக உணர்வும் இறை தூதர்களின் உன்னதத் தன்மைகள் என்பதை மேற்படி சம்பவங்கள் வாயிலாக அறிகிறோம்.

வெகு ஜனங்களோடு தொடர்புடைய எந்த ஒரு பேரியக்கத்தின் உறுப்பினருக்கும் இத்தகைய தகைமைகள் வாய்க்கப்பெற்றிருந்தால் அவர்கள் எத்திவைக்கும் (நற்) செய்தியை மக்கள் மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்வார்கள் என்பது திண்ணம்.

(இன்ஷா அல்லாஹ் வளரும்)

## நபிவழி----

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

சுட்டிக்காட்டி, ''இது உமது குழந்தை'' என்று கூறுவாள். அதை அவன் மறுக்காமல் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

2. 6. பஃகாயா (பரத்தையர்)

இவர்கள் தம்மை நாடி வரும் எவருடனும் உடலுறவு கொள்ளக்கூடியவர்கள். இவர்களுடைய வீட்டுவாயில்களில் இவர்கள் விலைமாதர்கள் என்பதற்கான அடையாளமாக ஒரு கொடி தொங்கவிடப்பட்டிருக்கும். விரும்பியவர் அங்கு செல்லலாம். அவள் கருவுற நேர்ந்தால் குழந்தை பிறந்த பின்னர், தன்னோடு உறவு கொண்ட அனைவரையும் அழைப்பாள்.[1] அவர்கள் வந்து கூடியபின் குழந்தையின் அங்க அடையாளங்களை ஒத்த அங்கஅடையாளம் உள்ளவரை அக்குழந்தைக்குத் தந்தையாகக் குறிப்பிடுவாள். குழந்தை அவருக்குச் சொந்தமாகிவிடும். அதனை அவரும் மறுக்காது ஏற்றுக் கொள்வார்.

முஹம்மத் (ஸல்) அவர்கள் நபியாக வந்த பின்பு, தற்காலத்தில் நடைமுறையிலுள்ள திருமணமுறை தவிர்க்க பிற முறைகள் அனைத்தையும் தடைசெய்தார்கள். அனுபதிக்கப்பட்ட இந்த முறையும் செல்லுபடியாவதற்கு வலி, ஈஜாப், கபூல், ஷாஹித் போன்ற சில நிபந்தனைகள் பேணப்பட வேண்டும். இந்நிபந்தனைகளைப் பேணிச் செய்யப்படும் திருமணமே, ஓர் ஆணும் - பெண்ணும் உடலுறவு கொள்வதற்கு அல்லாஹ் அனுமதித்துள்ள முறையாகும். திருமணம் இவ்வாறு நிகழ்ந்தால்தான் கணவன், மனைவியருக்கு இஸ்லாம் ஏற்படுத்தியுள்ள கடமைகளும், உரிமைகளும் விதியாகும்.

1. அபூ ஹுரைரா (ரழி) அறிவித்ததாக தாருகுத்னி பதிவு செய்துள்ளார்கள்.

# முஸ்லிம் உலகம் :.....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த பூரண உரிமை ரஷ்யாவில் அல்லது வேறு எந்த கம்யூனிஸ நாட்டிலாவது உண்டா? அப்படி இல்லையென்றால் கம்யூனிஸம் மதத்துக்கு மதிப்பளித்துள்ளது என்ற கருத்தை எவ்வாறு ஏற்க முடியும்?

உண்மையென்னவெனில், ரஷ்யாவிலும் ஏனைய கம்யூனிஸ நாடுகளிலும் மிகவும் தந்திரமான முறையில் மதங்களை நசுக்கும் வேலைகள் நடைபெற்று வருவது மறுக்க முடியாத உண்மையாகும்.

### மதங்களை நசுக்கும் ரஷ்யா!

ரஷ்யாவில் கம்யூனிஸ ஆட்சி உருவான ஆரம்ப காலத்தில் மதங்களுக்கு எதிராக நேரடிப் போர் தொடுத்த போதிலும் இப்பொழுது மறைமுகமாகவே அந்த நாசகார வேலை நடைபெற்று வருகிறது.

இந்த தந்திரப்போக்குக்கு நல்லதொரு உவமைக் கதையைக் கூறலாம்.

ஒரு மனிதன்; உங்களுக்குத் தேவையில்லாதவன்; அவன் உங்கள் முயற்சிகளுக்கு எதிரானவன்என நீங்கள் கருதுகிறீர்கள்; எனவே அவன்வாழும் காலமெல்லாம் உங்களுக்கு நஷ்டம்தான் என நீங்கள் நம்பி அவனை கொன்றுவிடத் தீர்மானிக்கிறீர்கள். இப்பொழுது அவனை நேரடியாகவே கத்தியால் குத்தியோ, பொல்லால் அடித்தோ, துப்பாக்கியால் சுட்டோ கொன்றால் நீங்கள் நீதிமன்றம் செல்ல வேண்டியேற்படும்; தண்டனை வழங்கப்படுவீர்கள்; உங்கள் செல்வாக்கு, மானம், மரியாதை எல்லாம் காற்றில் பறந்துவிடும். எனவே, அவனை கொல்வதற்கு மற்றொரு முறையைக் கையாள்கிறீர்கள். அதாவது, உங்களுக்குள்ள செல்வாக்கைப் பயன்படுத்தி, அவன் வாழ்வதற்கு அவசியமான சத்துணவுகள் அவனுக்குக் கிடைக்காதவாறு மிகவும் தந்திரமாக நடவடிக்கை எடுத்து வருகிறீர்கள். அதனால் அவன் பசித்து, வாட்டமுற்று, நலிந்து, நோய் வாய்ப்பட்டு காலக்கிரமத்தில் இறந்து விடுகிறான். இதற்கு உலகம் வழங்கும் தீர்ப்பு 'இயற்கை மரணம்!', பசியால் செத்தான்!'' என்பனவாகும். இதனால் உங்களுக்கு எந்தப் பாதகமும் இல்லாது, உங்கள் செல்வாக்குக்கு பங்கம் வராது உங்கள் தேவை நிறைவேறி விடுவதைக் காண்கின்றீர்கள்.

இதே போன்றுதான் கம்யூனிஸ உலகம் மதங்களை அழிக்க நினைத்து ஆவன செய்து வருகிறது.

### அரசியல் சட்டம்:

1977 அக்டோபர் 7ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட ரஷ்ய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 7ஆவது அத்தியாயம் 52ஆவது சரத்து இவ்வாறு கூறுகின்றது.

''சோவியத் யூனியனில் வாழும் மக்களுக்கு மனச்சாட்சிச் சுதந்திரம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி அவர்கள் மதத்தை அனுஷ்டிக்கவோ, அனுஷ்டிக்காது இருக்கவோ முடியும்: மதவழிபாடுகளில் ஈடுபடவோ நாத்திகப் பிரச்சாரம் செய்யவோ முடியும். ஆனால் மதத்தின் பெயரால் பகைமை உணர்வுகளைத் தூண்டுவது தடை செய்யப்பட்டுள்ளது. அத்துடன் அரசு விவகாரங்களிலிருந்து வழிபாட்டுத் தளங்களும் (பள்ளிவாயல்களும்)அவற்றிலிருந்து கல்விக்கூடங்களும் தனிமைப் படுத்தப் பட்டுள்ளது''.

இந்த சட்டத்தை ஒருவர் பலமுறை ஆழமான சிந்தனையுடன் படித்துப் பார்த்தால் 'மதங்களை ஒழித்துக்கட்டவேண்டும் என்றுதான் இங்கு கூறப்படுகிறது' என்பதை நன்கு உணர்ந்துகொள்ள முடியும். இது நாம் மேலே கூறிய உவமைக்கதையை அப்படியே தழுவி நிற்கின்றது என்பதை யார்தான் மறுக்க முடியும்?

மேற்கூறும் சட்டத்தில் மனச்சாட்சிச் சுதந்திரமும் வழிபாட்டுச் சுதந்திரமும் தரப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. ஆனால் மதப் பிரசாரத்துக்கு அனுமதியில்லை; மதக்கருத்துக்கள் கல்விக் கூடங்களில் போதிக்கக் கூடாது; அரசியல் விவகாரங்களில்மதம் தலையிடக்கூடாது. இது ஒரு அர்த்தமில்லாத சுதந்திரம் என்பதை சாதாரண புத்தியுள்ளவன் கூட உணர்ந்து கொள்வான், இது வாயைக் கட்டிவிட்டு உணவைக் கொடுப்பது போன்ற செயலாகும். மதப் போதனையின்றி, பிரசாரம் இன்றி எப்படி அது உயிர் வாழும்?

இதே வேளையில், இதே சட்டம் நாத்திகப் பிரச்சாரத்திற்கு இடமளிக்கிறது. நாத்திகப் பிரச்சாரம் என்றால் என்ன? இறை மறுப்பு, மத நிராகரிப்பு என்பவற்றின்மறு பெயரே ''நாத்திகம்'' எனவே நாத்திகப் பிரச்சாரம் வேகமாக வளர்ச்சியுறும் போது மதங்கள் தாமாகவே செத்து விடும்.

### நாத்திகத்தைத் தழுவும் ரஷ்யர்:

திட்டமிட்ட இந்த பயங்கர சதியின் விளைவு என்ன என்பதை ரஷ்யாவில் சுற்றுப் பயணம் செய்துவிட்டு வந்த டாக்டர் க. இந்திரகுமார் அவர்கள் தமது ''புதுயுகம் கண்டேன்'' நூலில் விவரிக்கின்றார்.

'கம்யூனிஸத்தத் துவத்தைப் படித்தறிந்து, அதில் பரிபூரண நம்பிக்கை ஏற்பட்ட பின், சோவியத் மக்கள் தாமாகவே தேவாலய வழிபாடுகளை நிறுத்திக் கொள்கின்றனர். இவர்களுள் இளைஞர்களும், நடுத்தர வகுப்பினரும் பெருமளவில் அடங்குவர்''

(பக்கம் 7)

இதன்படி, கம்யூனிஸ நாடுகளில் மதச்சுதந்திரம் அளிக்கப்பட்டுள்ளதாகக் கூறுவது வெறும் அபத்தமாகும். அத்தகைய கூற்றுக்களில் எதுவித உண்மையுமில்லை.

### முதலாவது சவால்:

இவற்றினை ஆராயும்போது இன்று கம்யூனிஸ அணியிலிருந்து முஸ்லிம் உலகம் எதிர்நோக்கியுள்ள முதலாவது பிரச்சினை கொள்கை சம்பந்தப்பட்டதாகும். முஸ்லிம் உலகத்தைப் பொறுத்தமட்டில் இது ஒரு முதலாவது பிரச்சினையென கொள்ளப்படுவது ஏனென்றால். முஸ்லிம்களது அனைத்து விஷயங்களும் அவர்கள் ஏற்கும் கொள்கையிலிருந்து - கருத்திலிருந்து தான் ஆரம்பிக்கின்றது. அந்தக் கருத்தைக்கொண்டே ஈமான் (விசுவாசம்) உருவாகின்றது. கருத்து இல்லா விட்டால் ஈமான் இல்லை.

இன்று 'மதம்' எனச்சொல்லப்படும் பொதுவான சொல்லுக்குள் அடங்குவதல்ல இஸ்லாம். அதற்கென தனியான நம்பிக்கைகள், செயற்முறைகள் உண்டு. வாழ்வில் சந்திக்கும் ஒவ்வொரு நிகழ்வுகளிலும் ஒரு முஸ்லிம் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும்என்றவிதிமுறைகளுண்டு. ஏனைய மதங்கள், கொள்கைகள், கோட்பாடுகள் ''அசிங்கமானது, அற்பமானது, பேசக் கூடாதது'' என ஒதுக்கிவிட்ட விடயங்கள் சம்பந்தமாகக் கூட இஸ்லாம் தன்கருத்தை செலுத்தி, விளக்கம் அளித்து, விதிமுறைகளையும் தந்துள்ளது. ஒட்டு மொத்தமாக இஸ்லாம் சொல்லாதது எதுவுமேயில்லை.

அடுத்து, இஸ்லாம் எதையும் சொல்லோடு நிற்காது, அதற்கு பலமாக முன்மாதிரிகளையும் நபிமார் மூலமாக-குறிப்பாக ரசூல் (ஸல்)அவர்கள் மூலமாக தந்துள்ளது. அத்துடன் இஸ்லாமிய நெறியினை முழுமையாக பின்பற்றி ஏற்றம் பெற்ற ஒரு சமுதா

(27ம் பக்கம் பார்க்க)

# அறிவுச் சுரங்கம் - 11

1) "முஹம்மத் (ஸல்) அவர்கள் அகில உலக மக்களுக்கும் அல்லாஹ்வின் தூதர்" என்ற கருத்தையுணர்த்தும் அல்குர்ஆன் வசனம் ஒன்றின் இலக்கத்தைக் குறிப்பிடுக.
2) முஸ்லிம்களின் கொடியை பச்சைநிறத்தில் அமைத்த கலீபாவின் பெயர் என்ன?
3) முதலாம் ஹிஜ்ரத் மேற்கொள்ளப்பட்ட அபிஸீனிய நாடு இப்பொழுது என்ன பெயர் கொண்டு அழைக்கப்படுகிறது?
4) "நாற்பய நன்னூல்" என்ற ஹதீஸ் தொகுப்பு நூலில் எத்தனை ஹதீஸ்கள் உள்ளன?
5) "மௌலானா மௌதூதி (ரஹ்) அவர்கள் தூக்கிலிடப்பட வேண்டும்" என்று நீதிமன்றம் தீர்ப்பளிக்கப்பட காரணமாக அமைந்த நூலின் பெயர் என்ன?

விதிகள்; இக்கேள்விகளுக்கான விடைகளை மட்டும் தபால் அட்டையில் எழுதியனுப்ப வேண்டும். கேள்விகளை எழுதத் தேவையில்லை.

அனுப்புபவரின் பெயர், முகவரி என்பன தெளிவாக எழுதப்பட வேண்டும்.

கீழே காணப்படும் முகவரியை வெட்டி ஒட்டப்பட்டு வரும் தபால் அட்டைகள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.

சரியான விடைகளை எழுதியோரில் தேர்ந்தெடுக்கப்படும் மூவருக்குப் பரிசு வழங்கப்படும்.

முதல் பரிசு: ரூபா 17.50 பெறுமதியான புத்தகம்.
இரண்டாம் பரிசு; ரூபா 10.00 பெறுமதியான புத்தகம்.
மூன்றாம் பரிசு: ரூபா 5.00 பெறுமதியான புத்தகங்கள்.

இப்போட்டியில் நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

இன்ஷா அல்லாஹ், சரியான விடைகளுடன் வெற்றி பெற்றோரின் பெயர், முகவரி என்பனவும் அல்ஹஸனாத் இதழில் பிரசுரிக்கப்படும்.

முடிவு திகதி 30-1 83

### அறிவுச் சுரங்கம் — 10ன் முடிவுகள்

முதற் பரிசு: யூ. எல். அப்துல் அஸீஸ்,
கல்பனுவ, மொன்னாகுளம்.

இரண்டாவது பரிசு: ஏ. ஜவ்பர் சாதிக்,
கபூரிய்யா அரபிக் கல்லூரி,
மஹரகம.

மூன்றாவது பரிசு: ஏ. அஹ்மத் நவ்பர்,
ஜெயமாவத்த ரோட்,
வத்தல்பொலை, பாணந்துறை.

**சரியான விடைகள்:**

1) கல்லெறிந்து கொல்லுதல்
2) சகோதரர் மிராஜுதீன்
3) யதரப்பஸ்ன
4) உஸாமா (ரலி) அவர்கள்
5) அறபி பாஷா

"ARIVUCH CHURANGAM-11"
"AL HASANAATH"
204/1, Dematagoda Road,
COLOMBO-9.

## முஸ்லிம் உலகம்--

(25-ம் பக்கத் தொடர்ச்சி)

யத்தையும் வைத்திருக்கின்றது.

### ஒரு முஸ்லிம் கம்யூனிஸ்டாக முடியாது

இந்த நிலையில், இஸ்லாத்தை ஏற்று முஸ்லிம் என தன்னைச் சொல்லிக்கொள்ளும் ஒரு தனி மனிதனோ, கூட்டமைப்போ, நாடொன்றோ அல்லது முழு உலகமுமோ அதற்கு நேரெதிரான கொள்கையொன்றை ஏற்கவே முடியாது. அது குஃப்ரிய்யத் என இஸ்லாம் வர்ணிக்கின்றது.

இந்த வகையில் இஸ்லாமும் கம்யூனிஸமும் ஒரே இடத்தில், ஒரே உள்ளத்தில் இருக்கவே முடியாது. ஏனெனில், இஸ்லாம் இறை நம்பிக்கையை அடித்தளமாகக் கொண்ட சமுதாயமொன்றை கட்டியெழுப்ப விழைக்கின்றது. கம்யூனிஸமோ நாத்திகத்தை இறை மறுப்பை அடிப்படையாகக் கொண்டதொரு சமுதாயத்தை உருவாக்க முயற்சிக்கின்றது. இவை இரண்டும் சிந்தனை, செயற்பாடு, எதிர்பார்ப்பு என்பனவற்றால் எதுவிதத் தொடர்புமற்ற முறையில் வேறுபட்டுள்ள இரு துருவங்களாகும்.

இப்படிக் கூறுவதைக்கொண்டு உலகுக்குப் பொருத்தமானவை முதலாளித்துவம் அல்லது மேற்குலக ஜனநாயகம் எனக் கருதி விடக்கூடாது. அவைகளும் பிழையானவையேயாகும்.

இவ்விளக்கங்களின்படி, ஒன்றின் வளர்ச்சி மற்றொன்றுக்குப் பாதகமாகவே அமையும். கம்யூனிஸம் வளர்ச்சியுற்று உலக ஆதிக்கத்தைப் பெறுமானால், அது இஸ்லாத்திற்கும், முஸ்லிம்களுக்கும் பாதகமாக அமையும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. ரஷ்யாவிலும் சீனாவிலும் நடந்துள்ள - நடந்து வரும் பல விடயங்களும், அவற்றின் அணியில் விழுந்துவிட்ட சில நாடுகளின் நிலைமைகளும் இதனைத் தெளிவுபடுத்துகின்றன.

### போராட்டம் எத்தகையது:

மௌலானா அபுல் ஹஸன் அலி நத்வி அவர்கள் இந்நிலைமையை இப்படி விவரிக்கின்றார்கள்:-

"இஸ்லாத்தின் முன்பு தற்பொழுதுள்ள உண்மையான பிரச்சினை ஒழுக்க வீழ்ச்சியன்று; தொழுகையில் அசிரத்தையாக இருப்பதுமன்று; மதக்கிரியைகளை புறக்கணிப்பதன்று; பிற இனத்தினரைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றுவதுமன்று. இவை மிகமுக்கியமான விடயங்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், இஸ்லாத்தின் ஆணிவேரையே ஆட்டங்காணச் செய்யும் இமாலயப் பிரச்சினையாக உருவெடுத்திருப்பது மத நம்பிக்கைக்கும் மத நிராகரிப்புக்கும் இடையேயுள்ள போராட்டமாகும். இஸ்லாம்தொடர்ந்தும் ஒரு சக்தியாகவிளங்கப் போகின்றதா? அன்றி, பழம் புடவை போன்று தூக்கி எறியப்படப் போகின்றதா? என்பதாகும்".

எனவே, முஸ்லிம்கள் ஒவ்வொருவரும் நன்கு சிந்துத்து செயல்பட ஆவன செய்ய வேண்டும்.

அடுத்து கம்யூனிஸ உலகின் இராணுவ ஆக்கிரமிப்புப் பற்றி ஆராய்வோம்.

இன்ஷா அல்லாஹ்

With Best Compliments from:

# PENINSULA TRADING COMPANY

IMPORTERS OF HARDWARE, ELECTRICAL & ELECTRONIC EQUIPMENT AND SUNDRY GOODS.

'O Believers, Fear Allah as he should be feared and see that you do not die save as true Muslims'

(Al Quran 3 : 102)

35, 3rd CROSS STREET,
COLOMBO-11.
SRI LANKA.

Phone: 24443, 35884, 549159 Cable: PEE TEE CEE Telex: KHAIRAZ 21792 CE

STEP IN AT

# PARKER TRADERS

for

RADIOS, TWO IN ONE CASSETTES, WRIST WATCHES, WALL CLOCKS, TABLE & PEDESTAL FANS AND ALL KINDS OF GIFT ITEMS AT

COMPETITIVE PRICES
WHOLESALE INQUIRIES SOLICITED

PARKER TRADERS

160, KEYZER STREET,
COLOMBO-11.

Phone: 26657, Res: 580364

Printed at I. P. C. Printing Press, 320, N. M. M. Ishak Mawatha, Colombo-9 for Islamic Publication Centre, 204/1, Dematagoda Road, Colombo-9.
Registered as a Newspaper at the G. P. O. Sri Lanka under No. QB 8907/73